# உதயன்

Uthayan - A lively National Tamil Daily

சுடர்: 30 கதிர்: 017 வள்ளுவர் ஆண்டு: 2045 கார்த்திகை 27, சனிக்கிழமை 13.12.2014

**வானிலை**
மழை பெய்வதற்கான சாத்தியம் அதிகம். மாலை வேளை மழை பெய்யக் கூடும்.

# ஆட்சி மாற்றமே தமிழர் விருப்பு

## கூட்டமைப்பின் சிறப்புக் கூட்டத்தில் மாகாண சபை மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவிப்பு. எனினும் கூட்டமைப்பு இறுதி முடிவு எதுவும் எடுக்கவில்லை.

யாழ்ப்பாணம், டிசெம்பர் 13
ஆட்சி மாற்றம் ஒன்றையே தமிழ் மக்கள் விரும்புகின்றார்கள் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசியல் கூட்டத்தில் கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் மக்கள் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்ற விடயத்தில் கூட்டமைப்பு அவசரப்பட்டு எந்த முடிவையும் அறிவிக்கக்கூடாது என்றும் கட்சித் தலைமையை நாடாளுமன்ற உறுப்பினர்களும் மாகாண சபை அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்களும் வலியுறுத்தினர்.
வடக்கு மாகாண சபை தொடர்பிலும், ஜனாதிபதித் தேர்தல் தொடர்பிலும் ஆராய்வதற்காக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற மற்றும் மாகாண சபை உறுப்பினர்களுக்கு இடையிலான கூட்டம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மாலை சுன்னாகம் பிரதேச சபை மண்டபத்தில் கூட்டப்பட்டது.

பக்.25

## ஐ.நாவின் விசாரணைக்கு ஒத்துழைப்பது அவசியம்

ஐ.நா. மேற்கொண்டு வரும் விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும், சாட்சிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறும் பிரிட்டன் மீண்டும் வலியுறுத்தியுள்ளது.
பிரிட்டன் நாடாளுமன்ற பிரபுக்கள் சபையில் நடைபெற்ற குறுகிய நேர விவாதத்தின்போதே இவ்வாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

பக்.22

## அச்சுறுத்தலால் ஹிருணிகா தப்பியோட்டம்!



யாழ்ப்பாணம், டிசெ. 13
மேல்மாகாண சபை உறுப்பினர் ஹிருணிகா பிரேமசந்திர, தனது தாயுடன் வெளிநாடொன்றுக்குப் பயணமாகியுள்ளார்.

பக்.26

## தயாராகிறது கறுப்புப் பதிவேடு

தேர்தல் விதிமுறைகளை மீறிச் செயற்படும் அரச மற்றும் பாதுகாப்பு அதிகாரிகள் வெளிநாடு செல்ல முடியாத நிலை ஏற்படும் என்று எச்சரித்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர. அவ்வாறான அதிகாரிகள் பற்றிய விவரங்களைப் பதிவு செய்து வெளிநாடுகளுக்கு அனுப்பவுள்ளோம் என்றும் அவர் கூறியுள்ளார்.

பக்.22



இலங்கை விமானப் படைக்குச் சொந்தமான அன்ரனோவ் – 32 ரக விமானம் நேற்று அதிகாலை அத்துருகிரியவில் வீழ்ந்து நொருங்கியது. இந்த விபத்தில் அதில் பயணித்த நால்வர் உயிரிழந்தனர். ஒருவர் கடும் காயங்களுடன் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

பக்.24

## நிறை குறைந்த பாண் விற்பனை; 9,000 ரூபா அபராதம்

தென்மராட்சி, டிசெ.13
நிறை குறைந்த பாண் விற்பனை செய்த கொடிகாமம் வர்த்தகர் ஒருவருக்கு சாவகச்சேரி நீதிமன்றம் 9 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது.
குறித்த வர்த்தகருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில், அவர் குற்றத்தை ஒப்புக் கொண்டார். அதையடுத்தே அவருக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.
யாழ். மாவட்டச் செயலக பாவனையாளர் பாதுகாப்பு அதிகார சபையினர் கொடிகாமம் பகுதியில்

பக்.25

## ராணுவத் தேவைக்கு மிருசுவில் காணி; மேல் நீதிமன்றில் விசாரணை ஆரம்பம்

யாழ்ப்பாணம், டிசெ.13
மிருசுவில், ஏ–9 வீதியருகே அமைந்துள்ளதனியாருக்குச்சொந்தமான 52 ஏக்கர் காணியை இராணுவத் தேவைகளுக்காகச் சுவீகரிப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து தாக்கல் செய்யப்பட்ட வழக்கை கொழும்பு மேல் நீதிமன்றம் விசாரணைக்கு ஏற்றுக் கொண்டது. எதிர் மனுதாரர்களுக்கு அழைப்பாணையும் அனுப்பியுள்ளது.
தென்னைச் செய்கை மேற்கொள்ளப்பட்ட அந்தக் காணியை கையகப்படுத்திய இராணுவத்தினர்,

பக்.25

## 25 ஆண்டுகளின் முன்னர் தொலைந்தவர் திரும்பினார்



வலி .வடக்கு, டிசெ.13
கடந்த 25 வருடங்களாக எங்கென்று தெரியாத நிலையில், சிறைவாசத்தை அனுபவித்த சுன்னாகத்தைச் சேர்ந்த எஸ்.வைரவநாதன் நேற்று உறவினர்களால் சொந்த

பக்.25

## மாற்று அரசியல் பற்றியே தமிழர் சிந்திக்க வேண்டும்

### புதிய ஜனநாயக மாக்ஸிச லெனினிசக் கட்சி வலியுறுத்துகின்றது

யாழ்ப்பாணம், டிசெ. 13
சிங்கள – பௌத்த பேரினவாதத்தின் பக்கமே பிரதான இரு வேட்பாளர்களும் நிற்கின்றனர். தமிழ் பேசும் மக்கள் தரகு முதலாளித்துவத்தையும், பேரினவாதத்தையும், ஏகாதிபத்தியத்தையும் எதிர்த்து நிற்கக் கூடிய மாற்று அரசியல் தொடர்பில் சிந்திக்க வேண்டும் – இவ்வாறு வலியுறுத்தியுள்ளது புதிய ஜனநாயக மாக்ஸிச லெனினிசக் கட்சி.

பக்.25

## இரணைமடு குடிதண்ணீர் திட்டம் கைவிடப்பட்டது

யாழ்ப்பாணம், டிசெ. 13
இரணைமடுக் குளத்திலிருந்து யாழ். குடாநாட்டுக்கு குடிதண்ணீர் கொண்டு வரும் திட்டம் கைவிடப்பட்டுள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கியால் அந்த திட்டத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதி இரட்டிப்பாக்கப்பட்டு மூன்று வேறு திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.
மாற்றுத் திட்டங்களின் அடிப்படையில் இரணைமடுக்குளத்தின் அணைக்கட்டுக்களைப் புனரமைக்கும் நடவடிக்கை எதிர்வரும் ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்தார்.

பக்.02

## இந்திய றோலர்களுக்கு எதிராக போராட்டம்.

இந்திய றோலர்கள் இலங்கைக் கடலில் மீன்பிடிப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து முல்லைத்தீவில் பேரணி நடத்தப்பட்டது.

பக்.05

# இரணைமடு குடிதண்ணீர் திட்டம் கைவிடப்பட்டது

## மாற்றுத் திட்டங்களுக்கு நிதி வழங்க ஆசிய அபிவிருத்தி வங்கி இணக்கம்

யாழ்ப்பாணம், டிசெ. 13

இரணைமடுக் குளத்திலிருந்து யாழ். குடாநாட்டுக்கு குடிதண்ணீர் கொண்டு வரும் திட்டம் கைவிடப்பட்டுள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கியால் அந்த திட்டத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதி இரட்டிப்பாக்கப்பட்டு மூன்று வேறு திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன. மாற்றுத் திட்டங்களின் அடிப்படையில் இரணைமடுக்குளத்தின் அணைக்கட்டுக்களைப் புனரமைக்கும் நடவடிக்கை எதிர்வரும் ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்தார்.

"இரணைமடுக் குளத்தில் இருந்து யாழ்ப்பாணத்துக்குக் குடிதண்ணீர் வழங்குவதாக இருந்தால் மாத்திரமே இரணைமடுக் குளத்தைப் புனரமைக்க நிதி ஒதுக்கீடு செய்யமுடியும் என்றிருந்த நிலை மாற்றப்பட்டு, எந்தவித நிபந்தனைகளும் இல்லாமல் இரணைமடுக்குளம் அணைக்கட்டைப் புனரமைக்க ஆசிய அபிவிருத்தி வங்கி கடனுதவி வழங்க முன்வந்திருக்கிறது என்று வடமாகாண விவசாய, கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம், நீர்வழங்கல், உணவு வழங்கல், சுற்றாடல் மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் பொ.ஐங்கரநேசன் நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இரணைமடுவிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு குடிதண்ணீர் கொண்டு வரும் திட்டம் கடந்த சில மாதங்களாகவே சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது. குறிப்பாக இரணைமடுக் குளத்தில் விவசாயத்துக்குப் போதியளவு நீர் இல்லாமல் யாழ்ப்பாணத்துக்கு குடி தண்ணீருக்காக அதனை எடுத்துச் செல்வதை அங்குள்ள விவசாயிகள் எதிர்த்தார்கள். இதனையடுத்து இந்த திட்டத்தை முன்னெடுக்க முடியாத நிலைமை ஏற்பட்டது.

இதனால் ஆசிய அபிவிருத்தி வங்கியுடன், வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தலைமையிலான குழுவினர் சந்திப்புக்களை நடத்தி, மாற்றுத் திட்டங்கள் ஆராயப்பட்டன.

அதில் இரணைமடுக்குளத்தைப் மறுசீரமைத்துப் பலப்படுத்துவது, கடல் நீரிலிருந்து குடிதண்ணீர் பெறுவது, யாழ்ப்பாணத்தில் குடிதண்ணீர் மற்றும் கழிவகற்றல் ஆகிய மூன்று திட்டங்கள் ஏற்கப்பட்டன. இதற்கான வாய்மொழி மூலமான ஒப்புதலை ஏற்கனவே ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்கியிருந்தது என்று வடமாகாண அமைச்சு தெரிவித்திருந்தது. இந்த நிலையில் அது தொடர்பிலான உத்தியோக பூர்வ கடிதம், வடக்கு மாகாண விவசாய அமைச்சுக்கு நேற்று அனுப்பப்பட்டுள்ளது.

ஆரம்ப திட்டத்துக்கு 164 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. தற்போது மாற்றீட்டுத் திட்டத்துக்கு 390 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று அமைச்சர் ஐங்கரநேசன் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அந்தஅறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மாற்றீட்டுத் திட்டத்தில் இரணைமடுக் குளத்தின் அணைக்கட்டுக்கள் புனரமைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இது நீர்பாசனத் திணைக்களத்தினால் எதிர்வரும் ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளது. இதற்காக முன்னர் 11 மில்லியன் அமெரிக்க டொலர் ஒதுக்கப்பட்டிருந்த நிலையில் தற்போது 23 மில்லியன் அமெரிக்க டொலர் ஒதுக்கப்பட்டுள்ளது.

இரண்டாவதாக யாழ். குடாநாட்டுக்கு கடல் நீரை குடிதண்ணீராக்கி வழங்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. மருதங்கேணிப் பிரதேசத்தில் இருந்து கடல்நீரைக் குடிதண்ணீராகச் சுத்திகரித்து, பளையிலிருந்து குடாநாடு முழுவதும் விநியோகிக்கப்படவுள்ளது. இதற்கு மேலதிகமாக யாழ். மாநகர சபை எல்லைக்குள் கழிவகற்றும் நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

இதேவேளை– சுன்னாகம் பிரதேசத்தில் கிணறுகளில் கழிவு ஓயில் கலந்துள்ளமையையும் ஆசிய அபிவிருத்தி வங்கி கணக்கில் எடுத்துள்ளது. இது தொடர்பிலான ஆய்வுகளுக்கும், சுத்திகரிப்பு முறைமைக்கும் நிதி ஒதுக்கியுள்ளது. அத்துடன் கடல்நீரை குடிதண்ணீராக்கி விநியோகிக்கும் திட்டத்தினுள் சுன்னாகம் பிரதேசத்தையும் உள்ளடக்கியுள்ளது. (உ–5)

# வடக்கின் நட்சத்திரங்களுக்கு நேற்று வர்ண விருதுகள்











யாழ்ப்பாணம், டிசெ.13

வடக்கு மாகாண விளையாட்டுத் துறையினரால் நடத்தப்பட்ட 2014 ஆம் ஆண்டுக்கான வர்ண விருது விழா நேற்று சாவகச்சேரி பொன் விழா மண்டபத்தில் கல்வி அமைச்சின் செயலாளர் சத்தியசீலன் தலைமையில் இடம்பெற்றது. முதல் நிகழ்வாக மறைந்த ஊர்காவற்றுறை விளையாட்டு உத்தியோகத்தர் சதீஸ் கண்ணாவுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. தொடர்த்து 2 நிமிட மௌன வணக்கம் செலுத்தப்பட்டது. விளையாட்டு உத்தியோகத்தர் சதீஸ்கண்ணாவுக்கு இந்த வர்ண விருது நிகழ்வு சமர்ப்பணம் செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டதை தொடர்த்து நிகழ்வு ஆரம்பமானது.

சிறப்பு நிகழ்வாக 2014 ஆம் ஆண்டுக்கான வர்ண விழா தொடர்பான நூலை கல்வி அமைச்சர் த.குருகுலராஜா வெளியீட்டு வைக்க அதனைப் பிரதம விருத்தினாராகக் கலந்து கொண்ட வடக்கு மாகாண முதலைச்சர் க.வி.விக்னேஸ்வரன் பெற்றுக்கொண்டார்.

முதலமைச்சரினால் முதல்முறையாக அறிமுகம் செய்யப்பட்ட வடக்கின் நட்சத்திர விருதை இந்தியாவின் கோவாவில் இடம்பெற்ற 23 வயதுப் பிரிவினருக்கான விளையாட்டுநிகழ்வு,பலஸ்தீனத்தில் இடம்பெற்ற 23 வயதுப் பிரிவினருக்கான சர்வதேச உதைபந்தாட்டப் போட்டி, இந்தோனேஷியாவில் இடம்பெற்ற 23 வய்துப் பிரிவினருக்கான சர்வதேச உதைபந்தாட்டப் போட்டி ஆகியவற்றில் பங்குபற்றிய மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த எஸ். கொட்வின் பெற்றுக்கொண்டார்.

சர்வதேசமட்ட போட்டிகளிலும், தேசிய மட்டப் போட்டிகளிலும் பங்குபற்றி வெற்றியீட்டிய 9 வீர, வீராங்கனைகள் வடக்கின் வர்ண விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்டப் போட்டி, தேசிய மட்ட கனிஷ்ட, சிரேஷ்ட பிரிவுப் போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டிய வீர, வீராங்கனைகள், அவர்களை பயிற்றுவித்த பயிற்றுநர்கள் ஆகியோரும் கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வுக்கு வட மாகாண சபை உறுப்பினர்களான இ.ஆனல்ட், சயந்தன், சிவயோகன், கஜதீபன், சுகிர்தன், அரியரெட்ணம், சவகச்சேரி நகர சபைத் தவிசாளர் இ.தேவசாகயம்பிள்ளை, வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் இரஜேந்திரன் மற்றும் விளையாட்டுத்துறை, கல்வித்துறை அதிகாரிகள், அதிபர்கள் என்ப பலரும்கலந்துகொண்டனர். (த–23–86)

## விளையாட்டு அலுவலர்கள் அதிருப்தி

யாழ்ப்பாணம், டிசெ. 13

கடந்த செவ்வாய்க்கிழமை காலமான ஊர்காவற்றுறை விளையாட்டு உத்தியோகத்தர் சு.சதீஸ் கண்ணாவின் இறுதிக்கிரியைகள் நேற்று இடம்பெற்ற வேளை வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் வர்ண விருதுகள் வழங்கும் நிகழ்வு நடத்தப்பட்டமைக்கு யாழ்.மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர்கள் கடும் அதிருப்தி வெளியிட்டுள்ளனர். இந்த நிகழ்வை ஒத்திவைக்குமாறு தாம் கோரிய போதும் அது குறித்து வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களம் கவனம் செலுத்தவில்லை என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

காலமான சதீஸ் கண்ணாவின் இறுதிக்கிரியைகள் நேற்று இடம்பெற்றன. இதேநேரம் வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் வர்ண விருதுகள் வழங்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

சக உத்தியோகத்தரை இழந்த மனவேதனையில்தாம்இருந்த வேளை இந்த கொண்டாட்ட நிகழ்வு நடத்தப்பட்டமை வேதனையளிக்கிறது என்று அவர்கள் நேற்று உதயனிடம் கூறினர். இதனால் இந்த நிகழ்வில் தாம் பங்கேற்க முடியவில்லைஎன்றும்விளையாட்டு உத்தியோகத்தர்கள் குறிப்பிட்டனர். (த)

# ஜனரஞ்சகம்



## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** எதிர் பாலினத்தாரால் லாபம் கிடைக்கக் கூடும். மற்றவர்களுக்கு உதவிகள் செய்ய நேரிடும். பணவரத்து கூடும். வீண் அலைச்சல் திடீர் கோபம் உண்டாகலாம்.

**இடபம்:** மதிப்பும், அந்தஸ்தும் உயரும். நீண்ட நாள்களாக இழுபறியாக இருந்தவை நல்லபடியாக முடியும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் சில விடயங்களை தவறாக புரிந்து கொண்டு சங்கடப்பட வேண்டி இருக்கும்.

**மிதுனம்:** வாக்குவன்மையால் நன்மை ஏற்படும். குடும்பத்தில் இருந்த குழப்பங்கள் தீரும். மறைமுக எதிர்ப்புகள் நீங்கும். மற்றவர்களுக்குஉதவி செய்வதால்வீண் அலைச்சல்உண்டாகலாம். காரிய வெற்றி பணவரவு எதிர்பார்த்தபடி இருக்கும்.

**கடகம்:** உங்களின் சாமர்த்தியமான செயல்களால் மற்றவர் மனதில் இடம் பிடிப்பீர்கள். உங்கள் வேலைகளில் மட்டும் கவனம் செலுத்துவது நன்மையைத் தரும். எதிலும் மிகவும் கவனமாக ஈடுபடுவது நன்மை தரும்.

**சிங்கம்:** துணிச்சல் உள்ளதால் எதைப் பற்றியும் முன்பின் யோசிக்காமல் செயல்களில் இறங்கி விடுவீர்கள். தேவையற்ற இடமாற்றம் உண்டாகலாம். உத்தியோகத்தில் இருப்பவர்கள் எந்த ஒரு வேலையையும் செய்து முடிப்பதில் வேகம் காட்டுவார்கள்.

**கன்னி:** சகோதரர்கள் மூலம் உதவி கிடைக்கும். உறவினர்கள் வருகை இருக்கும் அதே நேரத்தில் அவர்களுடன் வாக்கு வாதம் செய்வதை தவிர்ப்பது நல்லது. குடும்பத்தில் மனம் விட்டு பேசுவதன் மூலம் கருத்து வேற்றுமை வருவதை தவிர்க்கலாம்.

**துலாம்:** பயன்தரும் காரியங்களில் ஈடுபடுவீர்கள். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். உயர்ந்த அந்தஸ்தில் இருப்பவர்கள் மூலம் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும்.

**விருச்சிகம்:** தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்களில் திடீர் நெருக்கடி ஏற்பட்டு நீங்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள்எந்தவேலையைசெய்யும்முன்பும்அதுபற்றிஅதிகம் யோசிப்பார்கள். சிலருக்கு புதிய வேலையும் கிடைக்கலாம்.

**தனுசு:** துணிச்சலுடன் ஈடுபட்டு காரிய வெற்றி காண்பீர்கள். வாக்கு வாதத்தைத் தவிர்ப்பது நன்மை தரும். வீண் மனக்குழப்பம் ஏற்பட்டு நீங்கும். மற்றவர்களுக்கு உதவபோய் வீண் பிரச்சினையில் சிக்கிக் கொள்ளலாம். கவனமாக இருப்பது நல்லது.

**மகரம்:** திடீர் கோபம் ஏற்படும். தேவையற்ற வீண் செலவுகளும் உண்டாகும். ஆன்மிக எண்ணம் ஏற்படும். விருப்பமான நபரை சந்திப்பதன் மூலம் மனதுக்கு மகிழ்ச்சி ஏற்படலாம்.

**கும்பம்:** உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு கூடுதல் பணிச்சுமையும், வீண் அலைச்சலும் உண்டாகும். கவனமாக வேலைகளைச் செய்யாவிட்டால் மேலதிகாரிகளின் அதிருப்திக்கு ஆளாக நேரிடலாம்.

**மீனம்:** உங்கள் உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்படும். சுப காரிய விடயமாக வெளியூர் செல்ல நேரிடலாம். உங்களுக்கு சம்பந்தமில்லாத பிரச்சினைகளில் தலையிடுவதும் கருத்து சொல்வதையும் தவிர்த்தல் நலம்.

## ரிலாக்ஸா வாசியுங்க...



அப்பா – 'செல்லம், உனக்கு யாரை அதிகமாக பிடிக்கும் அம்மாவா...? அப்பாவா....?'
மகன் – 'இரண்டு பேரையும்..!'
அப்பா – 'இல்லை. யாராவது ஒருவரைச் சொல்லு..?'
மகன் – 'இல்லப்பா, இரண்டு பேரையும் பிடிக்கும்..!'
அப்பா – 'சரி, நான் சிங்கப்பூர் போறேன்...! அம்மா சுவிட்ஸர் லாந்து போறாங்க. நீ எங்கே போவாய்...?'
மகன் – 'சுவிட்ஸர்லாந்து..!'
அப்பா – 'ஆக.. உனக்கு அம்மாவைத்தான்...பிடிக்கும்! அப்படி' தானே..?'
மகன் – 'இல்லப்பா.. சுவிட்ஸர்லாந்தில் இயற்கை வளம் அழகாக இருக்கும்.. அதான்..!'
அப்பா – 'சரி... நான் சுவிட்சர்லாந்து போறேன்...! அம்மா சிங்கப்பூர் போறாங்க..! நீ எங்கே போவாய்..?'
மகன் – 'சிங்கப்பூர்..!'
அப்பா – 'ம்..ம்.. ஆக உனக்கு என்னை விட.. அம்மாவை தான் ரொம்ப பிடிக்கும்.. அப்படி தானே..?'
மகன் – 'இல்லையப்பா.. இரண்டு பேரையும் பிடிக்கும்..!'
அப்பா – (கோபமாக) 'இப்ப: சொன்னதுக்கெல்லாம்... என்னடா அர்த்தம்..?'
மகன் – 'லூசாப்பா... நீ..?'
அப்பா – 'ஏன்டா...?'
மகன் – 'நான்.. தான் ஏற்கனவே அம்மா கூட, சுவிட்ஸர்லாந்தை சுத்திப் பார்த்துட்டு.. வந்துட்னே...?'
அப்பா – .!!!!!!!!!!!!

## கூகுள் முதலிடம்




அமெரிக்காவில் இயங்கும் கிளாஸ்டோர் வலைத்தளம் கடந்த ஆறு வருடங்களாக. சர்வதேச ரீதியில், வேலை செய்வதற்கு சிறந்த இடங்களாக 50 நிறுவனங்களைத் தேர்வு செய்து பட்டியலை வெளியிட்டு வருகிறது.

இந்த வருடத்துக்கான பட்டியலை கிளாஸ் டோரின் தலைமை அதிகாரி ரொபர்ட் ஹொமன் நேற்று வெளியிட்டார். இதில் கூகுள் முதல் இடத்தைப் பெற்றுள்ளது. போஸ்டனைத் தலைமையிடமாகக் கொண்ட ஆலோசனை நிறுவனமான பெயின்ரூய அஷிஷ் இரண்டாவது இடத்தில் உள்ளது.

கடந்த ஆண்டு இரண்டாவது இடத்தில் இருந்த டுவிட்டர் இந்த வருடம் 50 நிறுவனங்கள் அடங்கிய பட்டியலில் இடம் பெறவில்லை. சென்ற வருடம் ஐந்தாவது இடத்தில் இருந்த பேஸ்புக் நிறுவனம், 13 ஆவது இடத்திலுள்ளது.

ஊழியர்களின் வேலை மற்றும் குடும்ப பொறுப்புகள் இடையே ஒரு சமநிலையை ஏற்படுத்துவதில் கூடுதல் கவனம் செலுத்தியதால் கூகுள் முதல் இடத்தில் இருக்கிறது என்று அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.



## ஜெட்வேக மனிதர்

சுவிஸ் முன்னாள் விமானப்படை வீரரான வெஸ்ரொசி, ஹெலிக் கொப்டரிலிருந்து குதித்து ஜெட்பாக் கருவி உதவியுடன் டுபாயின் வான் பகுதியில் பறந்துள்ளார். சிறிய இறக்கையுடன் வடிவமைக்கப்பட்ட ஜெட்பாக் கருவியை இதற்காகப் பயன்படுத்தியுள்ளார்.

இதை முதுகில் கட்டிக் கொண்டு இயக்கினால் ஓரிடத்தில் இருந்து மற்றொரு இடத்துக்கு மிக விரைவாக பறந்து செல்லும். இந்த ஜெட்பாக் கருவி மூலம் 4 நிமிடத்தில் ஒரு மைல் தூரம் பறக்க முடியும்.

## தூங்காத ஏ.ஆர். ரகுமான்



காவியத் தலைவன், லிங்கா, ஐ படங்களுக்காக கடந்த நான்கைந்து மாதங்களாக இடைவிடாமல் இரவு – பகல் என்றும் பாராமல் அவரும், அவருடைய குழுவினரும் கடுமையாக உழைத்திருக்கிறார்கள்.

இந்தப் படங்களின் பாடல்கள் வெளிவந்து ரசிகர்களிடையே அமோக வரவேற்பை பெற்றுள்ளன. தொடர்ந்து ஓய்வு இல்லாமல் உழைத்ததால், ரகுமான் ஒரு மாதத்துக்கு ஓய்வு எடுக்கப் போவதாகக் கூறியுள்ளார்.

'நானும் என் குழுவினரும் கடந்த நான்கு மாதகால் மாக ஓய்வு இல்லாமல் உழைத்து இருக்கிறோம். அதனால் ஒரு மாதத்துக்கு அவர்களுக்கு ஓய்வு வழங்கியுள்ளேன். ஒரு மாத ஓய்வுக்குப் பின் மணிரத்னம் இயக்கி வரும் படத்தின் பின்னணி இசை வேலையை ஆரம்பிக்கவுள்ளேன்' – என்றார் ரகுமான்.

## மூங்கில்காற்று மூலிகை வாசம்...



ஜப்பானின் மேற்கே அமைந்துள்ள புறநகர் பகுதியில் மூங்கில் காடுகள் அமைந்துள்ளது. இயற்கை அழகு மிகுந்து காணப்படும் இந்த காடுகளில் எண்ணற்ற அளவிலான மூங்கில் மரங்கள் வானளவுக்கு வளர்ந்துள்ளது.

இந்த அழகிய மூங்கில் காடுகளுக்குள் செல்லும் போது, நம்மை சுற்றியிருக்கும் பச்சை நிறத்திலான மூங்கில்களால் நாம் வேறு ஏதோ புதிய உலகத்தில் இருப்பது போன்ற பிரமிப்பு ஏற்படுவது குறிப்பிடத்தக்கது.

மூங்கில் வேகமாக வளரும் தன்மை கொண்டதால், இங்கு வளரும் மூங்கில்களை அறுவடை செய்தாலும் மீண்டும் வேகமாக தனது உயரத்தை எட்டிவிடுகிறது.

மேலும், இந்த மூங்கில் காடுகளை சுற்றி பல புத்த கோயில்களும் இடம்பெற்றுள்ளதால் இந்த மூங்கில் காடு மிகவும் புனிதமாகவும் கருதப்படுகிறது.






# செய்திகள்

## அதிகளவு உரிமை மீறல்கள் போர் வேளையே நடந்தன

### மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். இணைப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 13

இலங்கையில் போர்க் காலப் பகுதிகளிலேயே மனித உரிமை மீறல்கள் அதிகளவில் இடம்பெற்றுள்ளன. தற்போது உரிமை மீறல்கள் இடம்பெறவில்லை எனக் கூற முடியாது. இப்போதும் மனித உரிமை மீறல்கள் அவ்வப்போது இடம்பெற்றுக் கொண்டுதான் உள்ளன. ஆனால் அவை குறைந்துள்ளன.

இவ்வாறு தெரிவித்தார் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ் மாவட்ட இணைப்பாளர் ரி.கனகராஜா.




சர்வதேச றோட்டறி தினத்தை முன்னிட்டு யாழ்.மாவட்ட றோட்டறிக் கழகத்தால் தியாகி அறக்கொடை நிலையத்தின் கேட்போர் கூடத்தில் கடந்த 10ஆம் திகதி ஏற்பாடு செய்யப்பட்ட செயலமர்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்;

பொதுவாக மனித உரிமைகள் நிராகரிக்கப்படும் இடங்களாக சிறைச்சாலைகள் மட்டுமே உள்ளன. சிறைச்சாலைகளிலும் நடமாடுவதற்கான உரிமை, ஒன்று கூடுவதற்கான உரிமை போன்ற சில உரிமைகளே கைதிகளுக்கு நிராகரிக்கப்படும். இந்த வகையில் இன்று முழு உலகுமே சிறைச்சாலைகளாக மாறியுள்ளன. இன்று உலகம் முழுவதும் சித்திரவதையுடன் கூடிய மனித உரிமை மீறல்கள் நாளுக்கு நாள் இடம்பெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன. மனித உரிமைகளைக் காப்பதற்கு எனச் சில சட்டங்களும் அதற்கான சில அமைப்புக்களும் சில தசாப்தங்களாக சர்வதேச ரீதியில் இருக்கின்ற பொழுதிலும் இவை அனைத்தும் வெறும் சம்பிரதாய அடிப்படையில்தான் உள்ளன.

இவ்வாறான சட்டங்களும் அமைப்புக்களும் தோற்றுவிக்கப்பட்டதற்கான சாதகமான விளைவுகளை விடப் பாதகமான விளைவுகளையே அன்றாடம் நாம் எதிர்நோக்கியுள்ளோம்.

25 ஆண்டுகளுக்கு முன்னர் மனித உரிமைகளும், சிறுவர் உரிமைகளும், பெண்களுக்கு எதிரான வன்முறைகளும் எந்த மட்டத்தில் இருந்ததோ அதே நிலைமைதான் இப்பொழுதும் இருக்கின்றது. இதில் எந்தவித முன்னேற்றமும் இல்லை –என்றார். (த–ரி)

## அரச மட்கல நிலையத்தை செயற்படுத்தக் கோரிக்கை

சங்கானை, டிசெ. 13

சங்கானையில் இயங்கிவந்த அரச மட்கல நிலையத்தை மீளப் புனரமைத்து தரமான உற்பத்திகளை மேற்கொள்ள வழியேற்படுத்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

30 வருடங்களுக்கு முன்னர் அரச இயந்திர மட்கல நிலையம் ஒன்று சங்கானை, அராலி வீதியில் அமைக்கப்பட்டது. இந்த நிலையம் பல வருடங்கள் செயற்பட்டு வந்தது. இங்கு பலர் தொழில் வாய்ப்பைப் பெற்று வந்தனர்.

போர்க் காலச் சூழ்நிலையால் சிறிது காலம் இது இயங்க முடியாத நிலை ஏற்பட்டது. மீண்டும் யாழ். செயலகத்தின் முயற்சியால் தொழிற்றுறைத் திணைக்களத்தின் அனுசரணையுடன் இது தற்போது செயற்பட்டு வருகின்றது.

ஒவ்வொரு ஆறு மாத காலத்துக்கும் 15 முதல் 20 பிள்ளைகள் வரை இங்கு தொழிற் பயிற்சியைப் பெற்று வருகின்றனர்.

தென்னிலங்கை மட்பாண்ட நிலையங்களில் உற்பத்தி செய்யப்படும் உற்பத்திப் பொருள்களின் தரத்துக்கு ஒப்பாக இங்கு உற்பத்திகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

ஆனால் தற்போது சிறு சிறு தெய்வ உருவங்கள், கூஜா வகைகள், உண்டியல் போன்றவையே உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன.

இவற்றை நல்லூர் திருவிழாக் காலம் மற்றும் கண்காட்சிகளில் காட்சிப்படுத்திக் கூடிய வருமானம் பெற்று வந்துள்ளதுடன் பலருக்கு வேலைவாய்ப்பும் கிடைத்தது.

இந்த நிலையத்துக்கு ஒருமுறை வருகை தந்த பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் அமைச்சர் இதனைச் சிறந்த முறையில் இயங்க வைக்க தனது அமைச்சின் மூலம் முயற்சி எடுப்பதாகத் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் கடந்த மாத முற்பகுதியில் சங்கானை– பொன்னாலை வீதியில் உள்ள வளவு ஒன்றில் ஒரு விளம்பரப் பலகை அமைச்சரால் திறந்து வைக்கப்பட்டுள்ளது. சங்கானை மட்பாண்டநிலையம்என்னும்பெயர் அதில் பொறிக்கப்பட்டுள்ளது.

இங்கு யார்? என்ன செய்யப் போகிறார்கள்? எதற்காக இது திறந்து வைக்கப்பட்டுள்ளது என்பது யாருக்குமே தெரியவில்லை என்கிறார்கள் அந்தப் பகுதி மக்கள்.

இந்த நிலையத்தின் செயற்பாடுகளை நல்ல முறையில் செயற்படுத்தினால் பலரும் பயனடைய முடியும் என மக்கள் தெரிவித்துள்ளனர். (த–29)

## தனது மகளை துஷ்பிரயோகம் செய்தவர் கைதானார்

வவுனியா, டிசெ. 13

ரம்புக்கனையில் வைத்து தனது மகளை இரண்டு தடவைகள் துஷ்பிரயோத்துக்கு உட்படுத்திய சந்தேகநபரை வவுனியாவில் வைத்துக் கைது செய்துள்ளதாக வவுனியா குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் தெரிவித்தனர்.

செட்டிகுளம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பாவக்குளத்தில் கடையொன்றை உடைத்துத் திருடிய சம்பவம் தொடர்பில் வவுனியா மன்னார் மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் யு.கே. திஸாநாயக்க மற்றும் வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் வசந்த விக்கிரம ஆகியோரின் வழிநடத்தலில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டபோது ரம்புக்கனையைச் சேர்ந்த 36 வயதுடைய நபரொருவரைச் சந்தேகத்தில் கைது செய்திருந்தனர்.

வவுனியா குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸார் அவரிடம் மேற்கொண்ட மேலதிக விசாரணைகளில், அவர் மகளைத் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாகிய நிலையில் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளமை தெரியவந்தது.

இதனையடுத்து அவரிடம் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (த–402)

## பளையில் பஸ்ஸை மறித்து சாரதி மீது கடும் தாக்குதல்

### நேற்று மாலை சம்பவம்

யாழ்ப்பாணம், டிசெ. 13

யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சிக்குச் சென்ற தனியார் பயணிகள் பஸ்ஸைப் பளைப் பகுதியில் இடைமறித்த சிலர் அதன் சாரதியைக் கடுமையாகத் தாக்கிவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை 4.40 மணியளவில் இடம்பெற்றது.

ஓட்டோ மற்றும் மோட்டார் சைக்கிள்களில் வந்த 7 பேர் கொண்ட இளைஞர் குழு ஒன்றே பஸ்ஸை மறித்துச் சாரதி மீது தாக்குதல் நடத்தியது என்று தெரிவிக்கப்படுகிறது.

தாக்குதல் நடத்தப்பட்டதற்கான காரணம் தெரியவரவில்லை.

சம்பவம் குறித்து பளைப் பொலிஸாருக்குஅறிவிக்கப்பட்டுபொலிஸார் சம்பவ இடத்துக்கு விரைந்து விசாரணைகளை மேற்கொண்டனர்.

அண்மைக் காலமாக பஸ் சாரதிகள் மீது இனந்தெரியாதோர் தாக்குதல்களை மேற்கொண்டு வரும் நிலையில் நேற்று இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தாக்குதல்கள் தொடர்பில் இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை என்று கூறப்படுகிறது.

பஸ் உரிமையாளர்களுக்கு இடையிலான போட்டியே இந்தத் தாக்குதல்களுக்குக் காரணம் என்றும் கூறப்படுகின்றது. (த–9)

## வருத்தப்படாத வாலிபர் சங்கத்துக்கு உதவியளிப்பு



வலி.வடக்கு, டிசெ. 13

வடக்கு மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபனின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான ஒலிபெருக்கி சாதனங்கள் இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்துக்கு வழங்கப்பட்டன.இளவாலை கலைமகள் படிப்பகத்தில் இந்த நிகழ்வு இடம் பெற்றது.

இந்த நிகழ்வுக்கு வடக்கு மாகாண சபை உறுப்பினர் கஜதீபன், பிரதேச சபை தவிசாளர் சுகிர்தன்,பிரதேசசபைஉறுப்பினர் சண்முகநாதன், யாழ்.மாவட்ட இளைஞர் சம்மேளன தலைவர் விஜிதரன், கலைமகள் படிப்பக நிர்வாக தலைவர் நாகேந்திரன், செயலர் பிரமதாசன் ஆகியோர் கலந்துகொண்டனர். (த–86)

## மாநகரப் பகுதியில் 26 பேருக்கு டெங்கு

யாழ்ப்பாணம், டிசெ. 13

யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு உட்பட்ட பகுதியில் டெங்கின் தாக்கம் அதிகரித்துள்ளது. இந்த மாதம் நேற்று வரையான 12 நாள்களில் 26 பேருக்கு டெங்குத் தொற்று ஏற்பட்டுள்ளது என்று சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

இந்தத் தாக்கம் கூடுதலாக நல்லூரில் 6 பேருக்கும், நாவாந்துறையில் 6 பேருக்கும் ஏற்பட்டுள்ளது. ஏனைய பகுதிகளில் அதனைவிடக் குறைவாகப் பதிவாகியுள்ளது.

டெங்கின் தாக்கம் அதிகளவில் காணப்படும் இந்தப் பிரதேசங்களில் உடனடியாக விழிப்புணர்வு மற்றும் துப்புரவு செயற்பாட்டுப் பணிகளை மேற்கொள்ளும் நடவடிக்கைகளைச் சுகாதாரப் பகுதியினர் தீவிரப்படுத்தியுள்ளனர்.

இந்த ஒழிப்புப் பணிகள் கடந்த புதன்கிழமை ஆரம்ப மாகின. நல்லூர் பிரதேசத்தில் டெங்கின் தாக்கம் காணப்படும் இடங்களைச் சுத்திகரிக்கும் பணி கள் மற்றும் வீடு வீடாகச் சென்று மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வரு கின்றன.

மக்கள் தமது குடியிருப்புச் சுற்றாடலைச் சுத்தமாக வைத்திருக்கவேண்டும். , டெங்கின் பெருக்கத்துக்கு வழியேற்படுத்தும் மக்கள் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவார் கள் என்று சுகாதாரப் பகுதியினர் தெரிவித்தனர்.

(த–4–17)

# இந்திய றோலர்கள் இங்கு வரக் கூடாது

## கடல்வளம் அழிக்கப்படுவதை எதிர்த்து முல்லைத்தீவு மீனவர்கள் பேரணி





*கடற்றொழிலாளர் பேரணியின் மனு முல்லை மாவட்ட மேலதிக அரச அதிபரிடம் கையளிக்கப்பட்டது.*

கிளிநொச்சி, டிசெ.13
இந்திய றோலர்களினால் முல்லைத்தீவில் கடல் வளம் அழிக்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்துக் கடற்றொழிலாளர்கள் நேற்றுப் பெரும் அமைதிப் பேரணியை நடத்தினர்.

முல்லைத்தீவுக் கடற்பரப்பில் இந்திய றோலர் படகுகளினால் மேற்கொள்ளப்படும் அத்து மீறிய மீன்பிடியைக் கண்டித்து அமைதிப் பேரணியொன்று நேற்றுக் கடற்றொழிலாளர்களினால் நடத்தப்பட்டுள்ளது. முல்லைத் தீவு மாவட்டக் கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசம் மற்றும் கடற்றொழிலாளர்களின் சம்மேளனம் ஆகியன இணைந்து இந்த அமைதிப் பேரணியை நடத்தின.

முற்பகல் 10.00 மணியளவில் முல்லைத்தீவு இராயப்பர் தேவாலயத்திலிருந்து ஆரம்பித்த பேரணி முல்லைநகர் வழியாக நகர்ந்து முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தைச் சென்றடைந்ததுடன் முல்லைத்தீவு மேலதிக அரச அதிபரிடம் ஜனாதிபதிக்கான மனுவொன்றும் கையளிக்கப்பட்டது.

மனு கையளிக்கப்பட்ட பின்னர் முல்லைத்தீவு மாவட்டக் கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசம் மற்றும் கடற்றொழிலாளர்களின் சம்மேளனம் ஆகியவற்றின் தலைவருமாகிய அந்தோனிப்பிள்ளை மரியராசா கருத்துத்தெரிவிக்கையில்,

இந்த அமைதிப் பேரணியை நடத்தியதன் நோக்கம் இந்திய றோலர்களின் அட்டகாசம் எமது கடற்பரப்பில்மிகவும்கூடுதலாக உள்ளது. இது தொடர்பாக அரச அதிபர், அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் இறுதியாகக் கடற் றொழில் அமைச்சர் மற்றும் ஜனாதிபதி ஆகியோரையும் நேரடியாகச் சந்தித்து இந்திய றோலர்களின் அத்துமீறல் தொடர்பாகத் தெரிவித்தோம்.

எமது சந்திப்புகளின்போது முடிவுகள் எடுப்பதாகத் தெரிவிக்கப்பட்டபோதும் முடிவு எதுவும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. கடந்த 4 நாள்களுக்கு முன்னர் கூட எமது கடற்பரப் பில் 150 தொடக்கம் 200 வரையான றோலர் படகுகள் எமது கடல் வளத்தை அழித்துள்ளன.

இந்த நிலையில்தான் ஜனவரி மாதம் அதிக வருமானம் தரக் கூடிய தொழில் காலமாகவுள்ளதால் அந்தக்காலத்தை தவறிவிடக்கூடாதென்பதற்காக முல்லைத்தீவு பொலிஸாரிடம் அமைதிப் பேரணிக்கான அனுமதியைப்பெற்று 26 கடற்றொழிலாளர் சங்கங்களும் இணைந்து இதனை நடத்தியுள்ளோம்.

எமது கோரிக்கையை ஜனாதிபதி ஏற்று எமது கடல் வளங் களைப் பாதுகாத்து நாம் தொழில்செய்யக் கூடிய நிலையை உருவாக்கி 30 ஆண்டுகாலப் போரினாலும், ஆழிப்பேரலையினாலும் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த நடவடிக்கையை எடுக்கவேண்டும் என்றார். (த–18)

ப.1 விரிவு

## மருந்து மாம்பழ வியாபாரிகள் தப்பியோட்டம்

தென்மராட்சி, டிசெ 13
இரசாயன மருந்து தெளித்து பழுக்க வைத்த மாம்பழங்கள் பொதுச் சுகாதார அதிகாரியினரால் பறிமுதல் செய்யப்பட்டன. இதனையடுத்து மாம் பழ வியாபாரிகள் தப்பியோடினர். இச்சம்பவம் கடந்த 10ஆம் திகதி கொடிகாமம் சந்தையில் இடம்பெற்றுள்ளது.

காலையில் பழங்கள் இறக்கப்பட்டு விற்பனைக்குத் தயாராக இருந்தவேளை, அங்கு திடீரென வந்த பொதுச் சுகாதார அதிகாரிகள் மாம்பழங்களை பரிசோதிக்கும் நடவடிக்கையில் இறங்கினர். இதனையடுத்து அங்கு நின்றிருந்த வியாபாரிகள் பழங்களைக் கைவிட்டுத் தப்பியோடிவிட்டனர். அங்கு இருந்த மாம்பழங்கள் அனைத்தும் இரசாயன மருந்து தெளித்துப் பழுக்க வைக்கப்பட்டவை என உறுதியானதும் அனைத்து மாம்பழங்களும் பறிமுதல்செய்யப்பட்டன. (த–9)

# சொந்த இடங்களில் எம்மை விரைவில் குடியேற்றுங்கள்

## பரவிப்பாஞ்சான் மக்கள் ஜனாதிபதிக்கு மனு

கிளிநொச்சி, டிசெ. 13
கிளிநொச்சி பரவிப்பாஞ்சான் பகுதி மக்கள் தங்களைச் சொந்த இடங்களில் மீள்குடியேற்று மாறு கோரி மீண்டும் ஜனாதிபதிக்கு மனு ஒன்றை அனுப்பி வைக்கவுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் போரினால் இடம்பெயர்ந்த மக்கள் கடந்த 2009 ஆம் ஆண்டு முதல் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ளனர். தற்போது முகமாலையின் குறிப்பிட்ட சில பகுதிகள் வெடிபொருள்கள் அகற்றப்படாததால் மீள்குடியேற்றம் செய்யப்படாமல் இருப்பதாகவும், வெடி பொருள்கள் அகற்றும் பணிகள் நிறைவு செய்யப்பட்டவுடன் அங்கு மீள் குடியேற்றம் இடம் பெறும் எனவும்தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந் நிலையில் கிளிநொச்சி நகரை அண்மித்த பகுதியான பரவிப்பாஞ்சான் பகுதியில் 52 குடும்பங்கள் இதுவரை மீள்குடியேற அனுமதிக்கப்படாமல் உள்ளன. குறித்த காணிகள் இராணுவத்தினரின் தேவைக்காக ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன.

கடந்த 2010 ஆம் ஆண்டு முதல் தமது காணிகளை விடுவித்து தம்மை மீளக்குடியேற அனுமதிக்குமாறு இப்பகுதி மக்கள் பல்வேறு தரப்பினரிடமும் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

ஆனால் இன்றுவரை எந்தவித முன்னேற்றமும் இல்லையெனவும், தாம் கடந்த ஐந்து வருடங்களாகக் கிளிநொச்சியில் தமது சொந்தக் காணிகள் இருந் தும் வாடகைவீடுகளில்வாழ்ந்து வருவதாகவும்அவர்கள் கூறுகின்றனர்.

தமது நிலையைக் கருத்திற் கொண்டு நடவடிக்கைமேற்கொள்ளுமாறு முன்னர் ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பியிருந்ததாகவும், தற்போது மீளவும் மனு ஒன்றை அனுப்பி, வைப்பதற்கான ஏற்பாடுகளை செய்து வருவதாகவும் அவர்கள் மேலும் கூறினர். (த)

# நோயாளர் எண்ணிக்கை கிளிநொச்சியில் உயர்வு

## நாளாந்தம் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் வைத்தியசாலையில் சிகிச்சைக்கு வருகை

கிளிநொச்சி, டிசெ. 13
கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் நோயாளர்கள் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ளது.

நாள்தோறும் 1000க்கும் மேற்பட்ட நோயாளர்கள் சிகிச்சைக்கு வருகை தருவதாக வைத்தியசாலைப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. சளிக் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட நோயாளர்களே கூடுதலாக வருகை தருவதாகவும் விவரங்கள் கூறுகின்றன.

மாவட்டத்தில் நிலவும் மழையுடன் கூடிய காலநிலை காரணமாகவேநோயாளர் எண்ணிக்கை அதிகரித்திருக்கின்றது.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள அக்கராயன் பிரதேச வைத்தியசாலை, முழங்காவில் ஆதார வைத்தியசாலை, பூநகரி பிரதேச வைத்தியசாலை,தருமபுரம்வைத்தியசாலை, வட்டக்கச்சி வைத்தியசாலை ஆகியவற்றிலும் நோயாளர் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுகின்றது.

கிராமங்களிலுள்ள வைத்தியசாலைகளில் நோயாளர்கள் அதிகரித்திருப்பதன் காரணமாக மேலதிக சிகிச்சைக்காகக் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு நாள்தோறும்பெருமளவுநோயாளர்கள் வருகை தருகின்றனர்.

உள்ளகநோயாளர் பிரிவில்அனுமதிக்கப்படும் நோயாளர் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது.

இதேவேளை, கடந்த 09ஆம் திகதி இடம்பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் கண் மருத்துவ நிபுணர் உட்பட தாதிய உத்தியோகத்தர்களால் நெருக்கடி தொடர்பாகவும்கருத்துகள் தெரிவிக்கப்பட்டன.

கிளிநொச்சி பொது வைத்தியசாலையைப் பொறுத்தவரை முக்கிய மருத்துவர்கள் பணியில் இல்லாத காரணத்தால் யாழ்ப்பாணம், வவுனியா, கண்டி, கொழும்பு, அநுராதபுரம் ஆகிய வைத்தியசாலைகளுக்கு நோயாளர்கள் மேலதிக சிகிச்சைக்காகக் கொண்டு செல்லப்படும் அவலம்காணப்படுகின்றது. (த–18)

# தென்மராட்சிப் பகுதியில் 5 உப ரயில் நிலையங்கள்



தென்மராட்சி, டிசெ.13
தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள 5 உப ரயில் நிலையங்கள் கடந்த 10ஆம் திகதி முதல் இயங்க ஆரம்பித்துள்ளன. இந்த உப ரயில் நிலைய அதிபர்களாக நியமனம்செய்யப்பட்ட 5 உபநிலைய அதிபர்களிடம் ரயில் நிலைய பதில் அதிபர் ( பயணப் பிரிவு ) மொகமட் இஸ்மாயில் ஹாரூம் நியமனக் கடிதங்களைக் கையளித்தார்.

கடந்த 8ஆம் திகதி திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் உப நிலைய அதிபர்களுக்கு நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதன் பிரகாரம் தச்சன்தோப்பு உப ரயில் நிலையத்துக்கு முருகானந்தம் சுதர்சன், சங்கத்தானை உப ரயில் நிலையத்துக்கு மகாலிங்கம் தவநீதன், மீசாலை உப ரயில் நிலையத்துக்குத் தேவபாலன் சுகர்ணன், மிருசுவில் உப ரயில் நிலையத்துக்குதெய்வேந்திரன்ஜெயசுதன், எழுதுமட்டுவாழ்உபரயில்நிலையத்திற்கு கணேசதாஸ் சுதாகரன் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். (த–9)

# அடிப்படை மனித உரிமை மீறப்படும் இடங்களில் வன்முறை

## கரித்தாஸ் கியூடெக் இயக்குநர் தெரிவிப்பு



*மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்கும் விதமாக நான்கு மதத்தலைவர்களும் ஒன்றிணைந்து மெழுகுவர்த்தி ஒன்று ஏற்றி வைக்கின்றனர்.*

யாழ்ப்பாணம் டிசெ.13

பெரும்பாலான நாடுகளும் மனிதர்களும் அடிப்படை மனித உரிமைகளைக் கூட கடைப்பிடிப்பதில்லை. ஒரு மனிதனை மிருகத்திடம் இருந்து வேறாக்கி உயர்ந்த இடத்தைக் கொடுக்கும் அடிப்படை மனித உரிமை மீறல்கள் எங்கெல்லாம் மீறப்படுகின்றதோ அங்கெல்லாம் வன்முறை தலைதூக்குகின்றது.

இவ்வாறு தெரிவித்தார் கரித்தாஸ் கியூடெக் இயக்குநரும் அருட்தந்தையுமான யாவீஸ்.

சர்வமத அமைப்பால் மனித உரிமைகள் தினமான கடந்த 10ஆம் திகதி யாழ். மறைக்கல்வி நடு நிலையத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட செயலமர்வில் பிரதம விருந்தினர்களில் ஒருவராகக் கலந்துகொண்டே அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் கூறுகையில்:

அடிப்படைமனிதஉரிமைகள்மீறப்பட்டு மனிதர்கள், மனிதர்கள் அல்லாமல் அடிமைகளாக மாற்றப்படும் வேளையில் வாழ்வில் விரக்தியடைந்து சாவை எதிர்கொள்ள ஒவ்வொருவரும்துணிகிறார்கள்.

தற்கொலை இறப்புக்களுக்கும் ஆயுதப்போராட்டங்களுக்கும் இதுவே காரணமாகின்றது"– என்றார்.

குறித்த நிகழ்வில் மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்கும் விதமாக நான்கு மதத் தலைவர்களும் ஒன்றிணைந்து மெழுகுவர்த்தி ஒன்று ஏற்றி வைத்தனர். அருட் தந்தையர்கள், அருட் சகோதரிகள் சர்வமத அமைப்பின் உறுப்பினர்கள், ஆசிரியர்கள் பாடசாலை மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (வ–ரி)



கலைமகள் சர்வதேச ஆங்கில பாடசாலையின் பரிசளிப்பு விழா நிகழ்வுகள் கடந்த 6 ஆம் திகதி கொக்குவிலில் அமைந்துள்ள பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றன. பாடசாலை இயக்குநர் ஜி. சிந்துமயூரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன் கலந்து கொண்டார். இதன்போது குறித்த பாடசாலையின் அனைத்து கிளைகளிலும் கல்விகற்று இந்த ஆண்டில் ஒவ்வொரு துறைகளிலும் சிறப்பாகச் செயற்பட்ட மாணவர்களுக்கு பரிசில் வழங்கியபோது... (வ)

## உக்காத கழிவுகளைச் சேர்த்து வீதியோரங்களில் வைக்குக

### சாவகச்சேரி நகரசபைத் தலைவர் அறிவுறுத்து

தென்மராட்சி, டிசெ.13

சாவகச்சேரி நகரசபை எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் பாவனைக்கு உதவாத பிளாஸ்ரிக் பொருள்கள், தகரங்கள், போத்தல்கள் போன்ற உக்காத



பொருள்களைஉரைப்பைகளில் போட்டு வீதியோரங்களில் வைக்குமாறும், ஏனைய குப்பைகளை தத்தமது காணிகளுக்குள் புதைக்குமாறும் நகர சபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை அறிவித்துள்ளார்.

நகரசபையின் குப்பை அகற்றும் வாகனங்கள் தற்போது டெங்கு கட்டுப்பாட்டு செயற்பாட்டு நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் காணிகளின் வேலிகளில் வெட்டப்படும் குழைகள் வீதி யோரங்களில் குவித்து வைக்கப்பட்டிருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

சபை எல்லைக்குட் பட்ட பகுதிகளில் டெங்கிலிருந்து மக்களைக் காப்பாற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதால் உக்கக்கூடிய குப்பைகளை வீதியோரங்களில் போடாமல் தத்தமது காணிகளுக்குள் புதைக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (வ–9)

## மீன் சந்தை இடமாற்றம்

வவுனியா,டிசெ.13

வவுனியா நகரப் பகுதியில் இயங்கி வந்த மீன் சந்தை இடம் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. வவுனியா நகர சந்தைப்பகுதி உள்வட்ட வீதியில் இயங்கி வந்த மீன் சந்தையின் கட்டடப் பகுதி திருத்த வேலை மேற்கொள்ளப்பட்டு வருவதால் தற்போது மீன் சந்தை வவுனியா, இறம்பைக்குளம் வீதியில் உள்ள நகர சபைக்குச் சொந்தமான வளாகத்துக்கு இடம்மாற்றம் செய்யப்பட்டுள்ளது. (வ–421)

## கனகராயன்குளம் பாரதி முன்பள்ளிக்கு கிடைத்தது மின்சாரம்

வவுனியா,டிசெ. 13

வவுனியா வடக்கு கனகராயன் குளம் பாரதி முன்பள்ளிக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. வட மாகாண சபை உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்ட பிரமரண நிதியில் இருந்து வட மாகாண சபை உறுப்பினர் ம.தியாகராசாவுக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் அவரால் வழங்கப்பட்ட நிதிமூலம் கனகராயன்குளம் பாரதி முன்பள்ளிக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி முன்பள்ளியில் அண்மையில் மின் இணைப்பு வழங்கும் நிகழ்வு வைபவ ரீதியாக இடம்பெற்றதில் வட மாகாண சபை உறுப்பினர் ம.தியாகராசா கலந்து கொண்டு மின்சார இணைப்பை ஆரம்பித்து வைத்தார். (வ–421)

## அனுமதியின்றி சாராயம் விற்றவருக்கு அபராதம்

தென்மராட்சி, டிசெ.13

அனுமதிப்பத்திரமின்றி அரச சாராயம் விற்பனைக்கு வைத்திருந்த மட்டுவில் வாசிக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 30 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

வழக்கை விசாரித்த நீதிவான் எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து 30 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார். (வ–9)

## வீண் விரயமாகும் குழாய்நீர்; கவனம் செலுத்தக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.13

யாழ்.நகரில் நிலத்தடி நன்னீர் குழாய் பைப் ஒன்று உடைக்கப்பட்டதால் கடந்த ஒரு வாரத்துக்கும் மேலாக குடி தண்ணீர் வீணாக விரயமாகிச் செல்வதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

யாழ்.பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு அருகில் கே.கே. எஸ்.வீதியில் உள்ள



நிலத்தடி குழாய் பைப்பே இவ்வாறு உடைக்கப்பட்டு குடிதண்ணீர் விரயமாகிப் பீறிட்டு பாய்கின்றது.

இதேவேளை கடந்த ஒரு மாத காலத்துக்கு குடி தண்ணீருக்கு ஏற்பட்ட பற்றாக்குறையால் மக்கள் அதனைப் பெறுவதற்கு சிரமப்பட்டும் வந் தனர்.

இந்தநிலையில் இவ்வாறு குடி தண்ணீர் வீண் விரயமாக்கப்படுவது குறித்து விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே யாழ். மாநகர சபையால் விநியோகிக்கப்படும் குறித்த நிலத்தடி குழாய் மூலமான குடிதண்ணீர் வீணாக விரயமாகிச் செல்வதை உடனடியாக நிவர்த்தி செய்யுமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (வ–17)

# அம்மாடியோவ்!

இவ்வளவு
போட்டிகளும்
பரிசுகளும்
எமக்கா?



| இல | போட்டிகள் | பிரிவு | தரம் | 1ஆம் பரிசு ரூ. | 2ஆம் பரிசு ரூ. | 3ஆம் பரிசு ரூ. | மட்டம் |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | சிறுகதை | A | தரம் 10, 11, 12, 13 | 10,000 | 7,000 | 5,000 | மாகாணம் |
| 02 | சிறுகதை | A | தரம் 10, 11, 12, 13 | 10,000 | 7,000 | 5,000 | மாகாணம் |
| 03 | கட்டுரை | A | தரம் 10, 11, 12, 13 | 10,000 | 7,000 | 5,000 | மாகாணம் |
| | | B | தரம் 6, 7, 8, 9 | 7,000 | 5,000 | 4,000 | மாகாணம் |
| 04 | ஓவியம் | A | தரம் 10, 11, 12, 13 | 10,000 | 7,000 | 5,000 | மாகாணம் |
| | | B | தரம் 6, 7, 8, 9 | 7,000 | 5,000 | 4,000 | மாகாணம் |
| | | C | தரம் 3, 4, 5 | 5,000 | 4,000 | 3,000 | மாகாணம் |
| 01 | சிறுகதை | A | தரம் 10, 11, 12, 13 | 3,000 | 2,000 | 1,000 | மாவட்டம் |
| 02 | கவிதை | A | தரம் 10, 11, 12, 13 | 3,000 | 2,000 | 1,000 | மாவட்டம் |
| 03 | கட்டுரை | A | தரம் 10, 11, 12, 13 | 3,000 | 2,000 | 1,000 | மாவட்டம் |
| | | B | தரம் 6, 7, 8, 9 | 3,000 | 2,000 | 1,000 | மாவட்டம் |
| 04 | ஓவியம் | A | தரம் 10, 11, 12, 13 | 3,000 | 2,000 | 1,000 | மாவட்டம் |
| | | B | தரம் 10, 11, 12, 13 | 3,000 | 2,000 | 1,000 | மாவட்டம் |
| | | C | தரம் 3, 4, 5 | 3,000 | 2,000 | 1,000 | மாவட்டம் |

# 30

அகவையில்
உதயன்

## தமிழ் வளர்ப்போம் தமிழால் இணைவோம்!

## மாணவர்களே!

### கட்டுரைப் போட்டிக்கு தயாரா நீங்கள்?

உதயன் 30ஆவது ஆண்டு சிறுகதைப் போட்டி விதிகள் அறிவிக்கப்பட்ட நிலையில் கட்டுரைப் போட்டி பற்றி எந்தவித அறிவித்தல்கள், அறிவுறுத்தல்கள் வராமையிட்டு நீங்கள் கலங்கிப் போயிருப்பதனை நாமறிவோம்.

**கட்டுரைப் போட்டி இரண்டு பிரிவுகளாக நடைபெறும்.**

A பிரிவு தரம் 10,11,12,13

Bபிரிவு தரம் தரம் 6,7,8,9

வருங்கால தலைவர்களும், சிந்தனையாளர்களும் நீங்களே!

எங்கே ?

உங்கள் சிந்தனையில் உதித்தவற்றை செயல் வடிவமாக்குவதற்கு முதலில் உங்கள் சிந்தனைக்கு ரி வடிவம் கொடுங்கள்.

தரப்படும் விடயங்களில் ஒன்றினைப் பற்றி கட்டுரையை ஆக்கி அனுப்புங்கள்

30ஆவது அகவையில் உதயன்,
மாணவர் இலக்கியத் தேர்வுகள்
ஆசிரியர்,
உதயன்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு உங்கள் ஆக்கங்களை 28.02.2015இற்கு முன் அனுப்பி வையுங்கள்.
உங்கள் முகவரி உலகிற்கு தெரியவரும் நாள் 14.04.2015 இற்கு ஆகும்.
ஆம் அன்றைய தினம் பரிசுகள் வழங்கப்படும்.

கட்டுரைப் போட்டிக்கான தலைப்புப் பிரிவுகள் பிரிவு A (600–750 சொற்கள் வரை கொண்டதாக கட்டுரை அமைய வேண்டும்.)

- 'பூகோளமயமாதல்: தமிழர் எதிர்கொள்ளும் சவால்கள்'
- 'மாகாணத்துக்கான நிலை பேண்தகு அபிவிருத்தி நடவடிக்கைகள்'
- 'எமது சட்ட ஒழுங்குகளில் புலம்பெயர்வினால் ஏற்பட்ட தாக்கங்கள்'
- 'எமது பண்பாடும் நாம் படும்பாடும்'
- நமது நவீன வாழ்க்கை முறைமையும், விவசாய விளை நிலங்களும்'

கட்டுரைப்போட்டிக்கான தலைப்புகள் பிரிவு B(400–550 சொற்கள் வரை கொண்டதாக கட்டுரை அமைய வேண்டும்.)

- 'எதிர்காலச் சந்ததியினருக்கான உலகு'
- 'கிராமியம் எமது உயிர் மூச்சு'
- 'சுற்றாடல் பேணுவோம்'
- 'தமிழர் வாழ்வும் வளமும்'

ஏற்கனவே 2014.12.09,10,11 ஆம் திகதிகளில் உதயனில் அறிவிக்கப்பட்டது போன்று பரிசுத் தொகை அமையும்.

**மகிழ்ச்சிதானே!**

**உதயன் 30ஆவது ஆண்டு**
**ஆக்க இலக்கியத் தேர்வுகள்**

பங்குகொள்ளும் ஆக்கம்; சிறுகதை/ கவிதை/ கட்டுரை/ ஓவியம்
(பொருத்தமானதைத் தவிர்த்து ஏனையவற்றைக் கீறி வெட்டிவிடவும்)
பங்குகொள்ளும் பிரிவு:
தரம் 10, 11, 12, 13 A-பிரிவு / தரம் 6,7,8,9, B-பிரிவு / தரம் 3, 4, 5 C-பிரிவு
(பொருத்தமானதைத் தவிர்த்து ஏனையவற்றைக் கிறிவிடவும்)

பங்குபற்றும் மாணவர் பெயர்:–
செல்வன்/செல்வி ..............................................
சிறுகதை/கவிதை/கட்டுரை/ஓவியத் தலைப்பு
..............................................
கற்கும் பாடசாலை: ..............................
தரம்: ..............
பாடசாலை அமைந்துள்ள மாவட்டம்: ..............................
வழிப்படுத்திய ஆசிரியர் பெயர்: ..............................
ஆசிரியரின் பாடத்துறை: ..............................

அதிபர் பரிந்துரை:
மேற்படி ஆக்கம் எமது பாடசாலையில் தரம் ........ இல் கல்வி கற்கும்
செல்வன்/செல்வி .............................. அவர்களது சுய ஆக்கம்
என்பதனை உறுதிப்படுத்துகின்றேன்.

அதிபரின் ஒப்பமும்
பதவி முத்திரையும்

உதயன்

ஆக்கம் தொடர்பான பணிமனைப் பாவனைக்கு

உதயன்
பத்திரிகையுடன்
நாளாந்தம்
இணைந்திருங்கள்!

# கருத்து

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## இரத்தக் கறையின் சர்ச்சை

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது மூன்றாவது பதவிக் காலத்தை நோக்கிய பயணத்தை அநுராதபுரத்தில் ஆரம்பித்தபோது தெரிவித்திருக்கும் கருத்து ஆச்சரியமூட்டுகிறது. தனது கைகளில் எந்த இரத்தக் கறையும் படியவில்லை என்று அவர் கூறியிருக்கிறார். தமது படையினர் எந்தவொரு பொது மகனையும் கொலை செய்யவில்லை என்றும்கூட அவர் கூறியிருக்கிறார்.

அவரது எதிராளி மைத்திரிபால முன்வைத்த குற்றச்சாட்டுக்கான பதிலே இது என்பது தெளிவு. வேட்புமனுத் தாக்கலின்போது மஹிந்தவுக்கு கைலாகு கொடுக்காமல் விட்டது தொடர்பில் மைத்திரி கூறிய, "என் கைகளில் இரத்தக்கறை படிவதை நான் விரும்பவில்லை" என்ற கூற்றுக்குத்தான் மஹிந்த பதிலளித்திருக்கிறார்.

மஹிந்த சொல்வது உண்மையா என்பதை ஆராய்வதற்கு முன்பாக மைத்திரி பற்றிய ஒரு விடயமும் மிக முக்கியமாகக் கூர்ந்து கவனிக்கப்படவேண்டும். போரில் கடைசி இடத்தையும் கைப்பற்றி புலிகளின் தலைமையை ஒரு சிறு துளி இடத்திற்குள் இராணுவம் சிறைப்படுத்தியிருந்த சமயத்தில் வெளிநாட்டிலிருந்து நாடு திரும்பிய மஹிந்த விமானத்தை விட்டு இறங்கியதும் மகிழ்ச்சி கரைபுரண்டோட மண்ணை விழுந்து முத்தமிட்டு வணங்கினார். அப்போது முதலாவது ஆளாக அவரை வரவேற்று, மலர் மாலை அணிவித்து, ஆரத் தழுவி அணைத்துக் கொண்ட முதலாமவர் மைத்திரிபால சிறிசேன மட்டுமே. அன்று இருந்த, தமிழர்களை ஒடுக்கி விட்டோம் என்ற மகிழ்ச்சி வெள்ளத்தில் மஹிந்தவின் கைகளில் படிந்திருந்த இரத்தக் கறை மைத்திரிக்குத் தெரியவில்லை.

சிவந்திருந்த மஹிந்தவின் கைகளில் இருந்தது இரத்தக் கறையே என்பதை மைத்திரி தெரிந்து கொள்வதற்கு 5 ஆண்டுகளுக்கும் மேல் எடுத்துக் கொண்டமை துரதிர்ஷ்டம்தான். இருந்தாலும் இப்போதாவது தெரிந்து கொண்டாரே - புரிந்துகொண்டாரே - என்று சந்தோஷப்பட்டுக் கொள்ளலாம்.

அப்படிப்பட்ட மைத்திரியின் கேள்விக்கு பதிலளிக்கப்போன மஹிந்த, ஒருபடி மேலே போய், தனது படையினர் எந்தவொரு பொது மகனையும் கொல்லவில்லை என்றிருக்கிறார். "பொது மக்கள் இழப்புக்கள் ஏதுமற்ற போர்" என்ற தனது கோஷத்தை அவரே கைவிட்டு ஆண்டுகள் கடந்து விட்டன என்பதை மறந்து விட்டு வெகு இலகுவாக எந்தவொரு பொதுமகனையும் கொல்லவில்லை என்கிறார் மஹிந்த.

அவர் நியமித்த நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையே, சரணடைந்து படையினரிடம் ஒப்படைக்கப்பட்ட பின்னர் பலர் காணாமற் போயிருக்கிறார்கள் என்பதற்குச் சாட்சியங்கள் இருப்பதால் அது பற்றி விசாரணை நடத்தப்படவேண்டும் என்று கூறியிருக்கிறது. ஆனால், அப்படி யாரையும் தாங்கள் கைது செய்து தடுத்து வைத்திருக்கவில்லை என்றே ராஜபக்ஷவின் அரசு கூறுகின்றது என்றால் ஒப்படைக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது? அந்தக் கறைகள் எல்லாம் யார் கையில் பூசப்பட்டிருக்கின்றன?

இப்படி முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைத்து மக்களை ஏமாற்றுவதை தெற்கின் சிங்களத் தலைவர்கள் என்றுதான் நிறுத்தப் போகிறார்களோ தெரியாது.

# யாருக்கு வெற்றி?

## களத்தில் மஹிந்தவுக்கு நிகராக மைத்திரி

'மவ்பிம' கட்டுரையிலிருந்து தொகுக்கப்பட்டது.
தமிழில்-வீஎஸ்ரீ

மழை நீரில் தலைதூக்கும் நீர்க்குமிழிகள் போன்று அண்மைய நாள்களாக நாடு முழுவதும் ஜனாதிபதி ராஜபக்ஷவின் விளம்பரப் பதாகைகள் தலைதூக்கியுள்ளன. "நாட்டை மீட்டெடுத்த நீங்கள் இருக்கும் வரை எமக்கு வேறொரு தலைவர் வேண்டுமா?" இது மஹிந்தவின் விளம்பரப் பதாகையொன்றில் பொறிக்கப்பட்டுள்ள வாசகங்களில் ஒன்று உதாரணத்துக்காக. ஆனால் இந்த பரப்புரை வகைக்குப் பொறுப்பானவர்களுக்கு பிரச்சினையொன்றும் இருப்பதாகத் தோன்றுகிறது. மூன்றாவது தடவையும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் ராஜபக்ஷவின் நிழலுருவை ('கட்அவுட்'டை)வாக்காளர்கள் மத்தியில், அவர்களது மனங்களில் எவ்வாறு பதிய வைப்பதென்பதே அந்தப் பிரச்சினை. அது எவ்வளவு இலேசான காரியமொன்றல்ல. ஏனெனில் மறுபக்கத்தில் மைத்திரிபால சிறிசேனவின் நிழலுரு பரபரப்பாக விற்பனையாகி வருகிறது. மைத்திரி நிர்வாகம் முற்றுமுழுதான மாற்றம், ஊழல்களற்ற அரசு, சுதந்திரமான நீதித்துறையும் பொலிஸ்துறையும் என்பன போன்ற வாசகங்கள் பொது மக்களைக் கவர்ந்து வருகின்றன. ஒரு வகையில் மைத்திரிபாலவின் நிழலுருவை இலேசில் சந்தைப்படுத்த இயலும். ராஜபக்ஷவின் நிழலுருவை சந்தைப்படுத்துவது சற்றுச் சிரமமானதே.

சிந்தித்துப் பாருங்கள், தொலைக்காட்சி விளம்பரத்தில் கூட, பத்து ஆண்டுகள் பழைமை வாய்ந்த கைத்தொலைபேசி வகையொன்றின் விற்பனையை விளம்பரத்தின் மூலம் அதிகரிக்க வைப்பது சிரமமானதொன்றே. ஏனெனில் காலத்துக்குக்காலம் கைத்தொலைபேசி வகைகளில் நவீன தொழில் நுட்ப வசதிகள் புகுத்தப்பட்டு சந்தைக்கு விடப்படுகின்றனவே? பழைய வகை தொலைபேசி வகையால் அவற்றுடன் போட்டி போட இயலாதல்லவா? இந்த முறை மஹிந்த தரப்புக்கு விசேட பரப்புரை வாசகங்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இருக்கும் ஒரே வழி சகல மின் கம்பங்களிலும் விளம்பரப் பதாகைகளை தொங்க விடுவது மட்டுமே. யார் என்ன கூறினாலும், அது எத்தகைய சட்டவிரோத செயற்பாடானாலும், அவற்றை எவராலும் அகற்றிவிட இயலாது. அவ்வாறு அவற்றை அகற்றுவதாயின் ஜனாதிபதியே நேரில் வந்தாக வேண்டும்.

அப்படியானால் போர் வெற்றி, நாட்டில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திப் பணிகள் இவை பற்றியெல்லாம் கூற இயலாதா? என்ற கேள்வி எழுவது நியாயமே.

அங்குதான் அரசியல் விமர்சகர்கள் முன்வைக்கும் அடிப்படைச் சிக்கலான கருத்து தலைதூக்குகிறது. அவர்களது கருத்தின்படி, எதிர்வரும் ஆறு ஆண்டுகளுக்கான நிர்வாக அதிகாரத்தைக் கோர, கடந்த ஆறு ஆண்டுகளில் மேற்கொண்ட செயற்பாடுகளைப் பட்டியல் இடுவதால் பயனேதுமில்லை. அடுத்துவரும் ஆறு ஆண்டுகள் காலத்தில் நாட்டுக்கு என்ன செய்யவுள்ளேன் என்றே கூற வேண்டுமென்பதே அவர்களது கருத்தாகும். அது மேசன் தொழிலாளியொருவர் ஒரு வீட்டைக் கட்டி உரிமையாளரிடம் கையளித்த பின்னர் அவரை அந்த வீட்டு உரிமையாளர் மீண்டும் அந்த வீட்டுக்கு வருமாறு அழைப்பதில்லை என்பதை ஒத்ததாகும். அதேவேளை மேற்கொள்ளப்பட்டதொரு அபிவிருத்தித்திட்டம் நியாயமற்றதானால், அதன் மூலம் பயனடையாத ஏனைய பிரதேச மக்கள் அரசு மீது அதிருப்தியும் கோபமும் கொள்வது இயல்பே, ஹம்பாந்தோட்டைக்குச் செய்த வசதி வாய்ப்புக்களை தமது பகுதிகளுக்கு ஏன் ஏற்படுத்திக் கொடுக்கவில்லையென புத்தளம் பகுதி மக்கள் அதிருப்தி அடையக் கூடும். அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதில் ஜே.ஆர். மற்றும் பிரேமதாஸ கைக்கொண்ட வழிமுறைக்கும் மஹிந்த கைக்கொண்ட வழி முறைக்கும் நிறையவே வேறுபாடுகள் உள்ளன. மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் நாட்டின் பெரும் பகுதிகள் நன்மையடைந்தன. மஹிந்தவோ தமது பிரதேசமான ஹம்பாந்தோட்டையை முன்னிலைப்படுத்தியே அபிவிருத்தித்திட்டங்கலை முன்னெடுத்தார். காலிக்கு அதிவேக மார்க்கத்தில் பயணிப்பது குறித்து சாதாரண பொதுமகனொருவர் மகிழ்ச்சியடைய முடியுமா? இதோ,இதுதான் முறையற்ற அபிவிருத்தித் திட்டங்களின் பலாபலன்.

மஹிந்த தரப்பினரின் மற்றொரு தவறு, புதிய பொது வேட்பாளர் குறித்துக் கருத்து வெளியிடாது புதிய பொது வேட்பாளரை ஆதரிக்கும் தரப்பினர் குறித்து விமர்சிப்பதாகும். இது நவீன வகையில் கைத்தொலைபேசி வகையொன்றைத் தயாரிக்கிறோம். அவற்றால் மூளைப் புற்றுநோய் ஏற்படக் கூடுமெனக் கூறுவதை ஒத்ததொன்று. போர் இடம்பெற்ற வேளையில் சமாதானத்தை ஏற்படுத்த முயன்ற ரணில், போர் முடிவடைந்த நிலையில் வடக்கில் போரைப் புதிதாக ஏற்படுத்த முனைகிறார், மைத்திரிபாலவை பொது வேட்பாளராக்கியுள்ளமை சர்வதேச நாடுகளின் சதியே என்பதெல்லாம் கேலிக்கு இடமான கருத்து வெளிப்பாடுகளே. சர்வதேச தலையீடுகளை எதிர்க்கும் ஹெல உறுமய, ஜே.வி.பி.தரப்புக்கள் அத்தகைய குற்றச்சாட்டை நம்பினால், பொதுவேட்பாளருக்கு ஆதரவளிக்க முடியுமா? இந்த நிலையில் அரசிலிருந்து வெளியேற முயலும் அமைச்சர்களுக்கல்லாது, மஹிந்தவுக்கு ஆதரவான தேர்தல் பரப்புரைச் சுலோகங்களை உருவாக்கி வழங்குபவர்களுக்கே மஹிந்த தரப்பு கையூட்டு வழங்க வேண்டிய நிலையே இன்று உருவாகியுள்ளது.

மைத்திரிபால தரப்புக்கோ அத்தகைய தேர்தல் பரப்புரை விளம்பரப் பதாகைகளை பெருமளவில் காட்சிப்படுத்தும் சக்தி கிடையாது. ஆனால் தேவைப்படும் அளவுக்கு அந்தத் தரப்பினரிடம் பரப்புரைச் சுலோகங்கள் உள்ளன.

ஆனால் மைத்திரிபால இன்று பிரபலஸ்தர்கள் சிலரிடம் சிறைப்பட்டுள்ளார் என்பது மட்டுமே உண்மையே. ஒரு புறத்தில் ரணில், மற்றொரு புறத்தில் சந்திரிகா, இவர்களை விட வேறொரு புறத்தில் சரத்பொன்சேகா இவற்றின் மத்தியில் மைத்திரிபாலவின் வெற்றிக்கு சிறுபான்மை இனத்தவர்களது வாக்குகளும் அவசியமாகியுள்ளன. இத்தகைய சிக்கலில் சிக்கியுள்ள மைத்திரிபால, ரணிலை, சந்திரிகாவை மற்றும் சரத்பொன்சேகாவைத் திருப்திப்படுத்த வேண்டியுள்ளது மட்டுமல்லாமல், சிறுபான்மையினரின் வாக்குகளைப் பெற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் முஸ்லிம் காங்கிரஸையும் திருப்திப்படுத்த வேண்டியுள்ளது. இத்தகைய நிலை உண்மையில் சர்க்கஸ் மேடையொன்றில் ஆறுபந்துகளை உயர எறிந்து அவற்றில் ஒன்றுதானும் நிலத்தில் விழவிடாமல் பிடித்துக்கொள்ள வேண்டிய சாகச விளையாட்டு வீரரின் நிலையை ஒத்ததொன்றே. இந்த நிலையில் மஹிந்த தரப்பினர் நூறு மில்லியன் ரூபா பணத்தைச் செலுத்தியேனும் நாட்டின் வாக்காளர்களது ஆதரவை ஈட்டத்தக்க தேர்தல் பரப்புரைச் சுலோகங்களை தேடிக்கொள்ளப் போகிறார்களா? அவ்வாறில்லாதுவிடில், போதிய அளவு சுலோகங்களைத் தம்வசம் வைத்துள்ள மைத்திரிபால தரப்பு மஹிந்த தோற்கடிக்கப்பட வேண்டும் என்பதுடன் மட்டும் தமது பரப்புரைச் சுலோகத்தை மட்டுப்படுத்திக் கொண்டு, தமது தரப்பைப் பாதுகாத்துக்கொண்டு மஹிந்த தரப்பின் ஆதரவு வாக்குகளின் ஒரு பகுதியைத் தாம் ஈட்டிக்கொள்ள முயலப் போகின்றதா? என்பவைதான் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் வெற்றியைத் தீர்மானிக்கப் போகின்றன.

# ஜனாதிபதியின் வேண்டுதல்களை

## திருப்பதியான் நிறைவேற்றுவாரா?



சேரலாதன்

மனதைத் தூய்மையாக வைத்திருக்கும் எவரும் ஆலயங்களுக்குச் சென்று இறைவனைத் தேடி வணங்க வேண்டிய அவசியமில்லை. தூய்மையான அவர்களின் மனங்களில் ஆண்டவன் தாமாகவே வந்து குடியமர்வார் என்று பெரியவர்கள் கூறுவார்கள்.

ஆனால் நாம் எமது மனதைத் தூய்மையாக வைத்திருப்பதற்கு முயல்கின்றோமோ இல்லையோ, ஆலயங்களுக்குச் சென்று வணங்குவதற்குத் தவறுவதில்லை.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்தியாவிலுள்ள திருப்பதி ஆலயத்துக்குச் சென்று வழிபாடுகளை மேற்கொண்டு விட்டுத் திரும்பியிருக்கிறார். ஜனாதிபதித் தேர்தலில் தமது வெற்றிக்கு உதவுமாறு திருப்பதியில் உறையும் வெங்கடாசலபதியிடம் அவர் வேண்டி நின்றிருப்பாரென்பதில் சந்தேகமில்லை.

திருப்பதியான் அவரது வேண்டுகோளை ஏற்றாரா இல்லையா என்பது எமக்குத் தெரியவரப் போவதில்லை. தேர்தல் முடிவுகள் வெளியாகும்போதுதான் இதை எம்மால் புரிந்துகொள்ள முடியும்.

தீவிர சிங்கள பௌத்தரான ஜனாதிபதி திருப்பதி சென்று வழிபாட்டில் ஈடுபட்டது தொடர்பாகச் சிலர் வியப்புத் தெரிவிக்கலாம். புத்தரும் இந்து மதத்தில் தோன்றியவர் என்பதைப் புரிந்து கொண்டவர்களுக்கு இது வியப்பை ஏற்படுத்திவிட மாட்டாது.

தமிழர்களைச் சின்னாபின்னமாக்கிச் சீரழித்த இறுதிப் போரை எவரும் இலேசில் மறந்துவிட முடியாது. இந்தப் போரின் வடுக்கள் இன்னமும் ஆறாத நிலையில் தமிழ் மக்களின் இன்னல்கள் தொடர்கின்றன. பல ஆயிரக்கணக்கானவர்கள் தமது உயிர்களை இழந்து, அங்கங்களை இழந்து, உடைமைகளை இழந்து தவித்த அந்தச் சோக வரலாறு உலகின் பேரிடர்களில் ஒன்றாகவே பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால் வடக்கு சோகத்தில் மூழ்கியிருக்க தெற்கில் ஆண்டுதோறும் போர் வெற்றிக் கொண்டாட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஒரு படி மேலே போய் போரின் போது இராணுவத்தினர் பொது மக்களை ஒருவரைக் கூடக் கொல்லவில்லையென அநுராதபுரத்தில் இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் வைத்துத் தெரிவித்திருக்கின்றார். ஜனாதிபதியின் இந்தக் கூற்றைக் கேட்கும்போது அவரது அகத்தூய்மை மீதான சந்தேகம் அதிகரிக்கவே செய்கின்றது. தமிழ் மக்கள் மீதான அவரது அக்கறையின்மையும் இதன் மூலமாகத் தெளிவாகின்றது.

ஒரு நாட்டின் ஜனநாயகம் நிலை நிறுத்தப்பட வேண்டுமாயின் அங்கு தேர்தல்கள் நேர்மையாகவும், அமைதியாகவும் இடம்பெறவேண்டுமென்பது பொது விதியாகும். மக்களின் மிகப்பெரிய ஜனநாயக உரிமையாகத்தேர்தல்கள் கருதப்படுகின்றன. ஆனால் ஜனநாயக நாடுகள் என்று கூறிக்கொள்ளும் பலவற்றில் இடம்பெறும் தேர்தல்கள் நீதியான முறையில் இடம்பெறுவதில்லை என்பது பொதுவான குற்றச்சாட்டாக அமைந்துள்ளது. அரச தரப்பினர் தேர்தலின்போது அரச வளங்களைப் பயன்படுத்துவதும், எதிரணியினரை அச்சுறுத்துவதும், தேர்தல் மோசடிகளில் ஈடுபடுவதும் வழக்கமானநிகழ்வுகளாகிவிட்டன.எமது நாட்டில்கூட இந்த நிலைதான் காணப்படுகின்றது.

> திருப்பதியான் இவரது வேண்டுகோளை ஏற்றாரா இல்லையா என்பது எமக்குத் தெரியவரப் போவதில்லை. தேர்தல் முடிவுகள் வெளியாகும்போதுதான் இதை எம்மால் புரிந்துகொள்ள முடியும்.

> **“ ஜனாதிபதித் தேர்தல் திகதி அறிவிக்கப்பட்ட நாளிலிருந்தே வன்முறைகள் தொடர்பான முறைப்பாடுகள் வெளிவரத் தொடங்கி விட்டன. எதிரணியினர் தாக்குதல்களுக்கு உள்ளாக்கப்பட்டமை, அவர்களின் வாகனங்கள் மற்றும் வீடுகள் சேதமாக்கப்பட் டமை, தேர்தல் பரப்புரைகள் இடம்பெறும் இடங்கள் மற்றும் தேர்தல் அலுவலகங்கள் தாக்கப்பட்ட சம்பவங்கள், அச்சுறுத்தும் நடவடிக்கைகள் என்பன தொடர்பாகவே முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டுள்ளன.**

ஜனாதிபதித் தேர்தல் திகதி அறிவிக்கப்பட்ட நாளிலிருந்தே வன்முறைகள் தொடர்பான முறைப்பாடுகள் வெளிவரத் தொடங்கி விட்டன.

எதிரணியினர் தாக்குதல்களுக்கு உள்ளாக்கப்பட்டமை, அவர்களது வாகனங்கள் மற்றும் வீடுகள் சேதமாக்கப்பட்டமை, தேர்தல் பரப்புரைகள் இடம்பெறும் இடங்கள் மற்றும் தேர்தல் அலுவலகங்கள் தாக்கப்பட்ட சம்பவங்கள், அச்சுறுத்தும் நடவடிக்கைகள் என்பன தொடர்பாகவே முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டுள்ளன. தற்போது கடற்படை முகாமில் வைத்து போலியான வாக்குச் சீட்டுக்கள் தயாரிப்பதற்கான முயற்சிகள் இடம்பெறுவது தொடர்பாகவும், முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது. இவற்றையெல்லாம் பார்க்கும் போது நாம் ஜன நாயக நாடொன்றில்தான் வசிக்கின்றோமா என்ற சந்தேகம் எழுகின்றது.

எப்படியாவது பதவியைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காக அதிகாரத்தில் இருப்பவர்கள் மேற்கொள்ளும் அடாவடித்தனங்கள் இந்த நாட்டுக்குச் சர்வதேச ரீதியில் பெருத்த அபகீர்த்தியை ஏற்படுத்திவிடப் போகின்றது.

இவற்றுக்கெல்லாம் பொறுப்புக் கூறவேண்டிய தார்மீகக் கடமை ஜனாதிபதிக்கே உண்டு. ஆனால் அவர் அதைத் தட்டிக் கழிப்பதையே காண முடிகின்றது. தேர்தல் வெற்றியைக் குறியாகக் கொண்டு அவர் இங்கு இடம்பெறும் மோசடிகளைக் கட்டுப்படுத்தாதுவிட்டால் சர்வதேசத்தின் பார்வையிலிருந்து அவர் தப்புவது கடினமாகவே இருக்கப் போகின்றது.

திருப்பதி சென்று பெருமாளிடம் வேண்டுதல்களை விடுப்பதால் மட்டுமேதிருப்பதியானின் அருட் பார்வை கிடைக்கப் போவதில்லை.எவருக்குஉதவவேண்டுமென்பதை இறைவன் நன்கறிவார். ஆகவே மனச்சாட்சிக்கு விரோத மில்லாத வகையில் முதலில் நடந்துவிட்டுப் பின்னர் இறை வனின் சந்நிதானத்துக்குச் செல்வதால் நாம் வேண்டுகின்ற பயன்களை அடைந்து கொள்ள முடியுமென்பதை எவரும் மறுக்க முடியாது.

# கருத்து

## வாசகர் திருமுகம்

### வீதிக்கு விடிவுகாலம் எப்போது?

சுன்னாகம் ஐயனார் ஆலயத்துக்குச் செல்லும் வீதி மிகவும் மோசமான நிலையில் காணப்படுகின்றது.
மழை காலத்தில் இந்த வீதியின் வடக்குப் பகுதியில் வெள்ளம் குளம் போன்று தேங்கி நிற்பதால் அதனூடாகப் பயணிப்பவர்கள் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். மேலும் இந்த வீதியின் ஏனைய பகுதிகளும் சேதமடைந்து காணப்படுவதுடன் பலத்த மழை பெய்யும்போது இதன் ஒரு பகுதியில் வெள்ளம் தேங்கி நிற்பதையும் காணமுடிகின்றது.
சுன்னாகத்தில் அமைந்துள்ள பிரதான ஆலயமொன்றுக்குச் செல்லும் இந்த வீதி இவ்வாறு மோசமாகச் சேதமடைந்து காணப்படுகின்றமை பலருக்கும் வேதனையை ஏற்படுத்தி வருகின்றது.
பிரதேச சபையோ அல்லது உரிய தரப்பினரோ இந்த வீதியைப் புனரமைப்பதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்பதே இந்தப்பகுதி மக்களதும் ஆலயத்துக்கு வருகை தருகின்ற பக்தர்களினதும் வேண்டுகோளாக உள்ளது. இந்த வீதி தொடர்ந்து புனரமைக்கப்படாதுவிட்டால் இதனூடாகப் போக்குவரத்து மேற்கொள்வதில் அதிக சிரமங்கள் ஏற்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

*ஓர் அன்பர், சுன்னாகம்.*

### விலைகளில் நிதானம் தேவை

யாழ்ப்பாணம் முனீஸ்வரன் வீதியில் அமைந்துள்ள நடைபாதைக் கடைகள் சிலவற்றில் அதிகரித்த விலையில் பொருள்கள் விற்பனையாவதை அவதானிக்க முடிகின்றது.
அண்மையில் நான் கைக்குட்டைகளை வாங்கவென அங்கு சென்றிருந்தேன். மழை பெய்துகொண்டிருந்ததால் பல கடைகளிலும் விசாரிக்க முடியாத நிலை எனக்கு ஏற்பட்டது.
இதனால் அங்குள்ள ஒரு கடையில் கைக்குட்டையின் விலையைக் கேட்டேன். அங்கு நின்ற ஊழியர் சோடி 200 ரூபாவெனக் கூறினார்.
இதைக்கேட்டதும் எனக்கு அதிர்ச்சியாக இருந்தது. அங்கு காண்பிக்கப்பட்ட கைக்குட்டையை ஒரு சோடி 100 ரூபாவுக்கு வாங்கியது எனக்கு நினைவில் வந்தது. ஆயினும் தற்போது விலைகள் அதிகரித்திருக்கலாம் என்ற எண்ணத்தில் விலையைச் சற்றுக் குறைக்குமாறு கேட்டுக்கொண்டேன். இறுதியில் 150 ரூபாவுக்குத் தருவதற்கு அந்தக் கடைக்காரர் சம்மதித்தார். நான் பின்னர் அதை வாங்கிக் கொண்டேன். ஒரு சிறிய பொருளுக்கு 50 ரூபா வித்தியாசத்தில் அங்கு விலை கூறப்பட்டுள்ளது. இதைப் போன்றுதான் ஏனைய பொருள்களுக்கும் இருக்குமென நம்புகிறேன்.
அங்குள்ள வியாபாரிகள் மனச்சாட்சியுடன் நடந்துகொண்டால் மக்கள் அங்கு அதிகளவில் சென்று பொருள்களை வாங்குவார்கள் என்பதுதான் உண்மை.

*க.தபேந்திரன், கொக்குவில்*

### சுத்தம் பேணுவது அவசியம்

யாழ்.நகரிலுள்ள உணவகங்கள் சிலவற்றில் மேசையைத் துடைத்துவிட்டு அதே கையால் உணவுகளை எடுத்துப் பரிமாறுகிறார்கள்.
சிலர் கைகளில் உறைகளை அணிந்துகொண்டு இதைக் செய்தாலும் அழுக்கு அழுக்குத்தான்.
சில கடைகளில் உபகரணங்களின் உதவியுடன் உணவுகளை எடுத்துப் பரிமாறுகிறார்கள்.
இந்த நடைமுறையை ஏனையவர்களும் பின்பற்றினால் நன்றாக இருக்கும். உணவுகள் சுவையாக இருந்தாலும் அவற்றைச் சுத்தமான வகையில் பரிமாறுவது நோய்கள் ஏற்படுவதைத் தடுக்கும் என்பதுடன் உண்பவர்களும் அருவருப்பின்றி உணவுகளை உண்ண முடியும்.

*சு.தாரணி, சுழிபுரம்.*

#### கேலிச் சித்திரம்





நன்றி: மவ்பிம

## ஒரு கப் 'டீ' குடிப்போமா?

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இப்போது அதிகளவான தமிழ் தொலைக் காட்சிகளைப் பார்க்கின்றார்போல் தெரிகின்றது. தமிழ்நாட்டு தொலைக் காட்சிகளில் தன்னைப் பற்றிப் பெருமையாக (?) என்னத்தைச் சொல்கின்றார்கள் என்றோ அல்லது தமிழக மீனவர்கள் சிறைப்பிடிப்பு தொடர்பில் தமிழகத்தில் நடக்கும் நாடகங்களைப் பார்ப்பதற்காகவோ, இவற்றைப் பார்கின்றார் போல் தெரிகின்றது. அதனால்தான் சூடான அரசியல் களத்தில் 'ஒரு கப் டீ' குடிப்பதைப் பற்றி பேசியிருக்கின்றார்.
அடிக்கடி சகல தமிழ் தொலைக்காட்சி அலைவரிசைகளிலும் புரூ தேயிலைக்கான விளம்பரம் வரும். சினிமா நட்சத்திரம் நடிகர் கார்த்தி மற்றும் காஜல் அகர்வால் ஆகியோர் அதில் நடிக்கின்றனர். 'நீங்க நேசிக்கிறவங்களைப் பற்றி உங்களுக்கு எவ்வளவு நல்லாத் தெரியும். ஒரு கப் புரூவுக்கு ரைம் ஒதுக்குங்க. அவங்களைப் பற்றி நல்லா தெரிஞ்சு கொள்ளுங்கோ' என்று அந்த விளம்பரத்தில் சொல்லப்படும்.
அதாவது ஒரு கப் 'புரூ' குடித்தால், உங்களுக்கு விருப்பமானவர்களைப் பற்றி நீங்கள் முழுமையாக அறிந்து கொள்ளலாம். அதனை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் பார்த்திருக்க வேண்டும். அதிலுள்ள வசனங்களை விளம்பரமாகவே நாங்கள் அப்படியே விட்டு விட்டோம். ஆனாலும் அதற்குள்ளும் விசயம் இருக்கின்றது என்பதைத் தேடிப் பிடித்துக் கண்டறிவர் ஜனாதிபதி மஹிந்த மாத்திரமே.
அநுராதபுரத்தில் இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும்போது, நான் எதிர்கட்சியினரைப் பணம் கொடுத்து வாங்கியதாகச் சொல்கின்றனர். அதற்காக நான் பணத்தைச் செலவு செய்யவில்லை. திஸ்ஸ அத்தநாயக்கா என்னுடன் இருந்து ஒரு கப் டீ மாத்திரமே குடித்தார். எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் என்னுடன் அமர்ந்து ஒரு கப் டீ குடித்தால் போதும் அவரும் ஆளுங்கட்சிக்கு வந்துவிடுவார்' என்று தெரிவித்திருந்தார்.
எப்போதுமே கூட இருக்கிறவர்களை விட, எதிரில் இருப்பவர்களைப் பற்றியே சிந்தனை அதிகமாக இருக்கும். அதனால்தான் எதிரணியை ஜனாதிபதி அதிகம் நேசித்திருக்கின்றார். அதன் விளைவாக இலகுவாக ஒரு கப் டீயுடன் தம் பக்கத்துக்கு அவர்களை இழுத்திருக்கின்றார்.
இதனால்தானோ என்னவோ, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூட்டமைப்பினரையும் அடிக்கடி சந்தித்து, ஒரு கப் 'டீ' கொடுக்கின்றார். கடந்த வரவு – செலவுத் திட்டத்தை சபையில் சமர்ப்பித்த பின்னரும் ஜனாதிபதி கொடுத்த விருந்துபசாரத்தில் தன்னுடன் வைத்து ஒரு கப் 'டீ' கொடுத்திருக்கின்றார். ஆனால் அவர்களை, ஜனாதிபதியால் தனது பக்கத்துக்கு இழுத்துக்கொள்ள முடியவில்லை.
ஜனாதிபதி மஹிந்த ஒரு கப் டீக் கதை சொல்லலாம். எந்தக் கதையையும் தேர்தல் பரப்புரையில் அவரால் விட முடியும். ஆனால் மக்களுக்குத் தெரியும் ஒரு கப் டீயுடன் கட்சி மாறினார்களா ? அல்லது கட்டுக் கட்டாக டொலர்கள் கைமாறியதால் கட்சி மாறினார்களா என்பது. மக்கள் விழிப்பாக இருக்கின்றார்கள். நீங்கள் புரூவுடன் கப் டீயை வைத்துப் புருடா விடலாம். ஆனால் அதை நம்பி ஏமாற மக்கள் தயாரில்லை.
தேர்தல் முடிவுகள் சொல்லும், மக்கள் எந்தளவு தூரத்துக்கு உங்கள் புருடாக்களை எல்லாம் ஏற்றுக் கொண்டிருக்கின்றார்கள் என்று.

பத்தி எழுத்து

# சிறுவர்









கே.அச்சுதன், தரம்–9ஜி,
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

## மனித உடலைப் பற்றிய தகவல்கள்

மனிதனின் மூளை ஆண்களுக்கு மூன்று பவுண்டு எடையுடையதாகவும், பெண்களுக்கு அதிலிருந்து நான்கு அல்லது ஐந்து அவுன்சு குறைந்தும் காணப்படும்.



மனிதனின் பற்களின் மேலுள்ள எனாமல் தான்எமது உடலில் கனமான பகுதியாகும்.

சராசரியாக 70 வயது வரை வாழும் மனிதன் தனது வாழ்நாளில் கிட்டத்தட்ட 100 தொன் உணவை உட்கொள்கிறான். இது அவனது உடலின் எடையைப் போ ன்று 1250 மடங்கு ஆகும்.

மனிதன் ஒரு நாளில் சராசரியாக 455 கன அடி அளவு காற்றைச் சுவாசித்து வெளிவிடுகிறான்.

மனிதனது சராசரி வயதான 70 ஆண்டுகளில் தூக்கத்திற்கு மட்டும் 23 ஆண்டுகள் போய்விடுகின்றன. பேசுவதில் 13 ஆண்டுகள் கழிந்துவிடுகின்றன. உண்பதில் 6 ஆண்டுகள் போய்விடுகின்றன. மனித உடலில் வெப்பத்தை உணரும் மையங்கள் சுமார் 30 ஆயிரம் உள்ளன.

மனித உடலின் மூக்குநுனி, கைவிரல்கள், கால்விரல்கள், முதுகின் கீழ்ப்பகுதி போன்றவைதான் குளிரை நன்கு உணரக்கூடிய பகுதிகளாகும்.

மனித உடலின் தோலின் மீது வலியை உணரக்கூடிய மையங்கள் 20 இலட்சம் முதல் 40 இலட்சம் வரை உள்ளன.

உடலின் இருபாதிகளில் ஒரு பகுதி மற்றதை விட சிறிது பெரிதாக இருக்கிறது. சராசரி மனிதனின் உடலில் போர்த்தப்பட்டுள்ள தோலின் பரப்பளவு 6 சதுர மீட்டர்களாக இருக்கின்றது. இதயத்திலிருந்து வெளிப்படும் இரத்தம் உடலில் ஒருமுறை சுற்றி வர 30 வினாடி நேரம் எடுத்துக் கொள்கிறது. எமது உடலிலுள்ள மொத்த நரம்புகளின் எண்ணிக்கை 72,000 ஆகும்.

எமது உடலிலுள்ள தசைகளின் எண்ணிக்கை 440.

மனித உடலில் 72 கிலோ மீட்டர் நீளமுள்ள உணர்ச்சி நரம்புகள் இருக்கின்றன. இவை மணிக்கு 400 கிலோ மீட்டர் வேகத்தில் செய்திகளை எடுத்துச் செல்கின்றன.

எமது கண்களால் தலையைத் திருப்பாமலே 320 டிகிரி வரை பார்க்க முடியும்.

எமது உடலின் சிறிய எலும்பு குருத்தெலும்பு.

எமது உடலின் நீளமான எலும்பு தொடை எலும்பு.

நாம் கோபம் கொள்ளும் பொழுது 50 தசைகளும், சிரிக்கும் போது 15 தசைகளும் இயங்குகின்றன.

மனிதனின் உள்ளங்கையில் ஒவ்வொரு சதுர அங்குலத்துக்கும் சுமார் 3000 வியர்வைச் சுரப்பிகள் வரை இருக்கின்றன.

எம்முடைய உடலின் வெப்பத்தில் 80 சதவிகிதம் தலையிலிருந்தே வெளியேறுகிறது.

சாதாரணமாக 72 ஆண்டுகள் வாழும் ஒரு மனிதனின் இதயம் 3000 மில்லியன் முறை துடிக்கிறது.

## காணாமல் போன கடிகாரம்



ஒருஊரில் ஒரு விவசாயி பண்ணை ஒன்றை நடத்தி வந்தார். ஒரு நாள் அவருடைய கைக்கடிகாரம் தொலைந்து போய்விட்டது. அந்தக் கடிகாரம் அவருக்கு மிகவும் பிடித்தமானது என்பதால், அதைக் காணாமல் மிகவும் கவலைப்பட்டார். அங்கிருந்த இடமெல்லாம் தேடிப்பார்த்தும் கிடைக்கவில்லை.பண்ணைக்கு வெளியே பல சிறு வர்கள் விளையாடிக் கொண்டிருந்தனர். அவருக்குப்புதிய யோசனை ஒன்று வந்தது. அங்கிருந்த சிறுவர்களை கூப்பிட்டார். தொலைந்து போன கடிகாரத்தைக் கண்டுபிடித்துத் தருபவருக்குப் பரிசு தருவதாகச் சொன்னார். கடிகாரத்தைக் கண்டு பிடித்துக் கொடுத்தால் பரிசு என்பதால் சிறுவர்கள் அனைவரும் பண்ணை முழுவதும் தேடினார்கள். ஆனால் அவர்களுக்கும் அந்தக் கடிகாரம் கிடைக்கவில்லை. சோர்ந்து போன அவர் கடிகாரம் அவ்வளவுதான் என்ற மனநிலையில் சிறுவர்களைத் திருப்பி அனுப்பினார். வெளியில் சென்ற ஒரு சிறுவன் மட்டும் அங்கு திரும்பி வந்தான். ஐயா, எனக்கு இன்னொரு முறை வாய்ப்பு கொடுத்தால் அந்தக் கைக்கடிகாரத்தைக் கண்டுபிடித்து விட முடியும்' என்றான். அந்த விவசாயியும் அதற்குச் சம்மதித்தார். அந்தச் சிறுவன் சிறிது நேரத்தில் கடிகாரத்துடன் வந்தான். விவசாயிக்கு ஆச்சரியம்! எப்படி இந்தக் கடிகாரத்தைக் கண்டுபிடித்தாய்? என்று கேட்டார். ஐயா, அப்போது பல சிறுவர்கள் பேசிக் கொண்டே தேடியதால் இந்தக் கடிகாரத்தை என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை. இப்போது யாருமில்லை, எந்தச் சப்தமும் இல்லை. எனவே தரையில் அமர்ந்து கவனமாகக் கேட்டேன். கடிகாரத்தின் டிக் டிக் ஓசை கேட்கும் இடத்தைக் கவனித்து, அங்கு போய் கடிகாரத்தைக் கண்டுபிடித்தேன் என்றான் சிறுவன்.சிறுவனின் அறிவைப் பாராட்டி அவனுக்குப் பரிசளித்து அனுப்பினார்.

**நாள் வாடகைக்கு**

ஒருவருக்கு 600/=, இருவருக்கு 1500/=, நால்வருக்கு 2500/=
Hotel Villa City,
422, Galle Road, வெள்ளவத்தை.
(ஓ18190) (12.3)

**தவறிவிட்டது**

பொடிய வளவு, இடைக்காடு, அச்சுவேலியைச் சேர்ந்த **கணபதிப்பிள்ளை வல்லிபுரம்** என்பவரது தேசிய அடையாள அட்டை (471943550V), சாரதி அனுமதிப்பத்திரம் என்பன கடந்த 06.12.2014 ஆஸ்பத்திரி வீதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.
தொடர்பு: 077 637 7603 (54882) (4.3.6)

**வீடு விற்பனைக்கு**

உடுவில் மேற்கில் (உடுவில் மகளிர் பாட சாலைக்கு அருகில்) 2¾ பரப்புக் காணியில் அமைந்துள்ள ஐந்து அறைகள் கொர்ண்ட வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 819 2725, 077 126 1506
(54115)(4.3.6)

**மணமகள் தேவை**

* 80இல் பிறந்த, 4இல் செவ்வாய், 28 பாவமுடைய லண்டன் பிரஜா உரிமைபெற்று வந்துள்ள மணமகனுக்கு படித்த, அழகான மணமகள் தேவை.
* 82இல் பிறந்த, 2இல் செவ்வாய், 15¼ பாவமுடைய சுவிஸ் பிரஜா உரிமைபெற்ற எக்கவுண்டன் மணமகனுக்கு படித்த மணமகள் தேவை.
* 81இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல், 23¼ பாவமுடைய லண்டன் பிரஜா உரிமை பெற்ற இஞ்சினியர் மணமகனுக்குப் பட்டதாரி மணமகள் தேவை.

தொடர்பு: கமலக்கண்ணன் திருமணசேவை,
இல.62, இராமலிங்கம் வீதி,
பூங்கனிச்சோலையடி, முடமாவடி,
யாழ்ப்பாணம்.
077 607 0862 (54888) (12.6)

**இப்பொழுது திரையில்**




Majestic Cineplex Jaffna கார்கிள்ஸ் ஸ்குவெயர்
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
8.30am, 12.00noon, 3.30pm, 7.00pm, 10.30pm
விசாரணை ☎ 021-2227712
www.facebook.com/CeylonTheatres www.ceylontheatres.com

**தொண்டமனாறு வெளிக்கள நிலையம்**
**பொதுக்கூட்ட அறிவித்தல்**
FWC

மேற்படி நிலையத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் **எதிர்வரும் (28.12.2014) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு தொண்டமனாறு வெளிக்கள நிலைய மண்டபத்தில்** நடைபெறும்.
அங்கத்தவர்களை கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொர்ள்கின்றோம்.
(54871) (45.6.) செயலாளர்

**செல்லா சினிமா** யாழ்ப்பாணம்

விஜய், சமந்தா நடிப்பில்
**கத்தி**
(தினசரி 4 காட்சிகள்)
10.30, 2.30, 6.30, 9.30



எமது செல்லா சினி திரையரங்கில் உங்களது விளம்பரங்களை காட்சிப்படுத்த
அழையுங்கள்: 077 326 6949

**பணியாளர்கள் வேண்டுகை**

* இயந்திர இயக்குநர்கள் (ஆண்கள்)
* கணினி இயக்குநர்கள் (இருபாலாரும்)
* புத்தகம் கட்டுநர் (இருபாலாரும்)
* அலுவலக உதவியாளர்கள் (ஆண்கள்)

அச்சகங்களில் வேலை செய்பவர்களுக்கு முன்னுரிமை.
பழக விரும்புபவர்களும் உள்வாங்கப்படுவர்.
தங்களின் திறமைக்கேற்ற கூடிய வேதனம் வழங்கப்படும்.
சுயவிவரக்கோவையுடன் நேரில் வரவும்.

**ஷாம்பவி பதிப்பகம்**
கன்னாதிட்டிச் சந்திக்கு அருகில்,
276, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 222 4143 (ஓ17996) (12.6)

**தேவை**

யாழ். மாநகர சபை எல்லைக்குள் வீடு அல்லது காணி விற்பனைக்கு அல்லது வாடகைக்கு சிறிய குடும்பத்துக்கு தேவை.
தொடர்பு: 077 301 3700 (54892) (45.6)

**விற்பனைக்கு**

இரும்பு பட்டத்தால் செய்யப்பட்ட 10×10 அளவு விறாக்கை இறக்குமதி செய்யப்பட்ட தகரத்தால் செய்யப்பட்ட 12×12 அளவு கதவுகள் 1¼ இஞ்சி கம்பியால் செய்யப்பட்ட 10×10 அளவு தடுப்பு வேலி இரண்டு, 300 Kg எலக்ரோனிக் தராசு என்பன விற்பனைக் குண்டு.
தொடர்பு: 077 728 3811 (54895) (45.6)

# சாவகச்சேரி நகராட்சிமன்றம் 2015 ஆம் ஆண்டுக்கான கேள்வி அறிவித்தல்

சாவகச்சேரி நகராட்சிமன்ற அதிகார எல்லைக்குட்பட்ட கீழ்க்காணும் கருவாட்டுக் கடைகளை 2015ஆம் ஆண்டு தை மாதம் முதலாம் திகதி தொடக்கம் மார்கழி 31 ஆம் திகதி வரை குத் தகைக்கு விடுவதற்கான கேள்விகள் 23.12..2014ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணி வரை சாவகச்சேரி நகராட்சிமன்ற அலுவலகத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்று முற்பகல் 11.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அத்தருணம் கேள்விக்காரரோ அல்லது அவரது பிரதி நிதியோ சமுகமளிக்கலாம்.

கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, மூலப்பிரதியை தவிசாளர், நகராட்சி மன்றம், சாவகச்சேரி என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு, தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு, பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடுதல் வேண்டும். (எக்காரணம் கொண்டும் அன்று முற்பகல் 10.00 மணிக்குப் பின்னர் சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.) இணைப் பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சி திணைக்களம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

கேள்விப் பத்திரங்கள் கீழ்க்குறிப்பிட்ட மீளளிக்கப்படாத படிவக்கட்டணமும், மீளளிக்கப் படக் கூடிய வைப்புப்பணமும் செலுத்தி நகராட்சிமன்ற அலுவலகத்தில் **22.12.2014** ஆம் திகதி திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் பத்திரங்களை பெறுபவர்கள் தமது தேசிய அடையாள அட்டையைக் கொண்டு வருதல் வேண்டும்.

எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச் சபைக்கு பூரண அதிகாரம் உண்டு. ஏற்றுக்கொள்ளக்கூடிய குறைந்த கேள்வித்தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்வி வைப்புப்பணம் மீளளிக்கப்பட மாட்டாது. தெரிவு செய்யப்படும் கருவாட்டுக்கடைகளுக்குரிய கேள்விகாரர் கேள்வித் தொகையின் **2/3** பகுதியை 31.12.2014 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்ள வேண்டும். மேலதிக விவரங்களை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

- **இந்நகராட்சிமன்றத்தின் கறுப்புப் பட்டியலில் உள்ளவர்கள் இக்கேள்விகளுக்கு விண்ணப்பிக்க முடியாது.**

**2015 ஆம் ஆண்டு கருவாட்டுக்கடைகளுக்கான குத்தகை அட்டவணை**

| இல | குத்தகை விவரம் | ஆகக்குறைந்த கேள்வித்தொகை (இதர வரிகள் தவிர) | கேள்வி வைப் புப் பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப்படிவக் கட்ட ணம் (இதர வரிகள் தவிர) (மீளளிக்க முடியாதது) |
|---|---|---|---|---|
| 01 | கருவாட்டுக் கடை - இல. 01 | 75,000.00 | 750.00 | 1,000.00 |
| 02 | கருவாட்டுக் கடை - இல. 02 | 75,000.00 | 750.00 | 1,000.00 |

குறிப்பு: இந்நகராட்சிமன்றத்தின் கருவாட்டுக்கடைகளிலிருந்து **1Km** சுற்று வட்டாரத்திற்குள் தனியார் எவரும் கருவாட்டு விற்பனை நிலையம் அமைக்க அனுமதிக்கப்பட மாட்டாது.

நகராட்சிமன்றம்,
சாவகச்சேரி.
12.12.2014

இ.தேவசகாயம்பிள்ளை,
தவிசாளர்,
நகராட்சிமன்றம் சாவகச்சேரி.

(C/18250)(10.6)


# வணிகம்



# மாணவர்களின் இறுதித் தெரிவே தனியார் உயர் கல்வி நிறுவனங்கள்

## பீகாஸ் தலைவர் அப்துல் ரஹ்மான்

காத்தான்குடி, டிசெ. 13

'இலங்கையில் வளர்ச்சியடைந்து வரும் தனியார் உயர்கல்வித் துறை, மாணவர்களுக்குப் பல வாய்ப்புக்களைக் கொடுத்தாலும் மாணவர்கள் தமது இறுதித் தெரிவாகவே தனியார் உயர் கல்வி நிறுவனங்களைத் தெரிந்தெடுக்க வேண்டும்' என பீகாஸ் கம்பஸ் உயர் கல்வி நிறுவனத்தின் தலைவர்பொறியியலாளர்அப்துர்ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

கடந்த 6ஆம் திகதி சனிக்கிழமை காத்தான்குடி ஹிஸ்புல்லாஹ் மண்டபத்தில் பீகாஸ் கம்பஸ் மட்டக்களப்பு வளாகத்தினால் நடத்தப்பட்ட சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில், 'உயர்தரக் கல்வியைப் பூர்த்தி செய்யும் மாணவர்கள் பலர் தமது உயர் கல்விக்காகத் தனியார் உயர் கல்வி நிறுவனங்களை நாடுகின்றனர். அரச பல்கலைக் கழகங்களில் அனுமதிகள் கிடைக்காத மாணவர்களுக்குத் தனியார் உயர்கல்வி நிறுவனங்கள் பல்வேறு மாற்று வாய்ப்புக்களை வழங்குகின்றன. இருந்தாலும் அரச பல்கலைக்கழகங்களின் கற்றல் வசதிகள், வளங்கள் மற்றும் கற்கைக்கான சூழல் என்பவற்றுக்கு ஈடான வளங்களை இலங்கையில் தனியார் உயர் கல்வி நிறுவனங்கள் கொண்டிருக்கவில்லை.

மாணவர்கள் தாங்கள் எதிர்பார்க்கும் துறைகளில் உயர் கல்விக்கான அனுமதியை அரச பல்கலைக் கழகத்தில் பெற்றுக் கொள்வதை நோக்கமாகக் கொண்டிருக்கவேண்டும். உயர்தரப் பரீட்சையின் ஊடாக மூன்று முறை முயற்சித்ததன் பின்னும் அரச பல்கலைக் கழக அனுமதி கிடைக்காவிட்டால் உங்களது இறுதித் தெரிவாக தனியார் உயர் கல்வி நிறுவனங்களைத் தேர்ந்தெடுக்க முடியும்' எனத் தெரிவித்தார். உயர்தரப் பரீட்சை எழுதிய மட்டக்களப்பு பிரதேச மாணவர்களுக்கான ஒருவாரகால இலவச பாடநெறி ஒன்றை பீகாஸ் கம்பஸ், மட்டக்களப்பு வளாகம் நடத்தியிருந்தது. இந்தப் பயிற்சி நெறியில் இணைந்து பயிற்சி நெறியை பூர்த்தி செய்த 193 மாணவர்களுக்கு நிகழ்வின்போது சான்றிதழ்கள் வழங்கப்பட்டமைகுறிப்பிடத்தக்கது. (த-10)


# நல்லூர் பிரதேச சபை, கொக்குவில். குத்தகைக்கான மீள்கேள்வி அறிவித்தல்-2015.

04.11.2014ஆம், 28.11.2014ஆம் திகதிகளில் கோரப்பட்ட கேள்வி அறிவித்தலின் பிரகாரம் 2015ஆம் ஆண்டுக்கு பின்வரும் சந்தை, இறைச்சிக்கடைகளுக்கான மீள்கேள்வி கோரப்படுகின்றது.

| இல | சந்தைகள்,(துவிச்சக்கர வண்டிப்பாதுகாப்பு நிலையங்களுடன்), இறைச்சிக்கடைகள் | மீளளிக்கப் படாத கேள்விப் படிவக் கட்டணம் | மீளளிக்கப் படும் கேள்வி வைப்புப் பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த தொகை (வற்வரி தவிர்ந்த) ரூபா. |
|---|---|---|---|---|
| நல்லூர் உப அலுவலகம் | | | | |
| 1. | திருநெல்வேலிச்சந்தை (துவிச்சக்கர வண்டிப்பாதுகாப்பு நிலையத்துடன்) | 1000.00 | 15000.00 | 15,900,000.00 |
| 2. | திருநெல்வேலிச்சந்தை கோழி இறைச்சிக்கடை இல 1 | 500.00 | 5000.00 | 351,100.00 |
| 3. | திருநெல்வேலிச்சந்தை கோழி இறைச்சிக்கடைஇல 2 | 500.00 | 5000.00 | 250,300.00 |

**கொக்குவில் சந்தை புதிய கடைகளுக்கான மீள்கேள்வி அறிவித்தல்**

| இல | இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடைகள் | மீளளிக்கப் படாத கேள்விப் படிவக் கட்டணம் | மீளளிக்கப் படும் கேள்வி வைப்புப்பணம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த தொகை (வற்வரி தவிர்ந்த) ரூபா. |
|---|---|---|---|---|
| கொக்குவில் உப அலுவலகம் | | | | |
| 1. | கொக்குவில் சந்தை மாட்டிறைச்சிக்கடை இல 1 | 500.00 | 5000.00 | 356,878.00 |
| 2. | கொக்குவில் சந்தை மாட்டிறைச்சிக்கடை இல 2 | 500.00 | 5000.00 | 356,878.00 |
| 3. | கொக்குவில் சந்தை கருவாட்டுக்கடை இல 1 | 500.00 | 5000.00 | 81,700.00 |
| 4. | கொக்குவில் சந்தை கருவாட்டுக்கடை இல 2 | 500.00 | 5000.00 | 81,700.00 |

கேள்விப்படிவம் வழங்கப்படும் திகதி : 15.12.2014 திங்கட்கிழமை தொடக்கம் 18.12.2014 வியாழக்கிழமை 12 மணி வரை
கேள்விப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி : 19.12.2014 வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணிவரை
கேள்வி திறக்கும் திகதி : 19.12.2014 வெள்ளிக்கிழமை பி.ப.2.00 மணி
குத்தகை தொடர்பான மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

நல்லூர் பிரதேச சபை,
கொக்குவில்.
13.12.2014

ப.வசந்தகுமார்,
தவிசாளர்,
நல்லூர் பிரதேசசபை.

(C/18249)(10.6)


# சர்வதேச வர்த்தக கண்காட்சி யாழில்

## ஜனவரி 23இல் ஆரம்பம்

2015ஆம் ஆண்டின் யாழ்ப்பாண சர்வதேச வர்த்தகக் கண்காட்சி எதிர்வரும் ஜனவரி மாதம் 23 ஆம் திகதி தொடக்கம் தொடர்ந்து 3 தினங்கள் நடைபெறவுள்ளது.

இந்தக் கண்காட்சியில் பங்குபற்றவுள்ளநிறுவனங்களைபதிவு செய்யும்நடவடிக்கைகளும்அதற்கானமுன்னாயத்தங்களும்நடைபெற்று வருகின்றன.

வடக்கின்மிகப்பிரசித்தம்வாய்ந்த நிகழ்வாக யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக்கண்காட்சி வருடந்தோறும் யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்டு வருகின்றது.

6 ஆவது கண்காட்சி 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 23ஆம் திகதி முதல் 25ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணம் சுப்ரமணியம் பூங்காவுக்கு முன்பாக அமைந்துள்ள யாழ்.மாநகர சபை மைதானத்தில் பிரமாண்டமாக நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

வழமைபோன்று யாழ்ப்பாணம் வர்த்தக தொழிற்றுறை மன்றம், வரையறுக்கப்பட்ட இலங்கைக் கண்காட்சிகள், மாநாடுகள் சேவைகள், தனியார் நிறுவனங்கள் ஆகியவை இணைந்து இந்த வர்த்தகக் கண்காட்சியை ஏற்பாடு செய்துள்ளன.

வடபகுதிக்கும் இலங்கையின் ஏனைய பிரதேசங்களுக்கும் இடையே ஓர் இணைப்பை ஏற்படுத்தவும் வர்த்தகப்பரிமாற்றங்களை ஏற்படுத்துவதற்காகவும் வர்த்தக மற்றும் கைத்தொழில் தொடர்புகளைப் பலப்படுத்துவதில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கும் நோக்குடன் இந்தக் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

250 இற்கும் மேற்பட்ட பல்வேறு தரப்பட்ட துறைசார் கைத்தொழில் மற்றும் வர்த்தகத் துறையினர் கண்காட்சியில் தத்தமது உற்பத்திகள் மற்றும் சேவைகளை வழங்கவுள்ளனர். வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த உற்பத்தியாளர்கள் மற்றும் சேவை வழங்குநர்களும் இந்தக் கண்காட்சியில் பங்குபற்ற முடியும். ஆர்வமுடையவர்கள் இல.124, இராசாவின்தோட்டம் வீதியில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் வர்த்தக தொழிற்றுறை மன்றத்துடன் தொடர்புகொண்டு எதிர்வரும் 23 ஆம் திகதிக்கு முன்னதாகப் பதிவுகளை மேற்கொள்ள முடியும். (த-14)

## டுவிற்றர் தளம் தரும் அதிரடி வசதி


முன்னணி சமூகவலைத்தளங்களுள் ஒன்றாகத் திகழும் டுவிற்றர், பயனர்களின் நலன் கருதி புதிய வசதி ஒன்றை அறிமுகம் செய்துள்ளது.

அதாவது, சமூக வலைத்தளங்களின் ஊடாக இன்று பல்வேறு அத்துமீறல்கள் நிகழ்கின்றன. இவ்வாறான தவறுகளைச் செய்பவர்களைத் தடை செய்யும் முகமாக அல்லது அவர்கள் தொடர்பாக முறைபீடு செய்யும் முகமாக Block or Report எனும் வசதி அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

இதன் மூலம் ஒன்லைன் மூலமான துஷ்பிரயோகங்கள், துன்புறுத்தல்களை குறைக்க முடியும் என எதிர் பார்க்கும் டுவிற்றர் சேவை எதிர்வரும் வாரங்களில் அனைத்துப் பயனர்களுக்கும் இந்த வசதியை ஏற்படுத்தித் தரவுள்ளது.

தற்போது இந்தச்சேவை சிறிய குழுவாக உள்ள பயனர்களுக்கு மட்டுமே ஏற்படுத்தித் தரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




## புதிய வசதியுடன் இணைய உலாவி

Mozilla நிறுவனம் தனது Firefox Beta உலாவியில் புதிய வசதி ஒன்றையும், உள்ளடக்கியுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

Firefox Hello என்ற இந்த வசதி, உலாவியின் ஊடாக நேரடியாகவே வீடியோ அழைப்புக்களை இலகுவாக ஏற்படுத்தக்கூடிய வகையில் தரப்பட்டுள்ளது.

இவை தவிர நண்பர்கள், குடும்பத்தினருடன் வீடியோ சற்றிங்கில் ஈடுபடும் வசதியையும் கொண்டுள்ள இந்த உலாவியில் உள்ள குறைபாடுகளைக் கண்டறியும் பொருட்டு சோதனைப் பதிப்பாக வெளியிட்டுள்ளது.

## இயங்குதளத்துடன் அறிமுகமாகும் MOTO G



Motorola நிறுவனம் கடந்த வருடம் Moto G என்ற ஸ்மார்ட் கைபேசியை அறிமுகம் செய்திருந்தது. இந்த நிலையில் மீண்டும் கூகுளின் புதிய இயங்குதளமான Android 5.0 Lollipop பை நிறுவி இந்தியாவில் அறிமுகம் செய்கின்றது.

இந்தக்கை பேசி 4.5 அங்குல அளவு, 720 மு 1280 Pixel Resolution உடைய தொடுதிரையைக் கொண்டுள்ளதுடன், 1.2 GHz வேகத்தில் செயலாற்றக்கூடிய Qualcomm MSM8226 Snapdragon 400 Processor, பிரதான நினைவகமாக 1 GB RAM, 16GB சேமிப்பு நினைவகம் என்பவற்றைக் கொண்டுள்ளது.

இதில் 5 மெகாபிக்சல்களை உடைய பிரதான கமெரா, 1.3 மெகாபிக்சல்களை உடைய வீடியோ அழைப்புக்களை ஏற்படுத்துவதற்கான கமெரா என்பனவும் தரப்பட்டுள்ளன.

## புத்திசாலி ஐ-போன்

பல ஆயிரங்கள் கொடுத்து ஆசை ஆசையாக வாங்கும் ஸ்மார்ட் போன்கள் ஒரு நொடிப் பொழுதில் கைதவறிக் கீழே விழும்போது ஏற்படும் தவிப்பு சொல்ல முடியாதது. மேலும் அதில் நாம் சேமித்து வைத்திருந்த செல்போன் எண்கள் உள்ளிட்டவை அனைத்தையும் மீட்க முடியுமா என்ற பரிதவிப்பு பலருக்கும் ஏற்படுவதுண்டு. இதைப் போக்கும் வகையில் புதிய வகை புத்திசாலி ஐ-போன்களை உருவாக்குகிறது அப்பிள் நிறுவனம். இந்த ஸ்மார்ட் போன்கள் கீழே விழும் போது அதிலுள்ள சென்சார்கள் செயற் பட்டு முக்கியமான பகுதிகள் சேதமடைவதைத் தடுத்து விடும். கீழே விழுவதில் ஏற்படும் சேதத்தைக் கணக்கிட்டு முக்கியமான பகுதிகளை போனின் மையப் பகுதிக்கு நகர்த்திவிடும். போன் கீழே விழும்போது அதிலுள்ள சென்சார்கள் போனின் முக்கிய பகுதிக்குத் தகவல் அனுப்பி விடும். அப்போது அதிலுள்ள மோட்டர் விரைவாகச் செயற்பட்டு ஐ-போன் பக்கவாட்டில் விழும்படி செய்து சேதத்தின் அளவைக் குறைத்துவிடும்.




## நானாட்டான் பிரதேச சபை
## கேள்வி அறிவித்தல் - 2015

கீழ் குறிப்பிடப்படும் மீன் சந்தை. இறைச்சிக்கடைகளை 2015 ஆம் ஆண்டுக்கு (01.01.2015 – 31.12.2015) குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றது.

கேள்விப் பத்திரம் வழங்கப்படும் திகதி : 13.12.2014 – 19.12.2014
கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் திகதி : 22.12.2014 முற்பகல் 10.00 மணி வரை
கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி : 22.12.2014 முற்பகல் 10.00 மணி

கேள்விகள் "தவிசாளர், நானாட்டான் பிரதேச சபை, நானாட்டான்" எனும் முகவரிக்கும், எதிர்வரும் 22.12.2014 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக நேரடியாகவோ. அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

| இல | குத்தகை விவரம் | கேள்விப் பத்திரக் கட்டணம் | கேள்வி வைப்பு | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை | மாதாந்த வாடகை |
|---|---|---|---|---|---|
| நானாட்டான் உப அலுவலகம் | | | | | |
| 01 | மாட்டிறைச்சிக் கடை நானாட்டான் | 1,000.00 | 22,000.00 | 220,000.00 | 500.00 |
| 02 | மாட்டிறைச்சிக்கடை அளவக்கை | 1,000.00 | 14,000.00 | 140,000.00 | 500.00 |
| 03 | மாட்டிறைச்சிக்கடை இலந்தமோட்டை | 1,000.00 | 10,000.00 | 100,000.00 | 500.00 |
| 04 | மாட்டிறைச்சிக்கடை நறுவிலிக்குளம் | 1,000.00 | 16,500.00 | 165,000.00 | 500.00 |
| 05 | கோழி இறைச்சிக்கடை நானாட்டான் | 1,000.00 | 14,000.00 | 140,000.00 | 500.00 |
| 06 | கோழி இறைச்சிக் கடை அளவக்கை | 1,000.00 | 7,000.00 | 70,000.00 | 500.00 |
| முருங்கன் உப அலுவலகம் | | | | | |
| 01 | மாட்டிறைச்சிக் கடை பரிகாரிகண்டல் | 1,000.00 | 22,000.00 | 220,000.00 | 500.00 |
| 02 | மாட்டிறைச்சிக் கடை சிறுக்கண்டல் | 1,000.00 | 28,000.00 | 280,000.00 | 500.00 |
| வங்காலை உப அலுவலகம் | | | | | |
| 01 | மாட்டிறைச்சிக் கடை இல – 01 வங்காலை | 1,000.00 | 27,500.00 | 275,000.00 | 500.00 |
| 02 | மாட்டிறைச்சிக் கடை இல - 02 வங்காலை | 1,000.00 | 27,500.00 | 275,000.00 | 500.00 |
| 03 | கோழி இறைச்சிக்கடை வங்காலை | 1,000.00 | 27,000.00 | 270,000.00 | 500.00 |
| 04 | வங்காலை மீன் கடை | 1000.00 | 8,000.00 | 80,000.00 | |

நானாட்டான் பிரதேச சபையினால் கேள்விகளை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் உரிமை தலைவருக்கும். கேள்விச் சபைக்கும் உரியது. குத்தகை நிலுவைகளை கொண்டிருப்போர் கேள்வி கோர அனுமதிக்கப்பட மாட்டார்கள். இது தொடர்பான மேலதிக விபரங்களை நானாட்டான் பிரதேச சபையின் பிரதான அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

நானாட்டான் பிரதேச சபை
நானாட்டான்
13.12.2014

திரு.அ.தி.அன்புராஜ் லெம்பேட்
தவிசாளர்
நானாட்டான் பிரதேச சபை.

(C/18245)(10.6)

# உலகச் செய்திகள்

## இஸ்லாமிய முகத்திரைக்கு சீனாவில் தடை

பீஜிங், டிசெ.13

சீனாவின் ஷின்ஷியாங் மாகாணத்தில் முஸ்லிம் பெண்கள் அணியும் முகத்திரைக்குத் தடை வருகிறது.

சீனாவின் மேற்குப் பகுதி மாகாணமான ஷின்ஷியாங் கீன் தலைநகரான, உரும்கி நகரில், பெண்கள் இஸ்லாமிய முகத்திரையை பொது இடங்களில் அணிந்து வருவதற்குத் தடை விதிக்க அதிகாரிகள் உத்தேசித்திருக்கிறார்கள்.

இந்தத் தடையை ஆதரித்து உரும்கி நகர ஆட்சியாளர்கள் வாக்களித்திருக்கிறார்கள் என்று அரச ஊடகங்கள் கூறின.

முஸ்லிம் உய்கர் இனத்தவர்களின் சொந்த மாகாணமான அந்தப் பகுதியில் இஸ்லாமிய உடைகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் தொடர்ச்சியான நடவடிக்கைகளில் ஒன்றாக இந்த நடவடிக்கையும் தற்போது முன்னெடுக்கப்படவுள்ளது. (வ)

## புயலால் பிரிட்டனில் 17,000 பேர் பாதிப்பு



பிரிட்டனில் திடீரென வீசிய சூறாவளிப் புயலால், 17 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் அவதிக்குள்ளாகியுள்ளனர். நேற்று முன்தினம் காலை திடீரென வானிலையில் மாற்றம் ஏற்பட்டதால், 130 கி.மீ. வேகத்தில் சூறாவளி புயல் வீசியுள்ளது. இடியுடன் கூடிய மழையும் பொழிந்ததால் இஸ்சல்ஸ் மற்றும் வடக்கே ஷெட்லாந்து தீவு பகுதிகளும் பாதிக்கப்பட்டுள்ளன. புயலால் ஏராளமான மின்கம்பங்களும், மரங்களும் முறிந்து விழுந்துள்ளன. சாலைகளில் கார்களும், வாகனங்களும் காற்றின் வேகத்தில் தூக்கி வீசப்பட்டுள்ளன. வீடுகளுக்குள் மழைவெள்ளம் புகுந்ததால் அந்தப்பகுதி மக்கள் பாதுகாப்பான பகுதிகளுக்கு வெளியேற்றப்பட்டுள்ளனர். (வ)



## ஆவணங்களின்றி இந்தியாவுக்குள் நுழைந்த சீன இளைஞர் கைது

கோரக்பூர், டிசெ.13

உரிய ஆவணங்கள் இன்றி இந்தியாவுக்குள் ஊடுருவிய சீன இளைஞர் ஒருவரை உத்தரப்பிரதேச பொலிஸார் கைது செய்துள்ளனர். சீனாவைச் சேர்ந்த ஹுவாங் ஜிங் என்பவர் நேபாள எல்லை வழியே உத்தரப்பிரதேச மாநிலத்தின் வடக்கு மாவட்டமான கோரக்பூரில் ஊடுருவி உள்ளார். உரிய ஆவணங்கள் இன்றி இந்தியாவுக்குள் நுழைந்த அவரை அந்த மாவட்ட பொலிஸார் கைது செய்துள்ளனர். அவரிடமிருந்த ஏராளமான கமராக்கள் மற்றும் நவீன வசதிகளை கொண்ட சீன நாட்டுக் கைபேசிகளைப் பொலிஸார் பறிமுதல் செய்தனர். (வ)

## சீனாவில் மருத்துவக் கல்வி பெற ஈழ அகதிப் பெண்ணுக்கு அனுமதி



சென்னை, டிசெ.13

இந்தியாவில் மருத்துவ கல்வியைத் தொடர தடை விதிக்கப்பட்ட ஈழ அகதி நந்தினிக்கு சீனப் பல்கலைக்கழகத்தில் அனுமதி கிடைத்துள்ளது.

1990 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் இருந்து தமிழகத்துக்கு அகதியாக குடும்பத்துடன் சென்ற நந்தினி, அரச்சலூர்- நவரசம் மெட்ரிக் பள்ளியில் சென்ற ஆண்டு 12 ஆம் வகுப்பு தேர்வில் வெற்றி பெற்று, மருத்துவக் கல்விக்கு விண்ணப்பித்தார்.

இருப்பினும் இந்திய மருத்துவத் துறையின் சட்டதிட்டப்படி அகதியாக வருபவர்கள் மருத்துவக் கல்வி கற்கமுடியாது. ஆனால் பொறியியல் கல்வி கற்கலாம் என்று கூறப்பட்டது. ஆனால் பொறியியல் படிக்க நந்தினி மறுத்துவிட்டார்.

இந்த நிலையில் இலங்கையை சேர்ந்த தனியார் அறக்கட்டளை, நந்தினியின் நிலைமையை இணையத்தளம் மூலம் அறிந்து கொண்டு, அவர்களை குடும்பத்துடன் இலங்கைக்கு திருப்பி அழைத்தது.

அதனைத் தொடர்ந்து சீன நாட்டில் சென்னியாங் நகரில் உள்ள தனியார் மருத்துவக் கல்லூரியில் குறித்த நிறுவனத்தின் உதவியுடன் மருத்துவக் கல்வியைக் கற்று வருகிறார் நந்தினி. (வ)

## இந்தியா–ரஷ்யா இடையே 16 ஒப்பந்தங்கள் கைச்சாத்து



டில்லி, டிசெ.13

இந்தியப்பிரதமர் நரேந்திர மோடி, ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் ஆகியோர் நேற்று நடத்திய பேச்சைத் தொடர்ந்து 16 ஒப்பந்தங்கள் கைச்சாத்தாகியுள்ளன.

இரண்டு நாள் பயணமாக இந்தியா சென்றுள்ள புடின் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கிறார். முதலில் அவர் டில்லியில் நடைபெற்ற இந்தியா–ரஷ்யா உச்சி மாநாட்டில் கலந்து கொண்டார்.

அப்போது இந்தியா – ரஷ்யா நாடுகளிடையிலான பரஸ்பர ஒத்துழைப்புக்குறித்துப் பேசினார். அதையடுத்து புடின் தராபாத் பவனுக்கு வந்தார். அங்கு அவரை பிரதமர் நரேந்திர மோடி வரவேற்றார். பின்னர் மோடி புடின் இருவரும் சந்தித்துப் பேசினார்கள்.

இருதலைவர்களின் பேச்சு முடிந்ததும் இந்தியா – ரஷ்யா இடையே 16 ஒப்பந்தங்கள் வரை கையெழுத்தானதாக தெரியவந்துள்ளது. இந்த ஒப்பந்தங்களில் அணுமின் உற்பத்தி, பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்ப மேம்பாடு, இயற்கை எரிவாயு தொடர்பான ஒப்பந்தங்கள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை ஆகும்.

கூடங்குளம் அணுமின் நிலையத்தில் 5 ஆவது மற்றும் 6 ஆவது பிரிவுகளை நிறுவுவது குறித்தும் இரு தரப்புப் பேச்சுவார்த்தையில் விவாதிக்கப்பட்டது. மேலும் கூடங்குளம் அணுமின் நிலையத்தின் 3ஆவது மற்றும் 4 ஆவது பிரிவுகளின் தொழில்நுட்பம் தொடர்பான உடன்படிக்கையும் கையெழுத்திடப்பட்டுள்ளது. பாகிஸ்தானுக்கு ரஷ்யா ஆயுத உதவி அளித்து வருவதற்கு இந்தியா தனது எதிர்ப்பை இந்தச் சந்திப்பின் போது தெரிவித்தது.

உக்ரைன் விவகாரத்தில் அமெரிக்கா மற்றும் மேற்கத்திய நாடுகள் ரஷ்யாவுக்கு பல்வேறு விதமான தடைகளை விதித்துள்ளன. இதன் காரணமாக இந்தியாவில் இருந்து ரஷ்யாவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் உணவு பொருள்களை அதிகரிப்பது பற்றியும், ரஷ்யாவில் இருந்து வைரம் இறக்குமதி செய்வது பற்றியும் பேச்சு நடத்தப்பட்டது. (வ)

## பெண் குண்டுதாரிகள் சந்தையில் தாக்குதல்

### நைஜீரியாவில் 40 பேர் சாவு



நைஜீரியாவின் கானோ நகரச் சந்தையில் புதன் கிழமை தீவிரவாதிகளான 2 பெண்கள் நடத்திய மனித வெடிகுண்டுத் தாக்குதலில் 40 பேர் உயிரிழந்தனர், மேலும் 7 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இதுகுறித்து பொலிஸார் கூறுகையில், கானோ நகரின் காந்தின் குவாரி சந்தையில் பாரம்பரிய உடையணிந்த இரு இளம்பெண்கள் தங்கள் உடலில் மறைத்து வைத்திருந்த வெடிகுண்டுகளை வெடிக்கச் செய்துள்ளனர் என்றும் தெரிவித்துள்ளனர்.

இந்தத் தாக்குதலின் பின்னணியில், போகோ ஹராம் தீவிரவாத அமைப்பு இருப்பதாகக் கூறப்படுகிறது. கடந்த சில மாதங்களாக பெண்களைக் கொண்டு போகோ ஹராம் தீவிரவாதிகள் மனித வெடிகுண்டுத் தாக்குதல்களை நிகழ்த்தி வருவது குறிப்பிடத்தக்கது. (வ)

## சிரிய அகதிகளுக்கு மீண்டும் உணவு வழங்க ஐ.நா. தயார்



நியூயோர்க், டிசெ.13

கடந்த சில தினங்களாக நிதிப் பற்றாக்குறை காரணமாக சிரிய அகதிகளுக்கான உணவு வழங்கலை தற்காலிகமாக நிறுத்தி வைத்திருந்த ஐ.நாவின் உலக உணவுத்திட்டம், இதன் பொருட்டு தொடர்ந்து உறுதியாக மேற்கொண்ட பரப்புரை பயனளித்துள்ளது. தற்போது ஓரளவுக்குப் போதிய நிதி கிடைத்திருப்பதாகவும், அதன் மூலம் சிரியாவுக்கு அண்மையிலுள்ள நாடுகளில் தஞ்சம் புகுந்துள்ள சிரிய அகதிகளுக்கு உணவு உதவியை விரைவில் மீள வழங்கப்போவதாகவும் செவ்வாய்க்கிழமை அறிவித்துள்ளது.

இம்மாத இறுதிக்குள், ஜோர்டான், துருக்கி, லெபனான், ஈராக் மற்றும் எகிப்தில் தங்கியுள்ள சுமார் 1.7 மில்லியன் சிரிய அகதிகள் அனைவரும் தமக்கான எலக்ட்ரோனிக் உணவுப் பற்றுச் சீட்டைப் பெற்றுக் கொள்ள முடியும் என்றும், இந்தப் பற்றுச்சீட்டு மூலம் இவர்கள் அண்மையிலுள்ள சாதாரண கடைகளில் தமக்கான உணவை பெற்றுக்கொள்ள முடியும் எனவும் ஐ.நாவின் உலக உணவுத் திட்டம் அறிவித்துள்ளது. (வ)

# உலகச் செய்திகள்

## காஸ்ட்ரோவுக்கு சீனாவின் கன்பூசியஸ் விருது



பீஜிங், டிசெ.13
சீனாவின் கன்பூசியஸ் அமைதிப் பரிசு இந்தவருடத்துக்கான முன்னாள் கியூபா ஜனாதிபதி பிடல்காஸ்ட்ரோவுக்கு வழங்கப் படவுள்ளது.
அமைதிக்கு அவர் ஆற்றிய பங்களிப்பு குறித்து, குறிப்பாக அமெரிக்காவுடனான பிரச்சினைகளில் அவர் ராணுவ பலத்தைப் பயன்படுத்தாதமை குறித்து அவர் பாராட்டப் பட்டிருக்கிறார்.
கடந்த வருடம் இந்த விருது ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுக்கு வழங்கப்பட்டது.
மூன்றாண்டுகளுக்கு முன்னர் சீனா இந்த விருதை , நோபல் அமைதிப் பரிசுக்கு மாற்றாக, நிறுவியது. நோபல் அமைதிப் பரிசு சீனாவுக்கு எதிராகப் பயன்படுத்தப்படுவதாக சீனக் கம்யூனிஸ்ட் தலைமையால் கருதப் படுகிறது. (வ)

# எபோலா எதிர்ப்புக் குழுவினரே 2014 இல் சிறந்த மனிதர்கள்

நியூயோர்க், டிசெ.13
உலகையேஅச்சுறுத்தியஎபோலா நோய்க்கு எதிராகப் போராடிய மருத்துவக் குழுவுக்கு '2014 ஆம்ஆண்டின்சிறந்தமனிதர்கள்' விருதுஎன்றகௌரவத்தைஅளித்திருக்கிறது, அமெரிக்காவின் 'டைம்' பத்திரிகை.
அமெரிக்காவில் இருந்து வெளியாகும்'டைம்'பத்திரிகை ஆண்டு தோறும் உலகின் சிறந்த மனிதரைத் தேர்வு செய்து கௌரவித்து வருகிறது. இந்த ஆண்டுக்கான சிறந்த மனிதரைத் தேர்ந்தெடுப்பதற்கான இணைய வாசகர்களுக்கான வாக்கெடுப்பு, கடந்த மாதம் 19 ஆம் திகதி ஆரம்பித்து, கடந்த 6 ஆம் திகதி வரை நடைபெற்றது. இந்த நிலையில், கொடிய நோயான எபோலாவுக்கு எதிராகப் போராடி வரும் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த மருத்துவர்கள், செவிலியர்கள் உள்ளிட்ட 5 பேர் அடங்கிய குழுவை 2014 ஆம் ஆண்டின் 'சிறந்த மனிதர்கள் என' 'டைம்' பத்திரிகை தெரிவு செய்துள்ளது.




உலகமக்கள்நிம்மதியோடுதூங்க மன உறுதியுடனும் கருணை உள்ளத்தோடும்தங்களது நேரத்தை முழுவதுமாகசெலவிட்டுஎபோலாவால் பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாக்க களத்தில் இறங்கிய தியாக உள்ளங்களை போற்றும் வகையில் இந்தத் தெரிவு மேற்கொள்ளப்பட்டுள்ளதாகஇந்தஅறிவிப்பு குறித்து நடந்த நிகழ்ச்சியில் 'டைம்' பத்திரிகையின் ஆசிரியர் நான்ஸி கிப்ஸ் தெரிவித்தார்.
இந்த நிகழ்ச்சியில் 'போரும் அதன் ஓர் எச்சரிக்கையும்' என்று எபோலா நோயைக் குறிப்பிட்டு பேசிய நான்ஸி கிப்ஸ், அதனை எதிர்த்துப் போராடிய 5 பேரின் பெயர்களையும் குறிப்பிட்டார்.
உலக சுகாதார நிறுவனத்தின் அறிக்கையின்படி, எபோலா நோய் காரணமாக மேற்கு ஆபிரிக்க நாடுகளில் சுமார் 6,300 பேர் இறந்துள்ளனர். (வ)



## கடலில் நிறைந்துள்ளன பிளாஸ்டிக் கழிவுகள்

### சர்வதேச ஆய்வில் அதிர்ச்சித் தகவல்

உலகிலுள்ள பெருங்கடல்களில் இரண்டுலட்சத்து எழுபதாயிரம் தொன்கள் நிறையுள்ள பிளாஸ்டிக் கழிவுகள் இருப்பதாக புதிதாக வெளியிடப்பட்ட சர்வதேச ஆய்வொன்று தெரிவித்துள்ளது. இது முந்தைய கணிப்பை விட மிகவும் அதிகமாகும்.
பூமத்தியரேகையை அடுத்து இருக்கும் ஐந்து கடல் பகுதிகளில் இந்த ஆய்வு மேற் கொள்ளப்பட்டது. கடல் நீரோட்டம் காரணமாகபிளாஸ்டிக்பொருள்கள் அந்தப் பகுதிகளுக்கு அதிகளவில் அடித்து வரப்படுகின்றன. பின்பு அவை நீரோட்டம் காரணமாகவும்கடல்நீரின்அழுத்தத்தாலும் உடைந்து நொறுங்கி சிறிய துகள்களாக மாறுகின்றன.
மொத்தக் கழிவுகளில் 90 சதவீதம் மைக்ரோ பிளாஸ்டிக் எனப்படும் நுண்துகள்களாக இருக்கின்றன. இவை மீன்களாலும் ஏனைய கடல்வாழ் உயிரினங்களாலும்உண்ணப்படுகின்றன.
இந்த ஆய்வின் முடிவு குறித்து அறிவியல் சஞ்சிகை ஒன்றில் கட்டுரை எழுதியுள்ள ஆய்வாளர் மார்கஸ் எரிக்சன், கடலில் பிளாஸ்டிக் பைகள், போத்தல்கள், குடைகள், கழிப்பறை இருக்கைகள் என பலவிதமான பிளாஸ்டிக் பொருள்கள் ஏராளமாக இருப்பதாகவும், பெரிய பல்துறை அங்காடிகள் கடலில் ஒன்றாக மிதப்பது போல காட்சியளிப்பதாகவும் தெரிவித்துள்ளார். (வ)

## சி.ஐ.ஏயின் சித்திரவதைகள் சரியானவையே

### ஒபாமா நியாயப்படுத்துகிறார்



வொஷிங்டன், டிசெ.13
அமெரிக்காவில் சிஐஏயின் குறுக்கு விசாரணைகள் மிகவும் கொடூரமாகவும், மிருகத்தனமாகவும் இருந்தாலும், தீவிர்வாதத்தைத் தடுக்க அவை மிகவும் சரியானவை என்று அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா தெரிவித்துள்ளார்.
அமெரிக்காவில் முன்னாள் அதிபர் ஜோர்ஜ் புஷ் ஆட்சிக் காலத்தில் இருந்து சர்வதேச தீவிரவாதிகள் மற்றும் குற்றவாளிகளிடம் குறுக்கு விசாரணைகளின்போது உண்மையை வரவழைக்கப் புலனாய்வு அமைப்பான சி.ஐ.ஏ. மிகக் கொடூரமாக நடந்து கொண்டு வருகிறது. அவற்றின் செயற்பாடுகள் மாற்றப்பட வேண்டும் என்று அமெரிக்க செனட் சபையில் சமீபகாலமாக வேண்டுகோள் விடுக்கப்பட்டு வருகிறது.
இதுகுறித்து ஸ்பானிஷ் மொழியில் செயற்படும் தனியார் தொலைக்காட்சிக்கு நேற்று முன்தினம் வொஷிங்டனில் ஒபாமா பேட்டி அளித்தார். இதன் போது அவர் கூறியதாவது:–
அமெரிக்காவில் நியூயோர்க் நகரில் 2011 ஆம் ஆண்டு விமானம்மூலம்இரட்டைக்கோபுரவெடிகுண்டுத்தாக்குதல் நடைபெற்றது. இந்தத் தாக்குதல் தொடர்பாக அல்குவைதா தீவிரவாத இயக்கத்தைச் சேர்ந்தவர்களிடம் புலனாய்வு அமைப்பான சிஐஏ விசாரணை மேற்கொண்டது.
அவர்களிடம் சாதாரண முறையில் விசாரணை நடத்த முடியாது. அதனால் சிஐஏ தனது குறுக்கு விசாரணையின்போது பல்வேறு கொடூரமான முறைகளை மேற்கொள்ள வேண்டியிருந்தது. அத்தகைய விசாரணையில் பல்வேறு திடுக்கிடும் தகவல்கள் வெளியாகின. அதே போல், பல்வேறு நாடுகளில் நடக்கும் தீவிரவாதத் தாக்குதல்கள் குறித்து தீவிரவாதிகளிடமும் குற்றவாளிகளிடமும் சி.ஐ.ஏயின் கொடூர மற்றும் மிருகத்தனமான விசாரணையின் போது பல தகவல்கள் தெரியவந்தன.
அதைத்தொடர்ந்து அது தொடர்பாக அமெரிக்காவால் பல்வேறு நடவடிக்கைகளை எடுக்க முடிந்தது. சி.ஐ.ஏயின் விசாரணைகள் மிருகத்தனமானவையாக இருந்தாலும், அவை அனைத்தும் சரியானதும், ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியதும் ஆகும். சிஐஏயின்குறுக்குவிசாரணைநடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தால், அமெரிக்காவில் பல்வேறு தீவிரவாதத்தாக்குதல்சம்பவங்கள் நடைபெறுவதற்கான சாத்தியகூறுகள்ஏற்படலாம்–என்றார்.(வ)

## ஜூன் 21 யோகா தினம்

### அறிவித்தது ஐ.நா.

நியூயோர்க், டிசெ.13
ஐக்கிய நாடுகள் சபை, ஜூன் 21 ஆம் திகதியை சர்வதேச யோகா தினமாக அறிவித்துள்ளது.
இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, கடந்த செப்ரெம்பர் மாதம் ஐ.நா. சபையில் பேசிய போது, யோகாவுக்காக ஒரு நாளை சர்வதேச தினமாக அறிவிக்க வேண்டும் என்று கோரியிருந்தார்.
இந்த நிலையில், ஐ.நா.வுக்கான இந்தியத் தூதர் அசோக் முகர்ஜி, யோகாவுக்கான சர்வதேச தினம் குறித்த தீர்மானத்தை ஐ.நா. சபையில் நேற்று முன்தினம்வியாழக்கிழமை கொண்டு வந்தார்.
இந்த தீர்மானத்துக்கு, 175 நாடுகள் ஆதரவளித்தன. (வ)

## ஆப்கன் பாடசாலையில் தாக்குதல்: ஒருவர் சாவு



காபூல், டிசெ.13
ஆப்கானிஸ்தானில் பாடசாலை நிகழ்வு ஒன்றில், மனிதவெடிகுண்டுதாரி என்று சந்தேகிக்கப்படும்ஒருவரால்நடத்தப்பட்ட தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டதுடன் மேலும் பலர் காயமடைந்ததாக அதிகாரிகள் கூறியுள்ளனர். ஆப்கானிய தலைநகர் காபூலில் இந்தத் தாக்குதல் நடந்துள்ளது.
பிரஞ்சுக்காரர்களால் நடத்தப்படும், 'இஸ்திக்லாலா'' இடைநிலைப் பாடசாலையில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதை ஆப்கானிஸ்தானின் உள்துறை பதில் அமைச்சர் அயூப் சலாங்கி உறுதி செய்துள்ளார்.
நிகழ்வின் பார்வையாளர்களின் பகுதியில்மாமமனிதவெடிகுண்டுதாரி தனது குண்டை வெடிக்கச் செய்ததாக அங்கிருந்த பார்வையாளர்களில் ஒருவர் பிபிசியிடம் தெரிவித்துள்ளார்.
முன்னதாக, காபூலின் புறநகர் பகுதியில் ஒருமனிதவெடிகுண்டுதாரியால் ஆப்கான் படையினர் 6 பேர் கொல்லப்பட்டனர். (வ)

# பல்சுவை

## பிறருக்கு செய்யும் சேவைகளால் நம்மை தூய்மைப்படுத்திக் கொள்ள முடியும்.

செல்வம் பெருகியுள்ள காலத்தில் தான் ஒருவனுக்கு பணிவு தேவை. அதே சமயம் வறுமையுற்ற காலத்தில் மனிதனுக்கு துணிவு அவசியம். தன்ந்தனியாக இருப்பவன் பகையைத் தேடிக் கொள்ளக்கூடாது. அவ் வாறு செய்தால் பித்துப்பிடித்தவனைப் போல அலைய நேரிடும். துன்பமற்ற இன்பமும், தீமையற்ற நன்மையும் அடைவது என்பது இயலாத ஒன்று. எந்தச் செயலிலும் இன்ப, துன்பம் இரண்டும் கலந்தே இருக்கிறது. நன்மை செய்பவன், ஒவ்வொருவருக்கும் கைகொடுத்து மகிழத் தயாராயிருக்கலாம். பணம் மட்டுமே வாழ்க்கையல்ல. பணத்தை தவிர, நாம் பிறருக்குச் செய்யும் நன்மையும், தெய்வபக்தியும் நம் மனதில் ஆற்றலை பெருகச் செய்பவை தான்.மற்றவர்களின் உதவியை எதிர்பார்த்து நடப்பவன் சத்தியத்தைப் பின்பற்ற முடியாது.அரிய செயல்கள் பெரிய உழைப்பின்றி ஒருபோதும் முடிந்ததில்லை. பிறருக்காகச் செய்கின்ற சேவையால், நம்மைத் தூய்மைப் படுத்திக் கொள்ள முடி யும்.

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



சுயநலத்தால் சுகம் கிடைக்கும் என்று மனிதன் முட்டாள்தனமாக நினைக்கிறான். உண்மையில், தன்னலத்தை ஒழிப்பதில் தான் உண்மையான மகிழ்ச்சி இருக்கிறது.நம்மை நாமே பெரிதாக எண்ணிக் கொண்டு அகந்தை கொள்வது கூடாது. சாதாரண மானவர்களாக நம்மை கருதும் போது தான், நம்மிடம் கருணையும், பணிவும், நல்ல சிந்தனையும் வெளிப்படத் தொடங்கும்.விவசாயி மடையைத் திறந்து விட்டால் புவியீர்ப்பு விசையால் நீர் தானாக பள்ளத்தைநோக்கிப் பாய்வது போல எல்லா ஆற்றல்களும் மனிதனுக்கு இயல்பிலேயே இருக்கின்றன. ஆன்மிகத்தின் உதவியால் தடைகளைப் போக்கி நாம் நிறை நிலையை அடைய வேண்டும்.ஆன்மிகத்தின் உதவியால் தீயவர்கள் கூட மகானாக முடியும். வாழ்வில் தடைகளைப் போக்கினால் போதும். நம் இயல்பான குணமாகிய நிறை நிலையின் வாசல்கள் தானாகவே திறந்து விடும்.

## மீன்களின் நேற்றைய நிலைவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | முல்லைத்தீவு | வவுனியா |
|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 550 | 600 | 550 | 600 |
| நண்டு | 500 | 450 | 500 | 450 | 500 |
| கணவாய் | 400 | 350 | 400 | 350 | 400 |
| பாரை | 500 | 450 | 500 | 450 | 500 |
| கட்டாபாரை | 400 | 350 | 400 | 350 | 400 |
| சீலா | 500 | 450 | 500 | 450 | 500 |
| விளை | 500 | 450 | 500 | 450 | 500 |
| முரல் | 450 | 400 | 450 | 400 | 450 |
| கும்பிளா | 350 | 300 | 350 | 300 | 350 |
| கிழாக்கன் | 300 | 250 | 300 | 250 | 300 |
| ஒரா | 400 | 350 | 400 | 350 | 400 |
| திரளி | 300 | 250 | 300 | 250 | 300 |
| நகரை | 250 | 200 | 250 | 200 | 250 |
| சூடை | 100 | 100 | 100 | 100 | 100 |

## சில மருத்துவ குறிப்புகள்

நோய் வந்துவிட்டாலே மருத்துவரிடம் ஓடுவதைவிட சில எளிய வீட்டு வைத்திய முறைகளின் மூலம் சரிசெய்ய முடியும். இஞ்சியை அரைத்து கனமாக பற்றுப் போட்டால் தலைவலி சிறிது நேரத்தில் குணமாகும். தேனீ கடித்த இடத்தில் மஞ்சளும், சுண்ணாம்பும் கலந்து போட வலியும் வீக்கமும் பறந்துவிடும். பித்த வெடிப்புக்கு கடுக்காயைத் தண்ணீர் விட்டு உரசி விழுதை வெடிப்புள்ள இடத்தில் தடவி வந்தால் வலியும் வெடிப்பும் மறையும். மூலம், வாயுத்தொல்லை, மாலைக் கண் நோய் உள்ளவர்கள் அடிக்கடி முருங்கைக் கீரை சாப்பிடுவது நல்லது. பப்பாளிச் செடியின் பாலை வலிக்கும் பல் மீது தடவிவந்தால் பல்வலி குணமாகும். ஒரு கப் தயிர் தினமும் சாப்பிட்டால் அல்சர் நெருங்காது. வெள்ளை வெங்காயத்தை உணவில் சேர்த்துக் கொண்டால் வயிற்றிலும் குடலிலும் ஏற்படும் புண்கள் ஆறும். குழந்தைகள் ஞாபகசக்தியுடன் இருக்க வேண்டுமானால் தினமும் காலை உணவுக்குப் பின் வெந்நீரில் ஒரு தேக்கரண்டி தேன் கலந்து குடிக்க வையுங்கள்.




## நாளை

கார்த்திகை-28
ஞாயிற்றுக்கிழமை
14.12.2014

திதி:அட்டமி பி.இ.06.05 வரை
நட்சத்திரம்: பூரம் பி.ப.02.09 வரை
சுபநேரம்: 09.21-10.51 வரை
இராகுகாலம்: 04.51-06.21 வரை

## மரக்கறிகளின் நேற்றைய நிலைவரம்

| | மருதனார் மடம் | சுன்னாகம் | சாவகச்சேரி | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி | முல்லைத்தீவு | மன்னார் |
|---|---|---|---|---|---|---|---|---|
| கத்தரி | 130 | 160 | 120 | 200 | 120 | 140 | 180 | 160 |
| கரட் | 160 | 180 | 180 | 280 | 160 | 240 | 240 | 180-200 |
| மரவள்ளி | 40 | 40 | 40 | 40 | 40 | 60 | 80 | 45-60 |
| பயிற்றை | 250 | 220 | 250 | 240 | 240 | 220 | 200 | 160-220 |
| பாகல் | 400 | 300 | 400 | 320 | 300 | 240 | 160 | 200-280 |
| கருணைக்கிழங்கு | 50 | 45 | 60 | 60 | 45-50 | 80 | 280 | 100-120 |
| பெ.வெங்காயம் | 100 | 100 | 100 | 110 | 120-110 | 120 | 100 | 60-100 |
| சி.வெங்காயம் | 70 | 100 | 40-80 | 100-120 | 80-90 | 100 | 100 | 140 |
| பூசணி | 35 | 35 | 40 | 50 | 30 | 60 | 120 | 50 |
| தக்காளி | 180 | 150 | 150 | 200 | 160 | 200 | 160 | 180-200 |
| வாழைக்காய் | 80 | 50 | 80 | 80 | 70 | 80 | 80 | 120 |
| கீரை | 40 | 50 | 50 | 20-30 | 40-50 | 35-40 | 30 | 30-50 |
| பொன்னாங்காணி | 35 | 50 | 40 | 50 | 40 | 35-40 | 30 | 20 |
| மிளகாய் | 300 | 320 | 400 | 400 | 350 | 600 | 450-600 | 600-800 |
| புடோல் | 130 | 100 | 120 | 120 | 100-110 | 120 | 140 | 120-140 |
| கோவா | 150 | 150 | 150 | 180 | 140 | 180 | 160 | 140-160 |
| வெண்டி | 160 | 160 | 160 | 120 | 140 | 120 | 180 | 100-120 |
| போஞ்சி | 200 | 200 | 200 | 200 | 200 | 180 | 200 | 180-200 |
| லீக்ஸ் | 300 | 240 | 270 | 240 | 260 | 240 | 220 | 220-250 |
| தேங்காய் | 30-50 | 25-55 | 20-40 | 30-40 | 30-40 | 40-45 | 45-50 | 30-50 |
| உருளைக்கிழங்கு | 120 | 100 | 100 | 120 | 140 | 90 | 160 | 85-100 |
| தேசிக்காய் | 100 | 100 | 80 | 80 | 100 | 60 | 150 | 120-60 |
| வல்லாரை | 12 | 20 | 20 | 10 | 20 | 20 | 30 | 20 |

## சுடோக்கு எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக் கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப் பப்படுகையில் உள் பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | | | 1 | 4 | | | 3 | |
| 9 | 7 | | 6 | 3 | 2 | | | |
| | 1 | 4 | | | 7 | | 5 | |
| | | 7 | | 1 | | 3 | 4 | |
| | | | | 2 | | | | |
| | 9 | 1 | | 8 | | 5 | | |
| | 4 | | 3 | | | 8 | 9 | |
| | | | 2 | 7 | 8 | | 6 | 3 |
| | 6 | | | 5 | 9 | | | 7 |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 4 | 3 | 6 | 8 | 5 | 2 | 9 | 7 |
| 2 | 8 | 5 | 9 | 1 | 7 | 3 | 4 | 6 |
| 7 | 6 | 9 | 3 | 2 | 4 | 8 | 5 | 1 |
| 4 | 1 | 6 | 8 | 7 | 3 | 9 | 2 | 5 |
| 5 | 2 | 7 | 4 | 6 | 9 | 1 | 3 | 8 |
| 3 | 9 | 8 | 2 | 5 | 1 | 6 | 7 | 4 |
| 8 | 7 | 2 | 5 | 9 | 6 | 4 | 1 | 3 |
| 9 | 5 | 4 | 1 | 3 | 8 | 7 | 6 | 2 |
| 6 | 3 | 1 | 7 | 4 | 2 | 5 | 8 | 9 |

ஜோதிடம்

# எண் சோதிட பலன்கள் உங்களுக்கு எப்படி?



9 எண்களிலும் 5 தான் அனைவராலும் விரும்பப்படுகிறது. இதற்குக் காரணம் 5 ஆம் எண் தான் மற்றைய 9 எண்களுக்கும் நடுவில் உள்ளது. இந்த எண்ணே மற்றைய அனைத்து மக்களையும் (எண்களையும்) ஈர்க்கும் சக்தி மிகுந்த எண்ணாகும்.

எனவே, இவர்கள் எளிதில் அனைவரிடமும் நட்புக் கொண்டு விடுவார்கள். அனைவரையும் அனுசரித்துச் செல்லும் இயல்பினர். அறிவு என்கிற அற்புதத்தின் விளக்கம் இவர்கள் தான். புதியதாக எதையும் அறிந்து கொள்ளும் ஆர்வமும், அதை வாழ்வில் உடனடியாகபயன்படுத்திக்கொள்ளும் திறமையும் இவர்களுக்கு உண்டு. எந்த வகையான சோதனைகளையும் சிரித்துக் கொண்டே சமாளித்து விடுவார்கள். தன்னம்பிக்கை மிகுந்தவர்கள்.

மற்றவர்களைவிட அறிவுத் திறனும், திறமையும் உண்டு. இவர்கள் நெளிவு சுழிவுகள் தெரிந்தவர்கள். விரைவாக, அதுவும் அதிகமாக உழைக்க வேண்டும் என்ற முயற்சியுடன்தான் எந்தத் தொழிலிலும் ஈடுபடுவார்கள். அதேபோன்று இலாபங்களையும் அடைவார்கள். புதிய முயற்சிகளிலும் துணிந்து இறங்கி விடுவார்கள். நட்டம் ஏற்பட்டாலும் இவர்கள் கலங்கமாட்டார்கள். மிகுந்த சிந்தனை செய்பவர்களாதலால் நரம்பு பலவீனம் அடையும். எனவே, சில சமயங்களில் அதிகமான வேலை செய்யும்போது, எளிதில் எரிச்சலும் கோபமும் கொள்வார்கள். எந்தத் துறையிலும் வேகமாகச் செயலாற்றுபவர்கள் இவர்கள்தான். பிறரைத் தூண்டி விட்டு வேகமாக எந்த வேலையையும் மிரட்டி வாங்கி விடுவார்கள். உடல் உழைப்பில் நாட்டம் குறைவு. ஆனால் மூளை உழைப்பில் சிறந்து விளங்குவார்கள். மகாவிஷ்ணுவைப் (புராணங்களில்) போன்ற திறமையும், புத்திசாலித்தனமும் இவர்களுக்கு உண்டு!

அதிகமாகப் பணம் கிடைக்குமென்றால், தீய வழிகளிலும் துணிந்து இறங்கி விடுவார்கள். ஆனால் எப்படியாவது தண்டனையிலிருந்து தங்களது புத்தியால் தப்பித்துக் கொள்வார்கள். இவர்களைப் புகழ்ந்தால் அப்படியே மயங்கி விடுவார்கள். எனவே, இவர்களைப் புகழ்ந்தே மற்றவர்கள் தங்களது காரியங்களை இவர்களிடம் சாதித்துக் கொள்ளலாம். அனைத்துப் பிரச்சினைகளுக்கும் மிக எளிதில் தீர்வு சொல்லி விடுவார்கள். மருத்துவர், வியாபாரிகள், விற்பனை முகவர் போன்று பணம் தேடும் தொழில்களிலேயே இவர்களது எண்ணம் செல்லும். வெளிநாடு, வெளியூர் செல்வதென்றால், உடனே புறப்பட்டு விடுவார்கள். தங்களது பேச்சிலும், முடிவு எடுப்பதிலும் வேகமாகச் செயற்படுவார்கள். மற்றவர்களுக்குப் புரியவில்லை என்றால் கோபம் எளிதில் வந்து விடும். அதிக உழைப்பும் ஓயாத அலைச்சலும் ஆற்றலும், புத்தி சாதுர்யமும் அதிகம்.

காதல் விடயங்களில் ஈடுபாடு உண்டு. காதலிப்பவரையேமணக்கும் தைரியமும் பிடிவாதமும் உண்டு. வசதியான மனைவியையே தேடுவார்கள். எவ்வளவு பெரிய காரியமானாலும் பயமோ, தயக்கமோ இன்றித் துணிந்து ஈடுபட்டு அதை வெற்றியாக மாற்றிக் காட்டுவார்கள்.



5ஆம் எண்ணின் பலம் குறைந்தவர்கள் தீய காரியங்களில் துணிந்து இறங்குவார்கள். பிறரை வஞ்சித்தல், பொய்ச்சாட்சி சொல்லுதல், ஏமாற்றிப் பிழைத்தல், போன்றவற்றில் ஈடுபட்டு குறுக்கு வழியில் பணம் சம்பாதிப்பார்கள். அரச பணியை விடச் சொந்தத் தொழிலே சிறப்புத் தரும். கூட்டு எண்கள் ஒத்து வந்தால் மட்டுமே அரச பணி சிறப்புத் தரும். இந்த எண்காரர்களை வேலைக்கு வைத்து முதலாளிமார் இலாபம் தேடி விடுவார்கள். இவர்கள் ஜனவசியம் நிறைந்தவர்கள். எனவே, இவரைச் சுற்றிலும் எப்போதும் மக்கள் இருந்த கொண்டே இருப்பார்கள்.

ஒருவிதக் குருட்டுத் தைரியம் இவர்களுக்கு மனதில் இருந்து கொண்டே இருக்கும். புதிய சாதனைகளை விரைந்து செய்ய வேண்டும் என்ற விருப்பம் நிறைந்தவர்கள். அடுத்தவர்களின் கருத்துப்படி இவர்கள் நடந்தால் தோல்விகள்தான் அதிகமாகும். இவர்களுக்கு இறைவனின் அருளால் திடீர் யோசனைகள் அல்லது ஞானோதயம் ஏற்படும். அதன்படி இவர்கள் செயலாற்றினால் வெற்றி நிச்சயம். இவர்கள் பணத்துக்கு ஆசைப்பட்டுத் தாங்கள் செய்யும் தொழிலை அடிக்கடி மாற்றிக் கொள்ளக்கூடாது. நிரந்தரமான ஒரு தொழிலைத் தேர்ந்தெடுத்து, அதில் புதிய வழிமுறைகளையும், புதுமையையும் புகுத்தி வெற்றி பெற வேண்டும். ஆழம் தெரியாமல், ஒன்றிலும் இறங்கக் கூடாது. செய்யும் தொழிலைப் பிடிக்காமல் இடைநடுவிலேயே விட்டுவிட்டு, அடுத்த தொழிலில் இறங்கக்கூடாது.

இவர்கள் இரவில் நீண்டநேரம் சிந்தித்துக் கொண்டே இருப்பார்கள். இதனால் இரவில் தூக்கம் குறையும். மனச்சோர்வு, நரம்புக் கோளாறுகள் ஏற்படும். எனவே, தினமும் 6 – 8 மணி நேரம் தூங்குவதைப் பழக்கமாக வைத்துக் கொள்ள வேண்டும். தியானம், உடற்பயிற்சி போன்றவற்றில் ஈடுபட்டு, மனதைச் சலனமில்லாமல் வைத்துக் கொள்ளப் பழக வேண்டும். இதனால் உடல் நலம் தானே வரும். சுறுசுறுப்பும், வேகமும், இலாப நோக்கும் இவர்கள் கூடப் பிறந்தவை. எனவே, வியாபாரம், தொழில். பயண முகவர், விற்பனைப் பிரதிநிதிகள், அரசியல் போன்ற மக்கள் தொடர்புத் தொழில்கள் மிக்க நன்மை தரும்.

**உடல் அமைப்பு**

சற்றுச் சதைப்பிடிப்பான உடல் அமைப்பு அமையும். நடுத்தரமான உயரமும், மற்றவர்களைக் கவர்ந்திழுக்கும் கவர்ச்சியான முகமும், கண்களும் உண்டு. நிமிர்ந்த பார்வையும், வேகமான நடையும் உண்டு.

**அதிர்ஷ்ட தினங்கள்**

ஒவ்வொரு மாதமும் 5, 14, 23 ஆகிய திகதிகளும் 9, 18, 27 ஆகிய திகதிகளும் மிக அதிர்ஷ்டமானவை. அதேபோன்று கூட்டு எண் 5 அல்லது 9 வரும் தினங்களும் அதிர்ஷ்டமானவையே. அவர்களுக்கு மற்ற அனைத்து எண்காரர்களும் உதவுவார்கள். இருப்பினும் 5, 9 எண்காரர்கள் அவர்களுக்கு மிகவும் நன்மை செய்வார்கள்.




# பெண்களையும் மதிப்போம்

பெண்ணின் அடிப்படையான தகுதி, உரிமைகள், சமூகத்திலும் குடும்பத்திலும் அவளுடைய இடம், பங்களிப்பு ஆகிய சகல அம்சங்களிலும் ஆணுக்கு இரண்டாம் பட்சமான நிலையில் பெண்ணை வைத்துவந்த சமூகம் ஆண் சமூகம். ஆணே மேலான நிலையில் இருக்குமாறு இங்கே அனைத்து விதிகளும், சூழலும் கட்டமைக்கப்பட்டிருக்கின்றன. சமயம், சம்பிரதாயம், நெறிமுறைகள், சட்டங்கள் என யாவுமே ஆணை ஒரு படி உயர்த்தியே வைத்திருக்கின்றன. மத நூல்கள், சம்பிரதாயப் பழக்க வழக்கங்கள், பழமொழிகள், சட்ட நூல்கள் எனப் பல அம்சங்களை மேற்கோள்காட்டி இதை நிரூபிக்க முடியும். இப்படிக் கட்டமைக்கப்பட்டுள்ள சமூகத்தில் வளரும் பெண்ணும் இதே மனநிலையைக் கைக்கொண்டு சக பெண்களுக்கு எதிராகச் செயல்படுவதும் உண்டு. இதையும் ஆண்மையச் சிந்தனை, ஆணாதிக்கப் போக்கின் விளைவு என்றுதான் பார்க்க வேண்டும். அதுபோலவே, அதிகாரம் கைக்குக் கிடைத்ததும் சில பெண்கள் மோசமாக நடந்துகொள்வது பொதுவாக மனித



சுபாவத்தில் உள்ள பிரச்சினையே தவிர அதுவும் பெண்ணாதிக்கம், பெண்ணின் பிரத்தியேகமான குறை என்று சொல்லிவிட முடியாது. பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் கொடுமைகளில் சில சமயம் பெண்களுக்கும் பங்கு இருக்கிறது பெண்களை இரண்டாந்தர மனிதர்களாக நடத்துவதற்குக் காரணமான ஒரு அணுகுமுறை ஆணாதிக்கச் சிந்தனைப்போக்கு. குடும்ப வன்முறை தொடங்கி சமூக வன்முறை வரை உடல்ரீதியாக, மனரீதியாக ஆண்களைவிட பெண்களே சகல விதங்களிலும் அதிகம் பாதிக்கப்படுகின்றனர். வீடுகளிலும் வெளியிலும் இருக்கும் நுட்பமான ஒடுக்குமுறைகள் ஒருபுறம் இருக்கட்டும். வேலைக்குச் செல்வதால் வீட்டிலும் அலுவலகத்திலுமாக இரட்டிப்பு வேலைச் சுமையைத் தாங்கும் நெருக்கடிகளாக இருக்கட்டும். பணியிடத்தில் சுமக்க நேரிடும் பழி பாவங்களும் சக ஊழியர்களான ஆண்களால் ஏற்படும் நேரடியானதும் மறைமுகமானதுமான பாலியல் தொல்லைகளாக இருக்கட்டும். வெளிப்படையான சம்பவங்களைப் பார்த்தாலே பெண்களின் நிலையைப் புரிந்துகொள்ளலாம். உண்மையில் பெண்ணைப் 'பெண்' என்று தனி இனமாகப் பிரித்து, அனுதாபம், ஆதிக்கம், பாசம், வெறுப்பு இப்படி எதையுமே மிகையாகச் செலுத்துவதுமே தவறுதான். இதன் நீட்சிதான் காதல் விவகாரங்களிலும் எதிரொலிக்கிறது.

# செய்திகள்

## இளைஞர் கழக கூட்டம் இன்று

சண்டிலிப்பாய், டிசெ,13

வலி.தென் மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச சம்மேளன எல்லைக் குள் இயங்கும் இளைஞர் கழகங்கள் புனரமைக்கப்பட்டு வருகின்றன. இதன் ஒரு கட்டமாக மானிப்பாய் மேற்கு ஜே/140 இளைஞர்கழகத்தின் கூட்டம் இன்று சனிக்கிழமை இடம் பெறவுள்ளது.

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய அறநெறிப் பாடசாலை மண்டபத்தில் பிற்பகல் 4 மணிக்கு நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் புதிய ஆண்டுக்கான நிர்வாகத் தெரிவு இடம்பெறவுள்ளதுடன் எதிர் காலச் செயற்திட்டங்கள் உட்பட பல விடயங்கள் ஆராயப்பட வுள்ளன.

இந்தக் கூட்டத்துக்கு ஏற்கனவே அங்கத்தவர்களாக உள்ள மானிப்பாய் மேற்கு ஜே/140 இளைஞர் கழகத்தின் உறுப்பி னர்கள் தவறாது சமுகம் தருமாறும் மானிப்பாய் மேற்கு ஜே/140 கிராம சேவகர் பிரிவுக்கு உட்பட்ட 13 – 29 வயதுக்கும் இடைப்பட்ட புதிதாக இணைய விரும்பும் இளைஞர் யுவதிகளும் கலந்து கொள்ள முடியும் எனவும் இளைஞர் கழகத்தினர் தெரிவித்துள்ளனர்.(வ–10–23–115)

### இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

**இராசேந்திரம் இராஜேஸ்வரி**



பிறப்பு 1958.06.05

இறப்பு 2012.12.05

*திதி: கார்த்திகை தேய்பிறை சப்தமி*

எம் அன்புத் தெய்வம் அம்மாவே! உங்கள் ஆண்மகனுக்கு துணையாகச் சென்று ஆண்டுகள் இரண்டானதுவோ! பாசத்தின் சுமைகளுடன் பசுமையான நினைவுகளுடன் எம் நினைவில் வாழ்வீர்கள் நிறையும் எம் நாள்வரை

மாங்குளம் ஒலுமடுவை நிரந்தர முகவரியாகவும் வவுனியா பொன்னாவர சங்குளத்தை தற்காலிக முகவரியாகவும் கொண்ட இராசேந்திரம் இராஜேஸ்வரி அவர்களின் இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி.

அரசவிருதி,
இல.08B, உள் சுற்றுவட்ட வீதி, வவுனியா. T.P:077 545 7918
(54116)(4.3.6)

### ஓராண்டு நினைவஞ்சலி

அமரர்
**நாகநாதர் நாகரத்தினம்**

(ஓய்வுபெற்ற மதுவரித் திணைக்கள உதவி ஆணையாளர்- தினக்குரல் விருந்தினர் இல்ல முன்னாள் முகாமையாளர்)

திதி: அபரபக்க சப்தமி
(13.12.2014)



மலர்வு 16.01.1936

உதிர்வு 24.11.2013

**எங்களை விட்டுப்பிரிந்து சென்று ஓராண்டு ஓடி மறைந்தாலும்**
**உங்கள் அன்பு என்றும் எங்களை விட்டு அகலாது**
**உங்கள் ஆத்மா நித்திய சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.**

383/26, நாவலர் ஒழுங்கை,
நாவலர் வீதி,
ஆனைப்பந்தி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 3276

(54545)(45.6.3)

பிரிவால் வாடும்
**குடும்பத்தினர்.**

### 2 ஆம் ஆண்டின் நீங்கா நினைவுடனே...

அமரர் **சின்னப்பா குணரத்தினம்** (பளை)

(ஓய்வுபெற்ற உபதபாலதிபர்– கனகராயன்குளம்)

மலர்வு 02 . 01 . 1941

உதிர்வு 05 . 12 . 2012



*திதி: அபரபக்க ஷஷ்டி*

எப்படியும் வாழலாம் என்றில்லாமல்
இப்படித்தான் வாழ வேண்டுமென்று
வாழ்ந்தீர்களே அப்பா!
தப்பாக ஏதையுமே எண்ணாத எங்கள் அப்பா!
இப்புவியில் நாம் வாழ என்றும் வழிகாட்டி
நீங்கள் தான் அப்பா!

தற்காலிக முகவரி:
சிவகுருலேன், கச்சாய் றோட்,
சாவகச்சேரி. (54872)(4.3.6)

நீங்கா நினைவுடன்
**குடும்பத்தினர்.**

## இந்துமாமன்றம் நடத்தும் நாவலர் விழா இன்று

யாழ்ப்பாணம், டிசெ.13

அகில இலங்கை இந்து மாமன்றம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபையின் அனுசரணையுடன் நடத்தும் நாவலர் விழா இன்று சனிக்கிழமை காலை 9 மணி முதல் இரண்டு அமர்வு களாக நல்லூர் கோவில் வீதியில் அமைந்துள்ள இந்துமா மன்றத்தின் யாழ். பணிமனை மண்டபத்தில் இடம்பெற வுள்ளது.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபையின் செயலரும் கல்வி அமைச்சின் ஓய்வுநிலை மேல திகச் செயலருமாகிய உடுவை எஸ்.தில்லை நடராஜா தலைமையில் இடம் பெறவுள்ள இந்த நிகழ்வில் யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர் இ.குமாரவடிவேல் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

காலை அமர்வின்போது அருளுரையை நல்லை ஆதீன முதல்வர் சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவா மிகளும் வாழ்த்துரையை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபையின் சர்வதேச இணைப்பாளர் ஐ.தி.சம்பந்தனும் வழங்குவர்.

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் பிரதி அதிபர் ச.லலீசன், யாழ். பல்கலைக்கழக ஓய்வுநிலைப் பேராசிரியர் கலைவாணி இராமநாதன் ஆகியோர் சிறப்புரைகளை ஆற்றவுள்ளனர். தொடர்ந்து வைத்திய கலாநிதி ப.நந்தகுமாரின் ஒழுங்கமைப்பில் சமயம், கல்வி, சமூகம் ஆகிய துறைகளில் நவீன இளை ஞர்களுக்கு நாவலர் காட்டும் பாதை என்ற பொருளில் ஆய்வரங்கு இடம் பெறவுள்ளது.

மாலை அரங்கு பி.ப. 3.30 மணிக்கு ஆரம்பமாகும். இவ்வரங்கில் கவிஞர் சோ.பத்மநாதன் தலைமையில் 'நாவலர் தருமத்தின் ஆணி' என்ற பொருளில் கவியரங்கம் இடம் பெறும். ஆசிரியர் கு.பாலஷண்முகன், விரிவுரையாளர் பா.மகாலிங்கசிவம், அதிபர் நாக.சிவசிதம்பரம், பிரதேச செயலர் த.ஜெயசீலன் ஆகியோர் இந்த நிகழ்வில் பங்கேற்கவுள்ளனர்.

தொடர்ந்து கிழக் குப் பல்கலைக் கழக விரிவுரையாளர் கலாநிதி ம.பாலகைலாசநாத சர்மாவின் சிறப்புரை இடம் பெறும். விடைக் கொடிச் செல்வர் சின்னத்துரை தனபாலா நன்றியுரை நல்குவார். (வ)

♦ ♦ ♦

காரைநகர் கிழவன்காடு கலா மன்றத்தில் நாளை ஞாயிறு காலை 9 மணியளவில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் குருபூசை நிகழ்வு கலாமன்றத் தலைவர் தலைமையில் நடைபெறவுள் ளது. இந்த நிகழ்வில் சிறப்புச் சொற் பொழிவு சிறப்புக்கவிதை மற் றும் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களது நிகழ்ச்சிகள் என்பன இடம்பெறும். (ஒ)

## கலாபூஷண அரச விருது வழங்கும் நிகழ்வு நாளை

கொழும்புத்துறை, டிசெ.13

கலாசார அலுவல்கள் திணைக் களத்தின் 30ஆவது வருடாந்த கலாபூஷண அரச விருது வழங்கும் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சர் ரி.பி.ஏக்கநாயக்க தலைமையில் இடம் பெறவுள்ள இந்த நிகழ்வில் கலைத்துறைக்கு உன்னத சேவையாற்றிய கலைஞர்கள் விருது வழங்கி கௌரவிக்கப் படவுள்ளனர்.

பலநூறு கலைஞர்கள் விருது பெறும் இந்த நிகழ்வில் இம் முறை 100 இற்கும் மேற்பட்ட தமிழ்க் கலைஞர்கள் கலாபூஷணம் விருதுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ–135)

## கருத்தரங்கு

வட பிராந்திய புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் ஏற்பாட்டில் 'ஜனாதிபதித் தேர்தலும் மக்கள் எதிர் நோக் கும் சவால்களும்' என்ற தலைப்பிலான பகிரங்க அரசி யல் கருத்தரங்கு நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு இல–62, கே.கே. எஸ்.வீதி, கொக்குவில் சந்தியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையியின் கவிஞர் முருகையன் கேட் போர் கூடத் தில் கா.செல்வம் கதிர்காமநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

கருத்துரைகளை பு.ஜ.மா.லெ.கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல், தாயகம் இலக்கிய இதழ் ஆசிரியர் க.தணிகாசலம், பு.ஜ.மா.லெ. கட்சியின் அரசியல் குழு உறுப் பினர் சோ.தேவராஜா, பு.ஜ. இளைஞர் முன்னணியைச் சேர்ந்த த.பிரகாஷ் ஆகியோர் வழங்குவர். (வ)

## கட்டாக்காலி நாய் கடிக்கு இலக்காவோர் தென்மராட்சியில் அதிகரிப்பு

தென்மராட்சி, டிசெ.13

சாவக்ச்சேரி நகர்ப் பகுதியில் கட்டாக் காலி நாய்களின் கடிக்கு பொது மக்கள் இலக்காகும் சம்பவங்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

கட்டாக்காலிகளாக நகர்ப்ப குதியில் அலையும் நாய்கள் வீதியில் நடந்து செல்வோரையும் சைக்கிள் மற்றும் மோட்டார் சைக்கிள் போன்றவற்றில் செல்வோரையும் துரத்தித் துரத்திக் கடிப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சாவகச்சேரி பஸ் நிலையப் பகுதியில் நடந்து சென்ற பெண்ணொருவரும் மோட்டார் சைக்கிளில் சென்ற வங்கி உத்தியோகத்தரொருவரும் அண் மையில் நாய்களின் கடிக்கு இலக்காகினர்.

சாவகச்சேரி மருத்துவ மனையில் டிசெம்பர் மாத ஆரம்பம் முதல் நேற்று முன்தினம் வரை 23 பேர் கட்டாக் காலி நாய்களால் கடியுண்டு விலங்கு விசர் நோய்த் தடுப் பூசி மருந்து ஏற்றியுள்ளதாக மருத் துவமனை புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. (வ–9)

### கனத்த விழிகளுடன் 3 ஆம் ஆண்டு நினைவலைகள்



**அமரர் டேவிற் தேவதயாளன்**

*[முன்னாள் ஊழியர் லங்கா சிமெந்து கூட்டுத்தாபனம் லங்கா சிமெந்து லிமிட்டெட்]*

பிறப்பு 22.02.1950

இறப்பு 13.12.2011

காலத்தின் வேகத்தில் நாள்கள் உருண்டோடி
எமை விட்டுப் பிரிந்து
ஆண்டு மூன்றாகி விட்டது - அப்பா
எமது வாழ்க்கையில் எத்தனை மாற்றங்கள்
இருந்த போதிலும் உங்கள்
நினைவுகளை சுமக்கின்றோம். ஒவ்வொரு கணமும்
அப்பா நீங்கள் இல்லாத குறையை இவ்வுலகத்தில்
எதுவும் ஈடுசெய்ய முடியாது இந்த ஆணித்தரமான உண்மையுடன்.....

கச்சாய் வீதி.
கொடிகாமம். (47350)(4.6.3)

உங்கள் நினைவுகளை
நெஞ்சில் சுமந்து நிற்கும்
**மனைவி, பிள்ளைகள்.**

# திருப்பதியான் பக்தர்கள் இருவர் எங்கள் பக்கம்

## மஹிந்தவிடம் உள்ளோர் ஜோதிடரே மைத்திரிபால சிறிசேன தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 13

"ஜனாதிபதி மஹிந்த திருப் பதி யானின் ஆசி வேண்டி தரிசனம் செய்யச் சென்றார். ஆனால், அந்த நேரத்தில் திருப் பதியானை வணங்கும் பக்தர்கள் இருவர் எமது பக்கம் வந்து விட்டனர்"– இவ்வாறு கூறினார் பொது எதி ரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன.

பன்னல பிரதேசத்தில் இடம் பெற்ற பரப்புரைக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற் றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"ஜனாதிபதி, திருப்பதிக்குச் சென்று திரும்பும் போது, அந்த தெய்வத்தை வணங்கும் பக்தர் கள் இருவர் எங்கள் வசம் வந்து விட்டனர். தற்போதுள்ள அரசு, இந்த நாட்டு மக்கள் எதிர்பார்க் கும் அரசு அல்ல. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு இப் போது ஜோதிடர்கள் மாத்திரமே எஞ்சியுள்ளனர்"– என்றும் அவர் அங்கு குறிப்பிட்டுள்ளார்.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் மலையகத் தைப் பிரதிநிதித்துவப்படுத்திய இந்திய வம்சாவளியினரான, இராதா கிருஷ்ணன்.மற்றும் திகாம் பரம் ஆகியோர் பொது எதிரணி யுடன் இணைந்தனர். அதனையே பொது எதிரணி வேட்பாளர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

(ற–5)

# பிரதியமைச்சர் முஸ்தபாவும் அரசு மீது கடும் அதிருப்தியில்

## பொதுபலசேனா ஆதரவு வழங்கினால் வெளியேறுவேன் என்று எச்சரிக்கை

கொழும்பு, டிசெ.13

ஜனாதிபதித் தேர்தலில் சிங் கள– பௌத்த அமைப்பான பொதுபல சேனா, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆத ரவு வழங்குமானால் தான் அர சிலிருந்து வெளியேறு வதாக முதலீட்டு ஊக்குவிப்பு பிரதி அமைச்சர் பைசர் முஸ்தபா நேற்று தெரிவித்துள் ளார்.

"பொதுபல சேனா அமைப் பானது ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதர வளிக்கவுள்ளதாக மறைமுக மாக சுட்டிக்காட்டியுள்ளது. அவ்வாறு அது தனது ஆதரவை ஜனாதிபதிக்கு அளிக்குமாக இருந்தால் நான் நிச்சயமாக அர சிலிருந்து வெளி யேறுவேன்"– என கொழும்பில் நேற்று நடை பெற்ற ஊடகவியலாளர் சந்திப் பின் போது அவர் தெரிவித்தார்.

கடந்த சில வாரங்களுக்கு முன் னர் கிருலப்பனை – போதி பௌத்த நிலை யத்தில் நடை பெற்ற ஊடகவியலாளர் சந்திப் பின் போது, பொது பல சேனா அமைப்பானது, தனது ஆதரவு மஹிந் தவுக்கே என மறைமுக மாக சுட்டிக் காட்டியமை குறிப் பிடத்தக்கது.

(ற)

# பாப்பரசரின் 'பைல்'லும் ஜனாதிபதி மஹிந்தவிடம்

"பாப்பரசரின் 'பைல்' ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கை யில் இருக்கிறது. அதனால் அவர் நிச்சயமாக இலங்கைக்கு விஜ யம் செய்வார்" – என்று ஐ.தே. கவின் நாடாளுமன்ற உறுப்பி னர் சுஜீவசேனசிங்க நேற்று சபையில் தெரிவித்தார்.

ஜனவரி 9ஆம் திகதியின் பின் னர் உருவாகும் ஐ.தே.க. தலை மையிலான கூட்டணி அரசு, பாப்பரசரை வரவேற்கும் என் றும் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்று வெள் ளிக்கிழமை இடம்பெற்ற விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கட்டளைகளை நிறை வேற்றிக் கொள்வதற்கான பிரே ரணை மீதான விவாதத்தில் உரையாற்றியபோதே மேற் கண் டவாறு தெரிவித்த அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

"பாப்பரசரின் 'பைல்' (கோப்பு) ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விடம் இருக்கின்றது. இந்த விட யத்தைப் பாப்பரசர் அறிந்துள் ளதால், அவர் நிச்சயம் இலங் கைக்கு விஜயம் செய்வார்" – என்றார்.

இதன்போது ஒழுங்குப் பிரச் சினையொன்றை எழுப்பிய ஆளுந்தரப்பு பிரதம கொறடா வான அமைச்சர் தினேஷ் குண வர்தன, "சமயத் தலைவர் ஒரு வருக்கு எதிராக கருத்து வெளி யிடுவதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும்" – என்றார்.

இதையடுத்து, சபைக்குத் தலைமை தாங்கிய பிரதி சபாநாயகர் சந் திம வீரக்கொடி கருத்து வெளி யிடுகையில், "சமயத் தலை வருக்கு எதிராக கருத்து வெளி யிடுவதைத் தவிர்க்கவேண்டும்" – என்றார்.

இதன் பின்னர் தனது உரை யைத் தொடர்ந்த சுஜீவ சேன சிங்க எம்.பி.,

"நீங்கள் 'பைல்' என்று எதை நினைத்தீர்கள். பாப்பரசர் பாட சாலைக்கு சென்றது உள்ளிட்ட முக்கிய விடயங்கள் அடங்கிய தைத்தான் நான் 'பைல்' என்று கூறினேன். பாப்பரசரைப் பற்றி தெரிந்திருக்கவேண்டும். அதற் காக அவர் பற்றிய தகவல்கள் இருக்கவேண்டும். பாப்பரசைப் பற்றி தெரிந்திருந்தால்தான் அவர் இலங்கைக்கு வந்ததன் பின்னர் நீங்கள் இந்த இந்தச் சந்தர்ப் பத்தில் இதைச் செய்தீர்கள் என்று ஜனாதிபதியால் பாப்பரசரிடம் கூறமுடியும்.

ஆனால், பாப்பரசரை ஐ.தே.க. தலைமையிலான கூட்டணி அரசு அவரை வரவேற்கும் – என் றார்.

(ற–சி)

# மலசலகூடத்தில் மஹிந்தவின் பதாகை பதறியடித்துக்கொண்டு ஓடிவந்தார் பெண்

## சபையில் சுஜீவ சேனசிங்க எம்.பி. கிண்டல்

கொழும்பு, டிசெ.13

"மலசலகூடத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பதாகை இருந்ததால் உள்ளே சென்ற பெண் ணொருவர் அச்சத்தில் பதறியடித்துக் கொண்டு வெளியே ஓடிவந்தார்" – என்று ஐ.தே. கவின் நாடாளுமன்ற உறுப் பினர் சுஜீவ சேனசிங்க நேற்று சபையில் கிண்டலடித்தார்.

பாதையோரத்தில் நாய் ஒன்று கூட படுத்துறங்க முடியவில்லை. பதாகையை ஒட்டிவிடுகின்றனர் என் றும் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்று வெள் ளிக்கிழமை இடம்பெற்ற விசேட வியா பாரபண்ட அறவீட்டுச் சட் டத்தின் கட்டளைகளை நிறை வேற்றிக்கொள் வதற்கான பிரே ரணை மீதான விவாதத்தில் உரையாற்றியபோதே மேற் கண்டவாறு தெரிவித்த அவர், மேலும் தெரிவித்தவை வரு மாறு:–

"ஜனாதிபதித் தேர்தல் இடம்பெற வுள்ள நிலையில், மக்களின் வாழ்க்கைச் செலவு பற்றி பேசி அத்தியாவசியப் பொருட்களின் விலைகளைக் குறைத்து மக்களை ஏமாற்றி வாக்குகளைப் பெற அரசு நடவடிக்கை எடுக்கின்றது.

இலங்கையில் தனிநபர் ஒருவ ரின் வருமானம் 35,000 ரூபா என்று மத்திய வங்கி அறிக்கை யில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், சாதாரண அரச ஊழி யர் ஒருவருக்கு இந்தச் சம்ப ளம் கிடைப்பதில்லை. புகையி ரத நிலைய ஊழியர் ஒருவ ருக்கு 21,000 ரூபா சம்பளம் கிடைக்கிறது. அதில் 19,000 ரூபா மட்டுமே அவருக்கு சம்பள மாகக் கிடைக்கும். அதில் மின் சாரக் கட்டணம் 2,000 ரூபா, தண்ணீர் கட்டணம் 1,000 ரூபா, போக்குவரத்துச் செலவு 6,000 ரூபா என 9,000 ரூபா செலவா கின்றது. எஞ்சியிருக்கும் 10,000 ரூபாவில்தான் உணவு, பிள்ளை களின் கல்வி உள்ளிட்ட ஏனைய செலவுகளைப் பார்க்கவேண் டியுள்ளது.

தற்போதைய நிலையில் நூற் றுக்கு 50 வீதமான மக்கள் ஒரு வேளை உணவு உண்ணமுடி யாத நிலை ஏற்பட்டு வருகின்றது.

மலசலகூடத்தில் மஹிந்தவின் பதாகை மலசலகூடத்துக்குள் சென்ற பெண்ணொருவர் பதறிய டித் துக்கொண்டு வெளியே ஓடி வந்தார். ஏன் எனக் கேட்டால் உள்ளே ஒருவர் இருக்கின்றார் என்றார். யார் இருக்கின்றார் என்று உள்ளே சென்று பார்த் தால் ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷவின் பதாகை உள்ளே இருந்தது. உள்ளே எவரும் இல்லை. ஜனாதிபதியின் பதா கையே உள்ளது என்று அந்தப் பெண்ணிடம் கூறினோம்" – என்றார்.

(ற–சி)

# மலையக மக்கள் நலன் தொடர்பில் உறுதிமொழி

## ராதாகிருஷ்ணன் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.13

மலையக மக்களின் நலன்கள், குறிப்பாக அவர்களின் வீடமைப் புத் திட்டத்துக்கு முன்னுரிமை, அங்குள்ள மக்களுக்கு கல்வி மற்றும் வேலையில் கூடுதல் வாய்ப்புக்கள் போன்றவற்றில் உரிய கவனம் செலுத்தப்படும் எனும் உறுதிமொழி வங்கப்பட்ட தாலேயே எதிரணிக்கு ஆதரவு வழங்கத் தீர்மானித்தாகத் தெரி வித்துள்ளார் மலையக மக்கள் முன்னணியைச் சேர்ந்த ராதா கிருஷ்ணன்.

பி.பி.ஸி செய்திச் சேவைக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள் ளார்.

"முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஆட்சிக் காலத்தில் தோட்டஉட் கட்டமைப்பு மேம்பாட்டுக்காக தனியாக ஒரு அமைச்சகத்தை ஏற்படுத்தியிருந்தார். அது மஹிந்த தலைமையிலான ஆட்சிகாலத்தி ஒழிக்கப்பட்டது. எதிரணி தரப் பில் அந்த அமைச்சின் திட்டங் கள் முன்னெடுக்கப்படும் என வாக்குறுதி வழங்கப்பட்டது"– என்று அவர் தெரிவித்துள்ளார்.

"எதிரணியின் பொதுவேட்பாள ரான மைத்திரிபால சிறிசேனவு டன் மலையக மக்களின் நலன் கள் முன்னெடுக்கப்படும் என்பது தொடர்பில் ஒரு உடன்படிக்கை விரைவில் கையெழுத்தாகும். அதுபொதுமக்களின்பார்வைக்கு வைக்கப்படும்"– என்றும் அவர் கூறியுள்ளார்.

(ற)

31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம்
15.02. 1962

மறைவு
13.11.2014

கடந்த 13.11.2014
வியாழக்கிழமை
சிவபதமடைந்த

முத்துச்சாமி சண்முகநாதன்

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுமம் ஆத்ம சாந்திப் பிரார்த் தனையும் இன்று (13.12.2014) சனிக்கிழமை அவரது இல்லத்திலும் அதனைத் தொடர்ந்து மதியபோசனம் நாவலர் வீதியில் உள்ள T.C.T. மண்டபத்திலும் நடைபெறவுள்ளதால் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

05, உடையார் வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

குடும்பத்தினர்.

(54958)(10.6)

31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றிநவிலலும்

திருமதி
பத்மசோதி
சீனிவாசகம்



தம்பசிட்டி பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் வவுனியா குருமன் காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட எமது குடும்பத் தலைவி திருமதி பத்மசோதி சீனிவாசகம் அவர்கள் அமரத்துவம் அடைந்ததனைக் கேள்வியுற்று நேரில் வந்தும் தொலைபேசி மூலமும் அனுதாபங்களைப் பகிர்ந்து ஆறுதல் கூறி இறுதிச் சடங்கிலும் கலந்து கொண்ட மற்றும் பல வழிகளிலும் எமக்கு உறுதுணையாக நின்ற உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் ஆறாத்துயரின் மத்தியில் நன்றி நவில்கின்றோம். அத்து டன் 15.12.2014 திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும் ஆத்மசாந்திப்பிரார்த்தனையும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல.49/80D, பிள்ளையார் கோயில் வீதி,
குருமன்காடு, வவுனியா,
தொ.பே.024 222 3055

தகவல்: குடும்பத்தினர்.

## நூல் அறிமுக விழா

திருமறைக் கலாமன்றம் நடத்தும் மாஅருள் சந்திரனின்'யாழ்ப்பாண நாடகப் பாரம்பரியத்தில் பெண் கலைஞர்கள்' வரலாற்றுப் பதிவின் மறு பக்கம் நூல் அறிமுக விழா இன்று நடைபெறவுள்ளது.

திருமறைக் கலாமன்ற கலைத்தூது கலையகத்தில் இன்று மாலை 4 மணிக்கு கொழும்புத்துறை புனித வளனார் குருமடஅதிபர் செ.அன்புராசா அடிகள் தலைமையில் இந்த விழா நடைபெறும்.

பிரதம-விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சின்பிரதமகணக்காளர் ஆ.கிரிதரன்கலந்து கொள்வார். முதற் பிரதியை கிப்பொலிற்றா மதுரநாயகம் பெற்றுக் கொள்வார். ஆய்வுரையை திருமறைக் கலாமன்ற இயக்குநர் யோண்சன் ராஜ்குமார் நிகழ்த்துவார். (வ–135)

## யாழ்.மாநகரசபை ஊழியர் சிக்கன கடனுதவு கூட்டுறவுச்சங்கம்
### சிற்றுண்டிச்சாலை குத்தகைக்கான கேள்வி அறிவித்தல்

யாழ்.மாநகரசபை வளாகத்தினுள் பருத்தித்துறை வீதி, நல்லூரில் அமைந்திருக்கும் மேற்படி சங்கத்துக்குச் சொந்தமான சிற்றுண்டிச்சாலைக் கட்டடமும், தளபாடங்களும், சமையல்அறைப் பாத்திரங்களும் எதிர்வரும் 01.01.2015 ஆம் திகதி முதல் 31.12.2015 ஆம் திகதி வரையான ஒரு வருட காலத்துக்கான குத்தகைக்கு கேள்விகள் இத்தால் கோரப்படுகின்றன.

01. கேள்விப்படிவக் கட்டணம் ரூபா 300/= மீளளிக்கப்படக்கூடிய கேள்விப்பிணைப்பணமாக ரூபா 1000/= செலுத்துவதன் பேரில் வழங்கப்படும். (கேள்விப் படிவங்களில் மட்டும் கேள்விகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.)
02. பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப்படிவங்களை மேற்படி சங்க அலுவலகத்தினுள் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியினுள் சமர்ப்பித்தல் வேண்டும்.
03. வருடாந்தம் ஆகக் குறைந்த கேள்வித் தொகை ரூபா 135000/= (வரிகள் நீங்கலாக)
04. கேள்விப்படிவங்கள் 15.12.2014 ஆம் திகதி தொடக்கம் 23.12.2014 ஆம் திகதி நண்பகல் 12 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும்.
05. கிடைக்கப்பெறும் கேள்விகள் யாவும் 23.12.2014 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு திறந்து பரிசீலிக்கப்படும்.
06. மேலதிக விவரங்களை மேற்படி சங்கத்தின் அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். (சி/17983)(4.6.3)

| உப தலைவர் | செயலாளர் | பொருளாளர் |
|---|---|---|
| கோ.நரேந்திரன் | க.மோகனரூபன் | திருமதி ஜே.சுகிர்தாதேவி |

## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை மானிப்பாய்
## 2015 ஆம் ஆண்டிற்கான கேள்வி அறிவித்தல், மீள் கேள்வி அறிவித்தல்

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை மானிப்பாய் எல்லைக்குட்பட்ட சந்தைகள், இறைச்சிக்கடைகள், கோழி இறைச்சிக்கடைகள் என்பவற்றை 14.11.2014 ஆம் திகதி வெள்ளிக்கிழமை உதயன், வலம்புரி பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட கேள்வி அறிவித்தல் நிபந்தனைக் கமைவாக 2015 ஆம் ஆண்டு 01.01.2015 தொடக்கம் 31.12.2015 ஆம் திகதிவரை குத்தகைக்கு வழங்கப்படுவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கும் இறுதித்திகதி: 18.12.2014 பி.ப. 1.00 மணிவரை.
கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி: 19.12.2014 ந.ப. 12.00 மணிவரை
கேள்வி திறக்கும் திகதி : 19.12.2014 பி.ப. 2.00 மணிக்கு.

**2015 ஆம் ஆண்டிற்கான கேள்வி அட்டவணை**

| | சந்தைகள் துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையங்களுடன் இறைச்சிக் கடைகள், கோழி இறைச்சிக் கடைகள் விவரம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திர பணம் N.B.T தவிர | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு பணம் | ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த தொகை N.B.T தவிர | மாதாந்த வாடகை N.B.T தவிர |
|---|---|---|---|---|---|
| 1. | மானிப்பாய் கிராம உப அலுவலகம் | | | | |
| | 01.ஆனைக்கோட்டைச் சந்தி ஆட்டிறைச்சிக்கடை | 500.00 | 1500.00 | 50000.00 | |
| 2. | பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகம் | | | | |
| | 01.இளவாலை பொதுச் சந்தை கோழி இறைச்சிக்கடை | 500.00 | 1500.00 | 13750.00 | |
| | 02.மாதகல் பொதுச் சந்தை கோழி இறைச்சிக்கடை | 500.00 | 1500.00 | 16610.00 | 250.00 |

**2015 ஆம் ஆண்டிற்கான மீள்கேள்வி அட்டவணை**

| | சந்தைகள் துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையங்களுடன் இறைச்சிக் கடைகள், கோழி இறைச்சிக் கடைகள் விவரம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திர பணம் N.B.T தவிர | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு பணம் | ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த தொகை N.B.T தவிர | மாதாந்த வாடகை N.B.T தவிர |
|---|---|---|---|---|---|
| 1. | மானிப்பாய் பட்டின உப அலுவலகம் | | | | |
| | 01.மானிப்பாய் பொதுச் சந்தை | 1000.00 | 15000.00 | 1283888.00 | |
| | 02.மானிப்பாய் பொதுச் சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 1000.00 | 5000.00 | 136100.00 | 300.00 |
| 2. | மானிப்பாய் கிராம உப அலுவலகம் | | | | |
| | 01.சாவற்கட்டுச் சந்தை | 1000.00 | 5000.00 | 200395.00 | |
| | 02.ஆனைக்கோட்டைச் சந்தி கோழி இறைச்சிக்கடை | 500.00 | 1500.00 | 68985.00 | |
| 3. | பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகம் | | | | 250.00 |
| | 01.மாகியப்பிட்டிச் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 1500.00 | 59021.00 | |
| | 02.மாகியப்பிட்டிச் சந்தை கோழி இறைச்சிக் கடை | 500.00 | 1500.00 | 12540.00 | 250.00 |

சி.சி.மகேந்திரன்,
உப தவிசாளர்,
வலிதென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்.
11.11.2014
(சி/18244)(4.3.6)

## சாவகச்சேரி நகராட்சி மன்றம்
## 2015 ஆம் ஆண்டுக்கான வழங்குநர்களையும் ஒப்பந்தகாரர்களையும் பதிவு செய்தல்

சாவகச்சேரி நகராட்சி மன்றமானது 2015 ஆம் ஆண்டுக்கான கீழ்க் குறிப்பிடப்பட்ட வழங்கு பொருட்கள், சேவைகளை வழங்குவதற்கு தம்மை பதிவு செய்துகொள்ள விரும்பும் வழங்குநர்கள், உற்பத்தியாளர்கள், ஒப்பந்தகாரர்கள், அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள், வியாபார நிறுவனங்கள் மற்றும் சேவையாளர்கள் ஆகியோரிடமிருந்து விண்ணப்பங்களை கோருகின்றது. விண்ணப்பப்படிவங்கள் எமது அலுவலகத்தில் பதிவுக்கட்டணம் ரூபா 1000.00 செலுத்தி பெற்றுக்கொள்ள முடியும் விண்ணப்பங்கள் யாவும் 31.01.2015 ஆம் திகதி வரையும் எம்மால் ஏற்றுக்கொள்ளப்படும்.

**தொகுதிகள்**

தொகுதி "A" - பொருட்கள் வழங்குதல் (பொது)
தொகுதி "B" - சேவைகள் / வேலை.
தொகுதி "C"- வாகன திருத்தமும் சேவிஸ் செய்தலும்.

**பொருட்கள்**

| தொகுதி இல | பொருட்கள் வழங்குதல் (பொது) |
|---|---|
| A-01 | காகிதாதிகள் எழுதுபொருட்கள் உபகரணங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருட்கள். |
| A-02 | தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் (மரம்/இரும்பு/உருக்கு ஏனையவை) |
| A-03 | கணினிகள்,கணினியுடன் தொடர்புடைய ஏனைய உபகரணங்கள், தொலைநகல் இயந்திரம் இவற்றுடன் தொடர்புடைய ரோணர்கள், றிபன்கள் மற்றும் ஏனைய அலுவலக மின் உபகரணங்கள். |
| A-04 | யன்னல் திரைச்சீலைகள், சீருடைகள் மற்றும் துணிவகைகள். |
| A-05 | குளியலறைப் பொருத்திகள், மாபிள்க்கல் வகைகள் நீர்வழங்கலுக்கான பொருட்கள் மற்றும் அதனோடிணைந்த பொருட்கள். |
| A-06 | கட்டட இரும்புப் பொருட்கள், பெயின்ற்,வாணிஸ் மற்றும் சகல ஹாட்வெயர் பொருட்கள். |
| A-07 | மின்சாரப் பொருட்கள்,அதன் உதிரிப்பாகங்கள்,மின் இணைப்புக்கான பொருட்கள்,மின்மோட்டார்கள்,மின்சார பல்ப்புகள்,மின்விசிறிகள்,மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருட்கள். |
| A-08 | தும்புத்தடி விளக்குமாறு,கால்துடைப்பம்,மொப்பர் மற்றும் ஏனையவை. |
| A-09 | அழுக்குநீக்கும் பவுடர்கள், விம், ஹார்பிக் மற்றும் கிருமி நாசினிகள்,ஏனையவை. |
| A-10 | வாகன உதிரிப்பாகங்கள்,துணைப்பொருட்கள் ரயர் ரியூப் மற்றும் ஏனையவை. |
| A-11 | தோல்உற்பத்திப் பொருட்கள், கம்சப்பாத்துக்கள். |
| A-12 | எரிபொருட்கள் உராய்வு நீக்கிகள். |
| A-13 | நூலகங்களுக்கான நூல்கள். |
| A-14 | இரும்புப் பொருட்கள். |
| A-15 | கற்கள் மணல்வகைகள். |
| A-16 | தீராந்திகள்,பலகைகள்,சட்டங்கள். |
| A-17 | பனைமரங்கள், சலாகைகள். |
| A-18 | பாதணிகள், தோற்பொருட்கள். |
| A-19 | அலங்காரப் பொருட்கள். |
| A-20 | இலத்திரனியல் சாதனங்கள், துணைப்பொருட்கள். |

| தொகுதி இல | வேவைகள் விபரம் |
|---|---|
| B-01 | ஒலியமைப்பு சாதனங்களும் அதனோடு தொடர்புடைய உபகரணங்களும், தொழில்நுட்ப ஆலோசனையும் வழங்கல். |
| B-02 | உருக்கு, மரத்தளபாடங்கள் திருத்தம். |
| B-03 | மின்உபகரணங்கள் திருத்தம், சேவிஸ் செய்தல் (காற்றுக் குளிராக்கி ,தொலைநகல், நிழற்படப் பிரதிஇயந்திரம், கணினி, விரல் அடையாளத்தை பதிவுசெய்யும் இயந்திரம்) |
| B-04 | மின் மோட்டார்கள், நீர் இறைக்கும் இயந்திரங்கள், மின்விசிறிகள், ஜெனரேட்டர்கள் திருத்துதலும் மீள முறுக்குதலும். |
| B-05 | பதிப்பக வேலை - சகலவித படிவங்கள், ஏனையவை. |
| B-06 | கட்டட அமைப்பும், திருத்தவேலையும். |
| B-07 | உள்ளக தொலைபேசி இணைப்பும், பராமரித்தலும். |
| B-08 | இலத்திரனியல் சாதனங்கள் திருத்தல். |
| B-09 | கோலவுடை தைத்தல். |
| B-10 | இறப்பர் முத்திரைவகைகள் தயாரித்து வழங்கல். |

| தொகுதி இல | வாகன திருத்தமும் சேவிஸ் செய்தலும். |
|---|---|
| C-01 | சகல விதமான வாகனதிருத்தமும், மின்சார வேலை, வாகன உட்பக்கம், சீற் என்பவற்றக்கான குசன் வேலை. |
| C-02 | சகலவிதமான வாகனமும் சுத்திகரிப்பு. |
| C-03 | வாகனங்களுக்கு ரியூப் ஒட்டுதல், உலோக வேலைகள். |

**நிபந்தனைகள் :-**

1. வழங்கல்கள் / சேவைகள் 2015 ஆம் ஆண்டிற்கு மட்டும் செல்லுபடியானதாகும்.
2. திருப்திகரமற்ற வழங்கல்கள் / சேவைகள் நிராகரிக்கும் உரிமை தவிசாளருக்கு உண்டு.
3. பதிவிற்காகப் பெறப்பட்ட விண்ணப்பங்களை எதுவித காரணங்களும் தெரிவிக்காமல் நிராகரிக்கும் உரிமை தவிசாளருக்கு உண்டு.
4. மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

இறப்பியேல் தேவசகாயம்பிள்ளை
தவிசாளர்,
நகராட்சி மன்றம், சாவகச்சேரி.
(சி/17997)(4.3.6)

# கட்சி தலைமைக்கு கட்டுப்படுவோம்

## மு.கா. உறுப்பினர் உறுதிமொழி வழங்கினர்



கொழும்பு, டிசெ.13
எந்தச் சூழ்நிலையிலும் கட்சித் தலைமைத்துவத்துக்குக் கட்டுப்பட்டு நடப்போம் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர்கள் அந்தக் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் மற்றும் உலமாக்கள் முன்னிலையில் உறுதிமொழி வழங்கியுள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான தனது உத்தியோகபூர்வ தீர்மானத்தை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இன்னும் ஓரிரு தினங்களில் வெளியிடும் என எதிர்பார்க்கப்படும் நிலையிலேயே இந்த உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்வு நேற்றுமுன்தினம் முஸ்லிம் காங்கிரஸின் தலைமையகமான தாருஸ்ஸலாமில் நடைபெற்றது.

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த உலமாக்கள் குழுவினர் வியாழக்கிழமை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமை சந்தித்துக் கலந்துரையாடினார். அதில் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் இதுவரை நடத்தப்பட்ட சந்திப்புக்கள், பேசப்பட்ட முக்கிய விடயங்கள், முன்வைக்கப்பட்ட பிரச்சனைகள், அதற்கான தீர்வுகள் தொடர்பில் அரசின் நிலை போன்ற விடயங்களை அமைச்சர் ஹக்கீம் விளக்கினார்.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் கிழக்கு முஸ்லிம்களின் நிலைமை தொடர்பில் உலமாக்கள் ஹக்கீமிடம் தெரிவித்தனர்.

அதன்போது ஜனாதிபதித் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் எடுக்க வேண்டிய தீர்மானம் குறித்தும் அது தொடர்பில் கட்சியின் உறுப்பினர்கள் தலைமைத்துவத்துக்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டியதன் அவசியம் குறித்தும் உலமாக்கள் வலியுறுத்தியுள்ளனர். இதனையடுத்தே மேற்படி உறுதிமொழி வழங்கும் நிகழ்வு நடைபெற்றுள்ளது.

தவிசாளரும் அமைச்சருமான பஷீர் சேகுதாவூத், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தௌபீக், மாகாண சபை உறுப்பினர்களான சட்டத்தரணி லாஹிர் இஹ்ஸல். உவைஸ் ஆகியோர் தவிர்க்க முடியாத காரணங்களால் இந்த நிகழ்வில் கலந்துகொள்ள வில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

(ற-10)

# ஓய்வு பெறுவதற்கு ரட்ணசிறி முடிவு

## பொதுவேட்பாளருக்கே ஆதரவு என்றும் தகவல்

கொழும்பு, டிசெ.13
முன்னாள் பிரதமர் ரட்ணசிறி விக்ரமநாயக்க நடப்பு நாடாளுமன்றத்தின் பின்னர் அரசியலில் இருந்து ஓய்வுபெற தீர்மானித்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

பொது வேட்பாளருக்கு ஆதரவு வழங்கும் எண்ணத்தை கொண்டிருந்த போதிலும் வயது காரணமாக அவர் தொடர்ந்தும் அரசில் இருப்பதற்கு முடிவெடுத்துள்ளார் என்று தீர்மானித்துள்ளார் என்றும் கூறப்படுகின்றது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் ஆட்சியில் ரட்ணசிறி விக்ரமநாயக்க பிரதமராக பதவி வகித்தார். அவர் தற்போது சிரேஷ்ட அமைச்சராகப் பதவி வகித்து வருகிறார். எதிர்வரும் ஜனவரி மாதம் புதிய ஜனாதிபதி பதவியேற்ற பின்னர் மூன்று மாதங்களில் தற்போதைய நாடாளுமன்றம் கலைக்கப்பட உள்ளது.

81 வயதான ரட்ணசிறி விக்ரமநாயக்க 1960 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்துக்கு முதல் முறையாகத் தெரிவுசெய்யப்பட்டார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட துணைத்தலைவராகவும் விக்ரமநாயக்க பதவி வகித்து வருகிறார்.

ரட்ணசிறி விக்ரமநாயக்க அரசில் இருந்து விலகாத போதிலும் ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளருக்கே ஆதரவு வழங்குவார் என முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன நேற்றுமுன்தினம் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கூறியிருந்தார். (ற)

# எம்.பியானார் அமீர் அலி

அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தலைமையிலான அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் அமீர் அலி நேற்று நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவியேற்றுக்கொண்டார். ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக பதவி வகித்த ஏ.எச்.எம். அஸ்வர் பதவி விலகியதை அடுத்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கு அமீர் அலி நியமிக்கப்பட்டுள்ளார். அஸ்வர் கடந்த மாதம் 28 ஆம் திகதி தனது பதவியிலிருந்து விலகினார். அந்தப் பதவியை அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்கு வழங்குவது என தீர் மானிக்கப்பட்டது. எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு வழங்கு வதற்காகவே இந்தப் பதவி வழங் கப்பட்டுள்ளது என்று தெரிவிக் கப்படுகின்றது.

(ற)

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வவுனியா மக்களுக்கு உதவுக

## வடக்கு மாகாண சபையிடம் உறுப்பினர் தியாகராசா கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 13
வெள்ள இடரால் பாதிக்கப்பட்ட மக்கள் தமக்கு நிரந்தர வீடுகள் அமைத்துத்தரப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்றனர். அதனை இந்தச் சபையில் வைத்து முதலமைச்சரிடம் தெரியப்படுத்துகின்றேன். அந்த மக்களுக்குரிய நிரந்தர வீடுகள் அமைப்பதற்குரிய வசதிகளை ஏற்படுத்தி வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றேன் – இவ்வாறு தெரிவித்தார் வடக்கு மாகாணசபையின் வவுனியா மாவட்ட ஆளுங்கட்சி உறுப்பினர் ம.தியாகராசா. வடக்கு மாகாணசபையின் 20 ஆவது கூட்டத்தொடரின் இரண்டாவது கூட்டம் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"வவுனியா மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள வெள்ள இடர் காரணமாக பல கிராமங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. மக்கள் வீடுகளை இழந்து நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இந்த இடரால் வவுனியா மாவட்டத்தில் சுமார் 18 வீடுகள் முற்றாகச் சேதமுற்றதுடன் 720 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

11 குளங்கள் உடைப்பெடுத்தது டன் சுமார் 20 குளங்கள் உடைப்பெடுக்கக் கூடிய ஆபத்தான நிலையில் உள்ளன. சுமார் 320 ஏக்கர் விவசாயநிலம் சேதமடைந்துள்ளது. வேறுபாடுகள் எதுவும் இன்றி முதலமைச்சர், அமைச்சர்கள் அன்னவரும் ஒன்றிணைந்து இந்த வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு உள்ள அனைத்து மக் களையும் இடரில் இருந்து மீட்டெடுக்க ஆவன செய்ய வேண்டுமென இந்த அதியுயர் சபையை வேண்டி நிற்கின்றேன்.

இடர் முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் சூரியராஜ் குறிப்பிட்ட இடங்களைப் பார்வையிட்டு உதவி புரிந்துவருகிறார். ஆனால் போதுமான முக்கிய உதவிகள் கிடைக்கவில்லை என்று மக்கள் ஆதங்கப்பட்டுக்கொள்கின்றனர். அத்துடன் மாகாணசபையில் இருந்து எந்தவித உதவியும் கிடைக்காததையிட்டு மக்கள் பெரும் கவலையடைந்துள்ளார்கள். இந்த விடயங்களைக் கருத்தில் கொண்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்க முன்வரவேண்டும்.

மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட மக் களுக்கு அமைச்சர் பா.டெனீஸ்வரன் தனது நிதியில் இருந்து நிவாரணம் வழங் கியமைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். வவுனியா மாவட்டத்துக்கு நிவாரணம் வழங்காததையிட்டு கவலை அடைகின்றேன். வவுனியா மாவட்டம் வடக்கு மாகாணசபைக்கு உட்பட்டதுஎன்பதையும் கூறி வைக்க விரும்புகின்றேன்." – என்று அங்கு அவர் மேலும் தெரிவித்தார்.

(ற-5)


## மரண அறிவித்தல்

### திருமதி கண்மணி விஷ்ணு



ஆத்திசூடி வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கண்மணி விஷ்ணு நேற்று (12.12.2014) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் விஷ்ணுவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற வல்லிபுரம்-செல்லாச்சி தம்பதியரின் மகளும், சின்னத்தம்பி-நாகமுத்து தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற தியாகராசா மற்றும் பரராஜசிங்கம் ஆகியோரின் சகோதரியும், ராசமணி, யோகேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும், மகாலிங்கம், பரமேஸ்வரி (ராணி) ஆகியோரின் அன்புத் தாயும், சிவசுப்பிரமணி யத்தின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.12.2014) ஞாயிற்றுக் கிழமை மு.ப 10 மணிக்கு 5ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதியிலுள்ள இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

68/1, 5ஆம் ஒழுங்கை,
பிறவுன் றோட், யாழ்ப்பாணம்.
(54957)
(10.6)
தகவல்: மகன்-
வி.மகாலிங்கம்.



## மரண அறிவித்தல்

### டாக்டர் கந்தையா தங்கராசா (பரம் டாக்டர் - வதிரி)



வதிரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட டாக்டர் கந்தையா தங்கராசா (பரம் டாக்டர்) அவர்கள் கடந்த 11.12.2014 வியாழக்கிழமை சிவபதமெய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - சின்னப்பிள்ளை தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான கோவிந்தசாமி - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், திருமதி லோகசக்தியின் கணவரும், சிவானி (ஜேர்மனி), சுரேந்திரா (பிரான்ஸ்), சுகிர்தா, ஜெ.காயத்திரி (லண்டன்), ரம்மியன் (பிரான்ஸ்), உஷானந் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் 15.12.2014 திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக ஆலங்கட்டை இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சக்தி இல்லம், வதிரி.
077 482 0506,
021 226 3720
(பி18248)
(12.6)
தகவல்:
குடும்பத்தினர்.

# செய்திகள்

## ஐ.நா. விசாரணைக்கு ஒத்துழைப்பு அவசியம்

### சாட்சிகளின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துமாறு இலங்கை அரசிடம் பிரிட்டன் மீண்டும் வலியுறுத்தல்



லண்டன், டிசெ. 13

ஐ.நா. விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும், சாட்சிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறும் இலங்கை அரசிடம் பிரிட்டன் மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

இலங்கைக்கும் பிரிட்டனுக்கும் இடையிலான வர்த்தக உறவுகள் குறித்து பிரிட்டன் நாடாளுமன்றத்தின் பிரபுக்கள் சபையில் நேற்று முன்தினம் குறுகிய நேர விவாதம் ஒன்று இடம்பெற்றது. இந்த விவாதத்துக்குப் பதிலளித்து உரையாற்றியபோதே பிரிட்டன் வர்த்தக அமைச்சர் லிவிங்ஸ்டன் மேற்கண்டவாறு வலியுறுத்தினார்.

'வர்த்தகம் பிரிட்டனின் செழிப்புக்கு மட்டுமன்றி இலங்கையின் செழிப்புக்கும் முக்கியமானது. எனினும், சுதந்திரமான வர்த்தகத்துக்குச் செல்வதற்கு முன்பாக, மனித உரிமைகள் பற்றிய கடப்பாடுகளும் உள்ளன. ஐ.நா. மனித உரிமைகள் சபையில் கடந்த மார்ச் மாதம் கொண்டு வரப்பட்ட தீர்மானத்துக்கு பிரிட்டன் ஆதரவு வழங்கியிருந்தது.

இந்தத் தீர்மானம், நல்லிணக்கம் மற்றும் மனித உரிமைகள் நிலையில் முன்னேற்றத்தை எட்டும்படி இலங்கையைக் கோரியது. போரின்போது இரு தரப்பினராலும் இழைக்கப்பட்ட சர்வதேசச் சட்ட மீறல்கள் குறித்து விசாரணை செய்யுமாறு, ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் அலுவலகத்துக்கும் இந்தத் தீர்மானம் ஆணை வழங்கியுள்ளது. நாம் இந்த விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்கும்படியும், விசாரணையில் சாட்சியமளிப்போரின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும்படியும், புனர்வாழ்வு மற்றும் மீள்குடியமர்வு குறித்து சொந்த ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தும் படியும் இலங்கையைத் தொடர்ந்தும் வலியுறுத்துகின்றோம் – என்றார். (த–5)

## தயாராகிறது கறுப்புப் பதிவேடு

### எச்சரிக்கிறார் மங்கள சமரவீர



யாழ்ப்பாணம், டிசெ. 13

தேர்தல் விதிமுறைகளை மீறிச் செயற்படும் அரச மற்றும் பாதுகாப்பு அதிகாரிகள் வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்படும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமது அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தும் – தேர்தல் விதிமுறைகளை மீறும் அரச அதிகாரிகளின் விவரங்களைப் பதிவு செய்யும், கறுப்புப் பதிவேடு ஒன்றைத் திறந்துள்ளோம். அதில், தேர்தல் விதிகளை மீறும் அரச அதிகாரிகள் பற்றிய விவரங்களைப் பதிவு செய்து, வாராந்தம் ஒரு செய்திக் கொத்தாக தயாரித்து வெளிநாட்டுத் தூதரகங்களுக்கு அனுப்பவுள்ளோம். அவர்களுக்கும் அவர்களின் குடும்பத்தினருக்கும் வெளி நாடுகளில் நுழைவிசைவு (விஸா) கிடைக்காமல் தடுப்பதே எமது நோக்கம். அவர்கள் மட்டுமன்றி அவர்களின் பிள்ளைகள் கூட வெளி நாடுகளில் கல்வி கற்கச் செல்ல முடியாத நிலை ஏற்படும் – என்றார். (த–5)

## யாழில் கடத்திய ஹன்ரர் குளியாப்பிட்டியில் மீட்பு

### பொலிஸாரால் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், டிசெ. 13

யாழ்ப்பாணத்தில் ஹன்ரர் வாகனத்தைக் கொள்வனவு செய்வதற்காக விலை மதிப்பீடு செய்யவெனக்கூறி வாகனத்துடன் தலைமறைவானவர் தென் பகுதியில் குளியாப்பிட்டியில் வைத்துக் கைது செய்யப்பட்டார்.

அந்த வாகனத்தைப் புத்தக மாற்றம் செய்து பிறருக்கு விற்பனை செய்திருந்த நிலையிலேயே அவர் கைது செய்யப்பட்டார்.

யாழ்.நல்லூர் முடிமாடிவயைச் சேர்ந்த தனம் என்றழைக்கப்படும் நபரே கைது செய்யப்பட்டார். அவருடன் சேர்ந்து செயற்படும் நிரோஜன் என்பவரும் அதே குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு யாழ்.நீதிமன்றினால் விளக்கமறியலில் வைக்கப்பட்டுப் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த நபர்கள் குறித்த ஹன்ரர் வாகனத்தை 23 லட்சம் ரூபாவுக்குக் கொள்வனவு செய்வதாகக் கூறி முற்பணமாக 3 லட்சம் ரூபாவைக் கொடுத்துவிட்டு வாகன மதிப்பீட்டுக்கு என அதனைஎடுத்துச் சென்றிருந்தனர். சென்றவர்கள் திரும்பி வரவில்லை. அது தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது. அதனடிப்படையில் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வந்தது.

இந்த நிலையில் குறித்த வாகனம் குளியாப்பிட்டியவில் நிற்பதாக விசேட பொலிஸ் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் அங்கு சென்ற பொலிஸார் வாகனத்தைக் கைப்பற்றினர்.

ஆனால் அந்த வாகனத்தை யாழ்ப்பாணத்திலிருந்து எடுத்துச் சென்றவர் அதனைப் பிறருக்கு விற்றுள்ளார். புத்தகத்தைக் கொடுத்துப் போலியான கையொப்பம் இட்டே அதனை விற்பனை செய்துள்ளார். அந்த வாகனம் தற்போது யாழ்.நீதிமன்றில் உள்ளது. அது தொடர்பான வழக்கு எதிர்வரும் ஜனவரிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. சந்தேகநபர்கள் இருவரும் தலா 10 லட்சம் ரூபா பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். (த–4)

## தொலைபேசி அழைப்பில் நீதிமன்றத்தின் தீர்ப்பை மாற்றும் முறை முடிவுக்கு

### மைத்திரிபால கூறுகிறார்

யாழ்ப்பாணம், டிசெ. 13

தொலைபேசி அழைப்பில் நீதிமன்றத் தீர்ப்பை மாற்றும் நடைமுறையை முடிவுக்குக் கொண்டு வருவேன் என்று பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

வத்தளையில் நடந்த தேர்தல் பரப்புரைக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சிகரெட் பெட்டிகளில் உருவப் படம் பொறிப்பது தொடர்பில் நீதிமன்ற வழக்கு இடம்பெற்றது. இதன் தீர்ப்பு ஒரு தொலைபேசி அழைப்பில் மாற்றப்பட்டது. தற்போதைய அரசு ஆரம்பத்தில், இடதுசாரியாக இருந்தாலும், அந்தப் பாதையிலிருந்து இப்போது காணாமற்போயுள்ளது.

லண்டனிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட குதிரையில் ரேஸ் ஓடுவது போல, அவரின் புதல்வர்கள் ஹெலிக்கொப்டரில் விளையாடுகின்றனர் என்றும் மைத்திரி இதன்போது குறிப்பிட்டார்.



இந்தப் பரப்புரைக் கூட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட பொது எதிரணித் தலைவர்கள் பலரும் உரையாற்றினர். (த–5)

## சதொசவுக்கு 3 தினங்களில் ரூ. 180 லட்சம் வருமானம்

கொழும்பு, டிசெ. 13

கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தின் (சதொச) நடமாடும் விற்பனை நிலையங்கள் மூலம் அத்தியாவசியப் பொருள்களை நியாய விலைக்கு விற்பனை செய்யும் முதற்கட்டச் செயற்பாட்டில் 3 தினங்களுக்குள் 180 லட்சம் ரூபா வருமானம் கிடைத்திருப்பதாக கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தினால் நடத்தப்படும் இந்த நடமாடும் விற்பனை நிலையங்கள் மூலமாக 60க்கும் மேற்பட்ட அத்தியாவசியப் பொருள்களை நுகர்வோர் நியாய விலையில் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு தற்போது கிட்டியுள்ளதாகவும் அமைச்சர் கூறினார். அரிசி, பயறு, கௌபி, பருப்பு, கடலை, உருளைக்கிழங்கு, பெரியவெங்காயம்,சின்னவெங்காயம், வெள்ளைப்பூடு, செத்தல் மிளகாய், பால்மா வகைகள், சீனி, நெத்தலிக் கருவாடு, முட்டை, ரின் மீன்கள், கோதுமை மா மற்றும் ஏராளமான அத்தியாவசியப் பொருள்களை இந்த நடமாடும் விற்பனை நிலையங்கள் மூலம் பொது மக்கள் கொள்வனவு செய்து கொள்ள முடியும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

எதிர்காலத்தில் இந்தச் சேவைக்கு மேலும் சிறிய ரக லொறிகளை இணைத்து நடமாடும் விற்பனைச் சேவையை விரிவுபடுத்தவுள்ளதாகவும் அமைச்சர் ஜோன்ஸ்ரன் பெர்னாண்டோ தெரிவித்தார். (த–22)

# போர் வெற்றியில் பங்கு கேட்கின்றனர் முஸ்லிம்களும்

## புலிகள் இயக்கத்தை உடைத்ததாக ஹுனைஸ் எம்.பி. பெருமிதம்



காத்தான்குடி, டிசெ.13

உலகத்தில் பலம் பொருந்திய ஓர் இயக்கம் என்றால் அது விடுதலைப் புலிகள் இயக்கம் தான். அந்த இயக்கத்தை இரண்டாகப் பிரித்து போர் வெற்றிக்கு வித்திட்ட பெருமை ஒரு முஸ்லிமையே சாரும். அதுவும் இந்த கிழக்கு மண் ஈன்றெடுத்த பிள்ளை யென்றால் அதுமிகையாகாது – இவ்வாறு பெருமிதமாகத்தெரிவித்துள்ளார் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாரூக்.

ப.1 விரிவு

அண்மையில் நல்லாட்சிக்கான மக்கள் முன்னணியால் காத்தான்குடியில் நடத்தப்பட்ட நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"இந்த அரசு போரை முடிவுக்குக் கொண்டு வந்தது, அதை நாங்கள் ஏற்றுக் கொள்கின்றோம் ஆனால் அவர்கள் சொல்லுவது போன்று சிங்கள இராணுவம் மாத்திரம் இந்த வெற்றிக்குச் சொந்தக்காரர்கள் அல்ல, இந்தப் போர் வெற்றியில் முஸ்லிம்களுக்குப் பெரும் பங்குண்டு."– என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

"இந்த நாட்டின் வளர்ச்சியிலும், அபிவிருத்தியிலும் முஸ்லிம்களின் பங்கு ஒரு முக்கிய இடத்தில் இருந்தும் அது மழுங்கடிக் கப்பட்டு மறைக்கப்பட்டு வருகின்றது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் அதிகூடிய காலம் சுமார் 44 வருடங்கள் அங்கம் வகித்த அக் கட்சியின் செயலாளர் மைத்திரிபால சிறிசேனா உட்பட பல முக்கிய அமைச்சர்கள் இந்த நாட்டில் நிலவுகின்ற சர்வாதிகார ஆட்சிக்கு முடிவு கட்டி நல்லாட்சியை ஏற்படுத்த வேண்டுமென பொது எதிரணியில் இணைந்துள்ள போதும் எமது முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இன்னமும் முஸ்லிம்சமூகத்தைக்காட்டிக்கொடுத்து பணத்துக்கு சோரம் போனவர்களாக இருக்கின்றார்கள்."– என்று அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் முஸ்லிம்கள் மீதும், அவர்களின் வணக்கஸ்தலங்கள் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டபோது அவற்றையெல்லாம் கண்டும் காணாமலும் இருந்த இந்த அரசை வீட்டுக்கு அனுப்ப வேண்டும். சர்வாதிகார ஆட்சிக்கு முடிவுகட்ட வேண்டுமென குரலெழுப்பிய முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இப்போது அந்தச் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது, ஆனால் அவர்களெல்லாம் இன்று வாய்மூடி மௌனிகளாக இருக்கின்றார்களென்றால் வாக்களித்த முஸ்லிம்களுக்கும், தங்களின் வாக்குறுதிகளுக்கும் அல்லாஹ்விடம் என்ன பதில் சொல்லப்போகின்றார்கள்?."– என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

"முஸ்லிம்சமூகத்தின்விடிவிற்காக ஒன்றுபட்டுள்ள கூட்டாட்சியில் இணைந்து பொது வேட்பாளரை வெற்றி பெறச்செய்வதனூடாக இந்தநாட்டில்முஸ்லிம்களின்,சிறுபான்மையினரின்இருப்பை உறுதிப்படுத்துவோம்"– என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ற–18)



ஜனாதிபதி தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் பரப்புரைகள் நாடளாவிய ரீதியில் விறுவிறுப்படைந்துள்ளன. நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை பொது எதிரணியின் ஜனாதிபதி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனாவை ஆதரித்து அம்பாறை மாவட்டங்களில் பல இடங்களில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன. (ற–10)

## மேல்மாகாண சபை கைநழுவுகின்றது?

### மேலுமொரு ஆளும் கட்சி உறுப்பினர் தாவினார் எதிரணிக்கு

கொழும்பு, டிசெ. 13

மேல் மாகாண சபையின் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி உறுப்பினர் சட்டத்தரணி கீர்த்தி உடவத்த தனது ஆதரவை பொது வேட்பாளர் மைத்திரிபாலசிறிசேனவுக்கு வழங்கத் தீர்மானித்துள்ளார். அதையடுத்து மேல் மாகாண சபையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பெரும்பான்மை ஆட்டம்காணத்தொடங்கியுள்ளது.

மேல் மாகாணசபையின் ஆளுங்கட்சி உறுப்பினர் ஹிருணிகா பொது எதிரணிக்கு ஆதரவு தெரிவித்துள்ளார். இந்த நிலையில் தற்போது கீர்த்தி உடவத்த பொது எதிரணிக்கு தாவியுள்ளார். கிருலப்பனையில் நடைபெற்ற கூட்டமொன்றில் வைத்து, தனது ஆதரவை பொது எதிரணிக்கு வழங்குவதாக அவர் தெரிவித்துள்ளார். (ற–5)

## தகவல் அறியும் சட்டம் நூறு நாள்களுக்குள்

### ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.13

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன வெற்றி பெற்றால், அவர் வென்ற நூறு நாள்களுக்குள் தகவல் அறியும் சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படுமென்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் கொழும்பில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

"தகவல் அறியும் சட்டத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்கு தனது கட்சி பல முறை முயற்சி செய்த போதிலும் தற்போதைய அரசு அதற்கு ஒத்துழைப்பு வழங்காத காரணத்தால் அந்த முயற்சி தோல்வியடைந்து. "– என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

பறிக் கப்பட்டுள்ள ஊடக சுதந்திரம் மைத்திரிபால சிறிசேனவின் வெற்றியின் பின்பு மீண்டும் நிலைநாட்டப்படும். அதே போன்று பதவியேற்று நூறு நாள்களுக்குள் தகவல் அறியும் சட்டம் நாடாளுமன்றத்தில் நிறை வேற்றப்படும்"– என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற)

## மைத்திரிக்கு ஆதரவு தேடி பெண்களுக்கான கூட்டம்

### நல்லாட்சிக்கான தேசிய முன்னணி நடத்தியது

காத்தான்குடி, டிசெ, 13

நல்லாட்சிக்கான தேசிய முன்னணி, ஜனாதிபதி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவு தெரிவித்து பெண்களுக்கான பொதுக்கூட்டம் ஒன்றை நடத்தியுள்ளது. இந்தக் கூட்டம் நேற்றுமுன்தினம் காத்தான்குடியில் நடத்தப்பட்டது.

நல்லாட்சிக்கான மக்கள் இயக்கத்தின் மக்கள் அரங்கில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் மகளிர் குழு உறுப்பினர்கள், அங்கத்தவர்கள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர். கூட்டத்தில் நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் தவிசாளர் பொறியியலாளர் எம்.எம். அப்துர் ரஹ்மான் மற்றும் அதன் பொதுச்செயலாளர் எம்.ஆர். நஜா முஹம்மத் ஆகியோர் உரையாற்றினார்கள்.

இதேவேளை மேற்படி கூட்டத்திற்கான ஏற்பாடுகளை சூறா சபை உறுப்பினர்கள் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் மேற்கொண்டிருந்தனர். (ற–10)

## மைத்திரி ஆட்சிக்கு வந்தால் தமிழீழம் மலரும்

### கட்சி தாவலுக்கு காரணம் கூறுகின்றார் உதய கம்மன்பில

கொழும்பு, டிசெ.13

பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன ஆட்சி பீடமேறினால், தமிழீழம் மலரும் சாத்தியக்கூறுகளே உள்ளன. அதனால் அரசைப் பாதுகாக்கவே மீண்டும் அதில் இணைகின்றேன் எனத்தான் கட்சி தாவியமைக்கு காரணம் கற்பித்தார் ஜாதிக ஹெல உறுமயவின் முன்னாள் பிரதிப் பொதுச் செயலாளரும் மேல் மாகாண சபையின் முன்னாள் அமைச்சருமான உதய கம்மன்பில.

"எமது கொள்கைகளை மறந்து பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுடன் ஹெல உறுமய கைகோர்த்துள்ளது. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதில், ஹெல உறுமயவுக்கு உடன்பாடில்லை. கட்சிக் கொள்கையை விட தாய் நாட்டின் ஸ்திரத்தன்மை முக்கியம் என்பதற்காக ஆளும் தரப்புடன் இணைந்து கொண்டேன் என்றும் அவர் கூறியுள்ளார்.

அண்மையில் அரசிலிருந்து எதிர்க்கட்சியில் இணைந்த உதய கம்மன்பில மீண்டும் எதிரணியிலிருந்து ஆளும் கட்சிக்குத் தாவினார். அதன் பின்னர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நடந்த ஊடகவியலாளர் சந்திப்பின்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"இந்த முடிவு மிகவும் கவலையுடன் எடுக்கப்பட்ட ஒன்றாகும். கட்சி ஆரம்பிக்கப்பட்டு 15 வருட காலமாக விசுவாசமாக இருந்த எனக்கு மைத்திரிபால வெற்றி பெறலாம் என்ற அச்சத்தின் காரணமாகவே இந்த முடிவை எடுக்க வேண்டி ஏற்பட்டது. நான் கட்சியை மிகவும் நேசிக்கின்றேன். ஆனால் அதைவிடவும் தாய் நாட்டை நேசிக்கின்றேன். ஹெலஉறுமயவுக்கெனக்கொள்கைகள் உள்ளன. நாங்கள் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையில் சில திருத்தங்களையே செய்ய வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருந்தோம். ஆனால், பொது எதிரணி வேட்பாளர் ஐக்கிய தேசியக் கட்சியுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தில் 100 நாள்களில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிப்பதாக கைச்சாத்திட்டார்."– என்றும் அவர் கூறியுள்ளார்.

மைத்திரிபால சிறிசேன ஆட்சி பீடம் ஏறினால் நாட்டில் மக்கள் ஆட்சி இல்லாமல் போய் தமிழீழம் உருவாக்கப்படக்கூடிய சாத்தியங்கள் உள்ளன. ஏனெனில் இந்த எதிர்க்கட்சிக் கூட்டணியில் இருப்பவர்கள் மேற்குலக நாடுகளின் முகவர்கள். இதனால் தற்போதுள்ள அரசை பாதுகாக்க வேண்டியது இலங்கையர் என்ற வகையில் எனது பொறுப்பாகும். எனது தீர்மானம் குறித்து கட்சித்தலைவர் ஓமல்பே தேரரிடமும், சம்பிக்க ரணவக்கவிடமும் தெரிவித்துக் கொள்கிறேன்.

குறிப்பாக கட்சியைப் பிளவு படுத்த வேண்டும் என்ற எண்ணம் எனக்கில்லை. எந்தவித எதிர்ப்பார்ப்புக்களும் இன்றியே அரசுடன் இணைந்து கொள்கிறேன்" – என்று அவர் கூறியுள்ளார். (ற)

# வீழ்ந்து நொருங்கியது நேற்று விமானப் படையின் அன்ரனோவ்

## அத்துருகிரியவில் சம்பவம்: நால்வர் சம்பவ இடத்திலேயே சாவு; ஒருவர் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில்





இலங்கை விமானப்படையின் 'அன்ரனோவ் – 32' ரக விமானம் நேற்றுக் காலை அத்துருகிரியபகுதியில்வீழ்ந்துநொருங்கி தீப்பற்றி எரிந்து நாசமானது. இந்த விபத்தில் நால்வர் சம்பவ இடத்திலேயே உடல் கருகிச் சாவடைந்தனர். மற்றொருவர் மோசமான தீக்காயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

காலை 6.20 மணிக்கு திடீரென பெரும் இரைச்சலுடன் மரங்கள் அடர்ந்த பகுதியில் விமானம் வீழ்ந்து நொருங்கி விளாசி எரிந்தது என்று சம்ப வத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.

ஜோகந்தர இறப்பர் தோட் டத்திலேயே விமானம் வீழ்ந்து நொருங்கியது.

ரஷ்ய நாட்டுத் தயாரிப்பான இந்த 'அன்ரனோவ்' விமானத்தில் விமானிகள் உட்பட ஐந்து விமானப் பணியாளர்கள் இருந்தனர் என்று விமானப் படைப் பேச்சாளர் விங் கொமாண்டர் ஜிகான் செனவிரட்ண தெரிவித்தார். விபத்து நிகழ்ந்தபோது விமானம் ரத்மலானை விமான நிலையத்தில் தரையிறங்குவதற்குத் தயாராகிக் கொண்டிருந்தது என்றும் அவர் குறிப்பிட்டார். எனினும் ஓடு பாதையைத் தெளிவாகப் பார்க்க முடியவில்லை என்று விமானிகள் கட்டுப்பாட்டு நிலையத்துக்கு அறிவித்துள்ளனர். அதன் பின்னர் விமானத்துடனான தொடர்பு திடீரெனத் துண்டிக்கப்பட்டு விட்டது.

சம்பவ இடத்தில் உடனடியாக இராணுவத்தினரும் கடற்படையினரும் குவிக்கப்பட்டனர். தீயணைப்புவாகனங்கள் வரவழைக்கப்பட்டு, பற்றி எரிந்த விமானத்திலிருந்த தீ அணைக்கப்பட்டது. அந்தப் பகுதியில் அமைந்திருந்த நான்கு வீடுகளில் மூன்று விபத்தில் சேதங்களுக்கு உள்ளாகின. இருந்த போதிலும் பொது மக்கள் எவருக்கும் காயம் ஏதும் ஏற்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர். சேதமடைந்த வீடுகளில் ஒன்றின் கூரை மிக மோசமாகச் சேதமடைந்துள்ளது.

மோசமான காலநிலையே விபத்துக்கான காரணமாக இருக்கலாம் என ஊகிப்பதாகத் தெரிவித்த விமானப்படைப் பேச்சாளர், முழுமையான விசாரணைகளின் பின்னரே விரிவான தகவல்களை வழங்கமுடியும் என்றார். (உ–10)



உ.1 விரிவு



- இந்த விபத்தில் படுகாயமடைந்து கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தவரின் உயிரைக் காப்பாற்றும் பொருட்டு எரிந்த நிலையில் காணப்பட்ட அவரது கை, கால் அவசர சத்திர சிகிச்சை மூலம் அகற்றப்பட்டன என்று வைத்தியசாலை வட்டாரங்கள் நேற்றுமாலை தெரிவித்தன.
- இந்த விபத்தை அடுத்து அன்ரனோவ் வகை விமானங்களின் பயன்பாடு தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது என்று விமானப் படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.
- பனி மூட்டம் காரணமாக தாம் பயணிக்கும்பிரதேசம்தெளிவற்றுகாணப்படுவதாக இறுதியாக கட்டுப்பாட்டு நிலையத்தை தொடர்பு கொண்ட தலைமை விமானி வசந்த நிஹால் அபேவர்த்தன தெரிவித்துள்ளார். விமானப்படைத்தளபதி கொமாண்டர் கிகான் செனவிரத்னவே நேற்றுக் காலை இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போது இவ்வாறு தெரிவித்தார். இந்த உரையாடல் காலை 6.16 மணிக்கு இடம்பெற் றுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

### மணம் முடித்த 2 மாதங்களில் விமானி உயிரிழந்த பரிதாபம்



விபத்துக்குள்ளான விமானத்தைச் செலுத்திச் சென்ற தலைமை விமானி வசந்த நிஹால் அபேவர்த்தன இரு மாதங்களுக்கு முன்னர் தான் திருமண பந்தத்தில் இணைந்திருந்தார் என்று தெரிவிக்கப் படுகிறது.

கொழும்பு றோயல் கல்லூரியின் பழைய மாணவரான வசந்த நிஹால் அபேவர்த்தன குருநாகல் பிரதேசத்தைச் சேர்ந்தவர். இவர் 2239 பறப்புநேரத்தைக் கொண்ட விமானி. கிறீன் றேற்டட் செய்யப்பட்ட சிறப்பு விமானி ஆவார்.

இவர் விளையாட்டுத்துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத் கமகேவின் உறவினர் என்றும் தெரிவிக்கப் படுகிறது. (உ–10)



# தொடர்ச்சிகள்

## மாற்று

அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா.செந்தில்வேல் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

"ஜனாதிபதித் தேர்தல் முற்கூட்டியே நடத்தப்படுவதன் ஊடாக ஆயிரத்து 50 கோடி ரூபாவுக்கு மேல் மக்களது வரிப்பணம் வீணாக்கப்படுகின்றது. ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷ குடும்ப சர்வாதிகாரத்தை நிலைநிறுத்துவதற்காகவே தேர்தலை நடத்துகின்றார்" – என்றும் அவர் அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

"நாட்டு மக்கள் எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடிகளுக்கோ, தேசிய இனப்பிரச்சினைக்கோ இந்தத் தேர்தல் தீர்வைப் பெற்றுத் தரப்போவதில்லை. தரகு முதலாளித்துவ பேரினவாத ஆளும்வர்க்க சக்திகளுக்கு இடையிலான போட்டியாகவே இந்தத் தேர்தல் இடம்பெறுகின்றது.

கடந்த36வருட நிறைவேற்றுஅதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறைமையின் கீழ் நாட்டின் பொருளாதாரமானது தாராளமயம், தனியார்மயம், உலகமயமாதல் என்பனவற்றின் கீழேயே முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளது. இதனால் உள்நாட்டு தரகு முதலாளிகளும், அன்னிய பல்தேசிய நிறுவனங்களுமே வளம் பெற்று வந்துள்ளனர். அதேவேளை உழைக்கும் மக்களின் வாழ்க்கை நிலை மோசமடைந்துள்ளது.

பல்தேசிய நிறுவனங்களும், பெரு வணிக நிறுவனங்களும் மக்களின் உழைப்பையும் நாட்டின் வளங்களையும் சுரண்டிக் கொள்ளையிட்டு வருகின்றன.

இவற்றுக்கு நிறைவேற்று அதிகாரத்தில் இருந்தவர்கள் தொடர்ந்தும் துணை போயினர். இதன் தொடர்ச்சியாக ராஜபக்ஷ சகோதரர்கள் இந்திய, சீன, ஜப்பானிய மற்றும் அன்னிய நிறுவனங்களுடனும் வங்கிகளுடனும் இணைந்து அபிவிருத்தியின் பெயரால் நாட்டின் பொருளாதாரத்தை நாசப்படுத்தி ஊழலையும் முறைகேடுகளையும் ஜனநாயக மனித உரிமை மறுப்புக்களையும் இராணுவ பாசிச வழிகளில் முன்னெடுத்து வந்துள்ளனர்.

நாட்டின் தேசிய இனப்பிரச்சினையை போராக மாற்றி மூன்று லட்சம் வடக்கு – கிழக்கு மக்களைக் கொன்றொழித்தது. இந்த ஆளும் வர்க்க சக்திகள்தான் என்பதை மறந்து விடமுடியாது. "– என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

"தற்போதைய தேர்தலிலும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷவோ அல்லது பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிபாலவோ தேசிய இனப்பிரச்சினை பற்றியோ அதற்கான தீர்வு சம்பந்தமாகவோ எதனையும் முன்வைக்கத் தயாரகஇல்லை. இதன் மூலம் சிங்கள – பௌத்த பேரினவாதத்தின் பக்கம் அவர்கள் இருப்பதையே உறுதிப்படுத்துகின்றனர். ஆதலால் மாற்று அரசியல் விழிப்புணர்வு தொடர்பில் மக்கள் சிந்திக்க வேண்டும்"– என்றும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ந–5)

## ராணுவத்

அதில் 52ஆவது படைத் தலைமையகத்தை அமைத்துள்ளனர். அதை எதிர்த்தே குறித்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கில் எதிர் மனுதாரர்களாக பாதுகாப்பு அமைச்சின் செயலர், இராணுவத் தளபதி, யாழ்மாவட்டகட்டளைத்தளபதி, காணி ஆணையாளர், காணிசுவீகரிப்பாளர், நில அளவையாளர் ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

பொதுத் தேவைகளுக்காக தனியார் காணிகளைச் சுவீகரிக்க முடியும் என்ற அடிப்படையில் இந்தச் சுவீகரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. பொதுத் தேவைகளுக்காகக் காணிகளைச் சுவீகரிக்க முடியும் என்றபோதும், இராணுவத்துக்கு என்று தெரிவித்து தனியார் காணிகளைச் சுவீகரிக்க முடியாது என்று மனுதாரர்களால் குறிப்பிடப்பட்டுள்ளது.

சில மாதங்களுக்கு முன்னர் தாக்கல் செய்யப்பட்டிருந்த இந்தவழக்கை, பரிசீலித்த மேன்முறையீட்டு நீதிமன்றம் அதனை விசாரணைக்கு எடுத்துக் கொண்டுள்ளது. குறித்த வழக்கு நீதிபதிகள் விஜித் மலால்கொட மற்றும் டிலிப் நவாஸ் ஆகியோர் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு வந்தபோது, எதிர் மனுதாரர்களாகச் சுட்டப்பட்டவர்களுக்கு அழைப்பாணை அனுப்ப உத்தரவிடப்பட்டது. வழக்கு எதிர்வரும் பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

மனுதாரர்கள் சார்பில் சட்டத்தரணி சயந்தன் மற்றும் லூயி கணேசநாதன் ஆகியோரின் அனுசரணையில்சிரேஷ்ட சட்டத்தரணிஎம்.ஏ.சுமந்திரன் முன்னிலையாகி வாதம் செய்தார். (ந–4)

## ஆட்சி

இந்தக் கூட்டத்தில் ஜனாதிபதித் தேர்தல் குறித்து ஆராயப்பட்டது. ஜனவரி மாதம் நடக்கவுள்ள தேர்தலில் கூட்டமைப்பு மைத்திரியையா மஹிந்தவையா? ஆதரிக்கும் என்ற கடும் எதிர்பார்ப்பு நிலவி வரும் நிலையில், இந்தக் கூட்டம் மிக முக்கியமானதாக நோக்கப்பட்டது. தமிழ் மக்களுடன் தாம் நடத்திய சந்திப்புக்களில் கிடைத்த பெறுபேறுகள் குறித்துக் கூட்டத்தில் கலந்துகொண்ட மாகாண சபை உறுப்பினர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கருத்துக்களை முன்வைத்தனர். ஆட்சி மாற்றம் ஒன்றையே தாம் விரும்புகின்றனர் என்று தமிழ் மக்கள் தெரிவித்திருக்கிறார்கள் என்ற கருத்தே பெரும்பாலும் எல்லோராலும் முன்வைக்கப்பட்டது. எனினும், இந்த விடயம் தெற்கில் பெரும்தாக்கத்தைச் செலுத்தக்கூடும் என்பதால் கூட்டமைப்பின் தலைமை மிக நிதானமாக யோசித்து முடிவெடுத்து மக்களை வழிப்படுத்தவேண்டும் என்றும் நாடாளுமன்றஉறுப்பினர்களும் மாகாணசபைஉறுப்பினர்களும் வலியுறுத்தினர்.

அனைத்துத் தமிழ் மக்களும் தவறாது வாக்களிக்க வேண்டும் என்று கோருவது என்று மட்டுமே கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. தேர்தலுக்கு இன்னும் காலம் இருப்பதால் யாரை ஆதரிப்பது என்பது தொடர்பில் பொறுமையாகவே முடிவெடுக்கலாம் என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (உ–5)

## 25 ஆண்டுகளின்

இடத்துக்கு அழைத்து வரப்பட்டார். இவர் 25 ஆண்டுகளுக்கு முன்னர் கொழும்புக்கு தொழில் நிமித்தம் சென்றிருந்தபோது, அங்கு இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்றைத் தொடர்ந்து காணாமற் போயிருந்தார். அதன் பின்னர் அவர் தொடர்பான எந்தத் தகவல்களும் அவரது உறவினர்களுக்குக் கிடைக்கவில்லை. நாள்கள் செல்லச் செல்ல அவரைத் தேடுவதையும் அவர்கள் கைவிட்டு விட்டனர்.

இந்தநிலையில் அண்மையில் அம்பாந்தோட்டையில் உள்ள புனர்வாழ்வு நிலையத்தில் அவர் இருக்கின்றார் என்று கடிதம் மூலம் உறவினர்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அதன்பின்னரே வைரவநாதன் தற்போது உறவினர்களால் சொந்த இடத்துக்கு அழைத்து வரப்பட்டுள்ளார். (ந–86)

## நிறை

நடத்திய திடீர் பரிசோதனையில், குறித்த வர்த்தகரால் 400 கிராம் எடை கொண்ட பாண் விற்பனை செய்யப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டது. பாணின் சாதாரணமாக 450 கிராமாகக் காணப்பட வேண்டும்.

அதையடுத்து குறித்த வர்த்தகருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. அப்போது அவர் தன் மீதான குற்றச்சாட்டை ஒப்புக் கொண்டார். அதையடுத்து அவருக்கு அபராதம் விதிக்கப்பட்டது.

அதேவேளை, வர்த்தக நிலையத்தில் திகதி காலாவதியான பொருள்கள் விற்பனைக்கு வைத்திருந்த வர்த்தகருக்கும் நேற்று 9 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (ந–9)

Nation popular travels & tours
Nation Popular Travels & Tours
விசேட விலைக்கழிவுகள்
Only at Nation Travels
Colombo - Singapore 26 300 LKR Return
Colombo - London 45 500 LKR One way
Colombo - France 45 500 LKR One way
Colombo - German 43 500 LKR One way
Colombo - Maldives 34 500 LKR Return
Colombo - Oman 23 500 LKR Return
Christmas Offer
Special Fares
Hotlines
Colombo 011 4 651 199
Jaffna 021 4 920 920
Vavuniya 024 4 930 830

| Colombo | Jaffna | Vavuniya | Home Delivery |
|---|---|---|---|
| 16 1/2, E.S.Fernando Mw. Colombo-06 Tell 011 4 378 117 Fax 011 4 505 532 | 128, Brown road, Jaffna Tell 021 4 920 505 Fax 021 7 538 325 | 179, Railway Station Road, Vairavapuliyankulam. Tell 024 4 930 831 Fax 024 4 545 705 | 27, Lower St.Andrews Place Colombo-15 Tel 011 4 375 357 |

கலையின் உயரம் வாழ்வின் சிகரம்.
தொழில்முறைக் கலைஞராவதற்கு இதோ!
ACT4 நிறுவனத்தின் ஓர் அரிய வாய்ப்பு.
அரங்க ஆற்றுகைக் கலைக்கூடாக சமூக விருத்திக்குப் பங்களிக்க முனைப்புள்ள கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 19 வயது முதல் 35 வயதுக்குட்பட்ட ஆண், பெண் இருபாலாரும் இணைவதற்கு இடமுண்டு.
வேலைத்திட்டத்தின் அடைவு
☐ தேர்ச்சியுடைய வளவாளர்களின் பயிற்சி.
☐ நாடக அரங்கக் கலை நிகழ்வுகளில் பங்கேற்பு.
☐ கொடுப்பனவுகளுடன் கலைப்பணியாற்றுதல்.
☐ பயிற்றப்பட்ட உயர்நிலைக் கலைஞராக உருவாதல்.
பயிற்சிக்காலத்தில் உணவு, தங்குமிடம், போக்குவரத்து வசதிகள் உண்டு. தன்னம்பிக்கையும், ஆர்வமும் உடையவர்கள் இன்றே இணையலாம்.
15.12.2014 அன்று பி.ப. 2.00 மணியளவில் கிளிநொச்சி கருணா நிலையத்தில் தெரிவு இடம்பெறும். மட்டுப்படுத்தப்பட்ட அங்கத்தவர்களுக்கே இடமுண்டு.
உடனடியாகத் தொடர்புகொண்டு உறுதிப்படுத்திக் கொள்ளவும்.
தொ.பே.இல. : 0717871301 / 0777178145
Act4 THEATRE FOR CHANGE

விற்பனைக்கு
39 நாள் நிரம்பிய டோமன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 075 204 0446

வேலையாள் தேவை
யாழ். நகரில் பிரபல ஹோட்டல் ஒன்றுக்கு வேலையாள்கள் தேவை. உணவு பரிமாறுபவர்கள், சமையல் உதவியாளர் தேவை.
தொடர்பு கொள்ளவும் :
077 110 4442, 077 361 7645.

வேலைவாய்ப்புகள்
டுபாய் & மலேஷியா
மலேஷியா

| உத்தியோக வகை | எண்ணிக்கை | சம்பளம் (MR) | அரசினால் அங்கீகரிக்கப்பட்ட தொகை |
|---|---|---|---|
| பொது தொழிலாளர் (ஆண்) | 50 | 900+OT | Rs. 125,000 |

மேலதிக தகவல்கள்:
* 03 வருட ஒப்பந்தம்,
* வயதெல்லை 21 தொடக்கம் 35 வரை ஆண்கள்,
* 08 மணிநேர வேலை மற்றும் வாரத்தில் 6 நாட்கள்,
* உணவு வழங்கப்படாது
* நாளொன்றுக்கு 2 தொடக்கம் 3 மணித்தியாலம் வரை மேலதிக வேலை நேரம்
* மேலதிக சட்ட திட்டங்கள் மற்றும் விதிமுறைகள் மலேசிய சட்டத்திற்கு அமைவானது

இலவசம்: தங்குமிடம், மருத்துவம், ஒரு வழிப்பயணச்சீட்டு

டுபாய்

| உத்தியோக வகை | எண்ணிக்கை | சம்பளம் (DHS) | அரசினால் அங்கிகரிக்கப்பட்ட தொகை |
|---|---|---|---|
| சுத்திகரிப்பாளர்கள் | 150 | 800+OT | Rs. 68,000 |

மேலதிகத் தகவல்கள்:
* 02 வருட ஒப்பந்தம்
* உணவுக்கான கொடுப்பனவு 200 DHS
* 08 மணி நேர வேலை மற்றும் வாரத்தில் 6 நாட்கள்
* மேலதிக சட்டதிட்டங்கள் மற்றும் விதிமுறைகள் டுபாய் சட்டத்திற்கு அமைவானது

இலவசம்: தங்குமிடம், உணவு, மருத்துவம், இரு வழிப்பயணச்சீட்டு

SAINAS TRAVELS & TOURS
NO;19, Playground Road, Obesekarapura, Rajagiriya
Mobile: 0777311880, 0777588781
Email: stmazoorsl@yahoo.com, sainastravels@gmail.com

சிவமயம்
நியந்த்ரீ
வழங்கும் சதாபிஷேகம் கண்ட
சிவஸ்ரீ நா.ஞானசம்பந்தக் குருக்கள் தம்பதியரின்
கௌரவிப்பு விழாவும், நூல்களின் வெளியீடும்
காலம் : 14.12.2014 ஞாயிற்றுக்கிழமை, பி.ப 2.00 மணி
இடம் : நல்லூர் சிவன் கோவில் மண்டபம்
தலைமை : வாழ்நாட் பேராசிரியர் பிரம்மஸ்ரீ ப.கோபாலகிருஷ்ண ஐயர்
✣ ஸ்ரீ மஹாமாரி யந்திர பூஜா பத்ததி
✣ ஸ்ரீ மஹாமாரி யாகமண்டப பூஜா பத்ததி
ஆகிய நூல்களின் வெளியீடும், சதாபிஷேக விழாக்கண்ட மூத்த சிவாச்சாரியாரும், காரைநகர் மணற்காடு கும்பநாயகி முத்துமாரி அம்பாள் தேவஸ்தான பிரதம குருவுமான
சிவஸ்ரீ நா.ஞானசம்பந்தக் குருக்கள் தம்பதியரின்
கௌரவிப்பு விழாவும் நடைபெறவுள்ளது.
இந்த நிகழ்வுகளில் அனைவரும் பங்குகொண்டு சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்
சிவன்கோயில்,
நல்லூர், யாழ்ப்பாணம்.
நியந்த்ரீ
(C/18257)(10.6)



## கிரிக்கெட் சூதாட்டத்தை தடுக்க உயர் நிலைக் குழு

ஐ.பி.எல். விதிமுறைகளை மீறியவர்கள் மீதான தண்டனை குறித்து முடிவு செய்ய, உயர் நிலைக் குழு அமைக்கப்படலாம் என்று உச்ச நீதிமன்றம் கடந்த செவ்வாய்க்கிழமை தெரிவித்தது.
இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையில் ஸ்ரீநிவாசன் தொடர்ந்து செயற்படுவது குறித்த வழக்கை விசாரித்த, நீதிபதிகள் இப்ராஹிம் கலிபுல்லா, தாகுர் அடங்கிய அமர்வு கூறியதாவது:
ஐ.பி.எல். சூதாட்டம் குறித்து விசாரித்த முத்கல் குழு தாக்கல் செய்த அறிக்கையின் அடிப்படையில், சூதாட்டங்களில் ஈடுபட்டவர்களைத் தண்டிக்க வேண்டும். ஆனால் அதற்கான பொறுப்பை யாரிடம் ஒப்படைப்பது? சூதாட்டத்தில் ஈடுபட்டவர்களைத் தண்டிப்பதைக் காட்டிலும் கிரிக்கெட் நிர்வாகங்களை முறைப்படுத்துவதையே உச்ச நீதிமன்றம் விரும்புகிறது.
எனவே கிரிக்கெட் சூதாட்டங்களைத் தடுக்கும் நோக்கில் உயர் நிலைக் குழு அமைக்கப்படக்கூடும். அந்தக் குழுவில் ஓய்வு பெற்ற நீதிபதிகள் இடம்பெற வேண்டும். அந்த குழு, இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுக் குழுவில் ஸ்ரீநிவாசன் தொடர்ந்து இருக்க வேண்டுமா? அவருக்குச் சொந்தமான சென்னை சுப்பர் கிங்ஸ் அணியை தொடர்ந்து தக்க வைத்துக் கொள்ளலாமா? என்பது குறித்து ஆய்வு செய்யும்.
ஒரு அமைப்பு அல்லது நிர்வாகம் தனி நபருக்கு சாதகமாக அமையக் கூடாது என்பதை உறுதிப்படுத்த வேண்டியது அவசியம். சீனிவாசன் விவகாரத்தில் இந்த நடைமுறை இருக்கிறதா என்பதையும் உயர் நிலைக் குழு ஆய்வு செய்யும். இந்த விதிமுறைகளைத் திருத்துவதற்கான பரிந்துரை என்றே கருதலாம்.
அதே நேரத்தில், ஐ.பி.எல். விதிமுறைகளை மீறியவர்களுக்கான தண்டனை குறித்தும் இந்தக் குழு ஆய்வு செய்யலாம். நீதிமன்றத்தின் முக்கிய நோக்கம் கிரிக்கெட்டில் களங்கமில்லை என்பதை உறுதிப்படுத்துவதே. கிரிக்கெட் நியாயமாக நடப்பதாக இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுக் குழுவில் ஒரு விம்பத்தை உருவாக்குகிறது. ஆனால், இதில் மோசடி நடப்பதாக ஒட்டு மொத்த தேசமும் நினைக்கிறது. உடனடியாக இதில் திருத்தம் செய்ய வேண்டும் என்று நீதிபதிகள் தெரிவித்தனர். (த)

### தொடர்ச்சி

#### அச்சுறுத்தலால்

தொடர்ச்சியாக விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் காரணமாகவே அவர் நாட்டை விட்டு வெளியேறியுள்ளார் என்று கூறப்படுகின்றது.
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிலிருந்து பொது எதிரணிக்கு கடந்த 8 ஆம் திகதி, ஹிருணிகா கட்சி தாவியிருந்தார். அதனையடுத்து அவருக்கு வழங்கப்பட்டு வந்த பாதுகாப்பு விலக்கப்பட்டது. பாதுகாப்பு நீக்கப்பட்டு 24 மணி நேரத்தில், ஹிருணிகாவின் வீட்டின் மீது கழிவு ஒயில் தாக்குதல் நடத்தப்பட்டது.
இந்தப் பின்னணியில், ஹிருணிகா வெளிநாட்டுக்குப் பயணமாகியுள்ளார். இது தொடர்பில் கருத்து தெரிவித்த, முல்லேரியா பிரதேச சபைத் தலைவர் சோலங்க ஆராச்சி, "எனது தங்கை ஹிருணிகா எதிர்க் கட்சியில் இணைந்துகொண்டதால், அவருக்கு அரச தரப்பிலிருந்து பல இன்னல்களும் கஷ்டங்களும் ஏற்படுத்தப்படுகின்றன. அதனால் அவர் வெளிநாடு சென்றுள்ளார். ஆனால், சில நாள்களின் பின் நாடு திரும்புவார். மைத்திரிபால சிறிசேனவின் தேர்தல் பரப்புரையில் கலந்துகொள்வார்" – என்றும் கூறினார். (ற-5)

## கிண்ணம் யாருக்கு?

இலங்கை மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான 7 ஆட்டங்களைக் கொண்ட ஒரு நாள் தொடரின் ஆறாவது ஆட்டம் இன்று பல்லேகல மைதானத்தில் இடம்பெறவுள்ளது.
முதல் ஐந்து ஆட்டங்களும் நிறைவடைந்துள்ள நிலையில் இலங்கை அணி மூன்று ஆட்டங்களிலும் இங்கிலாந்து அணி இரண்டு ஆட்டங்களிலும் வெற்றி பெற்றுள்ளன். தொடரில் ஆதிக்கத்தை நிலைநாட்ட வேண்டுமாயின் கட்டாயம் இந்த ஆட்டத்தில் வெற்றிபெற வேண்டும் என்ற நிலையில் இங்கிலாந்தும் இந்த ஆட்டத்தில் வெற்றிபெற்றால் தொடரைக் கைப்பற்றிவிடலாம் என்ற நிலையில் இலங்கையும் களமிறங்குகின்றன.




பல்லேகல மைதானம் இங்கிலாந்துக்குக் கொழும்பை விட பரீட்சயமானதாலும் இறுதியாக பல்லேகலயில் இடம்பெற்ற ஐந்தாவது ஆட்டத்தில் இங்கிலாந்து வெற்றி பெற்றதனாலும் போட்டி மேலும் விறுவிறுப்படையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (த-ரி)



## கொல்கத்தா அரையிறுதிக்கு

இந்தியன் சுப்பர் லீக் உதைபந்தாட்டத்தில் கோவா அணிக்கு எதிரான போட்டியை 1:1 என சமநிலை செய்து, கொல்கத்தா அணி அரையிறுதிக்கு முன்னேறியது.
கொல்கத்தாவில் நடந்த ஐ.எஸ்.எல். உதைபந்துப் போட்டியில் கோவா, கொல்கத்தா அணிகள் மோதின.
ஆட்டத்தில் முதல் பாதியின் 27ஆவது நிமிடத்தில் கோவா அணியின் எட்கர் மார்சிலோனா (போர்த்துக்கல்) ஒரு கோல் அடிக்க, முதல் பாதியில் கோவா அணி 1:0 என முன்னிலை பெற்றது. இரண்டாவது பாதியில் முரட்டு ஆட்டம் ஆடிய கோவா அணியின் (67ஆவது நிமிடம்) புருனோ பின்கியரோ நேராக சிவப்பு அட்டை காட்டப்பட்டு வெளியேற்றப்பட்டார். இதனால், கோவா அணி 10 வீரர்களுடன் விளையாடியது. அடுத்த நிமிடமே (68) கொல்கத்தா அணிக்கு கிடைத்த நேரடி உதைப்பு வாய்ப்பை சிறப்பாகப் பயன்படுத்திய நட்சத்திர வீரர் பிக்ரு கோல் அடித்து அசத்தினார். கடைசி வரை இரு அணி வீரர்களாலும் கூடுதலாக கோல் அடிக்க முடியவில்லை. முடிவில் போட்டி 1:1 என சமநிலையானது இதன் மூலம் கொல்கத்தா அணி 19 புள்ளிகள் பெற்று அரையிறுதிக்கு முன்னேறியது. ஏற்கனவே சென்னை, கோவா, கேரளா உள்ளிட்ட மூன்று அணிகள் அரையிறுதிக்குள் நுழைந்துவிட்டன. (த-ரி)

## பதக்கத்தை வாங்க ஒப்புக்கொண்ட சரிதா




இன்ச்சியானில் நடந்த ஆசிய விளையாட்டுப் போட்டி பரிசளிப்பு விழாவில் வெண்கலப் பதக்கம் பெற மறுத்த குத்துச் சண்டை வீராங்கனை சரிதா தேவியிடம், இந்திய ஒலிம்பிக் சங்கப் பொதுச்செயலாளர் நேற்றுப்பதக்கத்தைவழங்கினார்.
தென்கொரியாவில் உள்ள இன்ச்சியான் நகரில் நடந்த ஆசிய விளையாட்டுப் போட்டியில் குத்துச் சண்டை மகளிர் 60 கிலோ எடைப் பிரிவு அரையிறுதிப் போட்டியில் தென்கொரிய வீராங்கனையிடம் இந்தியாவின் சரிதாதேவி தோல்வி கண்டார். நடுவர்களின் முடிவை ஏற்க மறுத்த சரிதாதேவி, பரிசளிப்பு விழாவின் போது பதக்கத்தை கழுத்தில் அணிவிக்க மறுத்து கையில் பெற்றுக் கொண்டதுடன், அதனை வெள்ளிப்பதக்கம் வென்ற தென்கொரிய வீராங்கனையின் கழுத்தில் அணிவித்துச் சர்ச்சையை ஏற்படுத்தினார்.
இதையடுத்து, சர்வதேச போட்டிகளில் பங்கேற்க சரிதாதேவிக்கு சர்வதேச குத்துச் சண்டை சம்மேளனம் தற்காலிகத் தடை விதித்துள்ளது. அவர் மீது கடும் நடவடிக்கை எடுப்பது குறித்து ஒழுங்கு நடவடிக்கை குழு விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. அவரது எளிய, கௌரமான பின்னணியைக் கருத்தில் கொண்டு தற்காலிகத் தடையை நீக்க வேண்டும் என மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் சர்வானந்த சோனாவால் சர்வதேச குத்துச் சண்டை சம்மேளனத்துக்குக் கடிதம் எழுதினார்.
நட்சத்திர வீரர் சச்சின் டெண்டுல்கரும் சரிதாதேவியின் தடையை நீக்கமாறு குரல் கொடுத்தார்.
இந்நிலையில், ஆசிய விளையாட்டுப்போட்டி பரிசளிப்பு விழாவின் போது சரிதாதேவி வாங்க மறுத்த வெண்கலப் பதக்கம் நேற்று அவரிடம் வழங்கப்பட்டது. இந்திய ஒலிம்பிக் சங்கத் தலைமையகத்தில் நடந்த நிகழ்ச்சியில், ஒலிம்பிக் சங்க பொதுச்செயலாளர் ராஜீவ் மேத்தா பதக்கத்தை வழங்க சரிதாதேவி பெற்றுக் கொண்டார். (த-ரி)



# மெஸ்ஸி அதிக கோல்

ஐரோப்பிய உதைபந்துத் தொடர்களில் அதிக கோல் அடித்தவர்கள் பட்டியலில் மெஸ்ஸி முதலிடம் பிடித்தார்.
ஐரோப்பிய உதைபந்து அணிகளுக்கு இடையிலான சம்பியன்ஸ் லீக் தொடர் நடக்கிறது.
இதன் லீக் போட்டியில், பார்சிலோனா அணி 3:1 என்ற கோல் கணக்கில் பி.எஸ்.ஜி. அணியை வென்றது.
பார்சிலோனா சார்பில் மெஸ்ஸி, நெய்மர், சுவாரஸ் தலா ஒரு கோல் அடித்தனர். பி.எஸ்.ஜி. அணிக்கு இப்ராஹிமோவிச் ஒரு கோல் அடித்து ஆறுதல் தந்தார்.
இந்தப் போட்டியில் ஒரு கோல் அடித்த பார்சி லோனா வீரர் மெஸ்ஸி, ஒட்டுமொத்த ஐரோப்பிய தொடர்களில் அதிக கோல் அடித்தவர்கள் பட்டியலில் முதலிடத்தை ரியல் மட்ரிட் அணியின் ஜாம்பவான் ராலுடன் பகிர்ந்து கொண்டார்.
இவர்கள் இருவரும் தலா 76 கோல் அடித்துள்ளனர். இந்தப் பட்டிய லின் மூன்றாவது இடத்தில் ரியல் மட்ரிட் அணியின் கிறிஸ்டியானோ றொனால்டோ (75 கோல்) உள்ளார்.
பார்சிலோனா அணிக்காக (375) அதிக கோல் அடித்தவர்கள் வரிசையிலும் முன்னிலை வகிக்கும் மெஸ்ஸி, சம்பியன்ஸ் லீக், (75 கோல்), லாலிகா (256) தொடர்களில் அதிக கோல் அடித்தவர்கள் பட்டியலும் முதலிடம் வகிக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (த)

## டோனியை முந்திய கோஹ்லி

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் சதம் விளாசிய கோஹ்லி இந்திய அணித் தலைவர் டோனியை முந்தியுள்ளார்.
சர்வதேச டெஸ்ட் அரங்கில் டோனி இதுவரை 88 போட்டிகளில் விளையாடி 6 சதம் அடித்துள்ளார். நேற்றைய ஆட்டத்தில் அசத்திய கோஹ்லி 30 டெஸ்டில் 7ஆவது சதத்தை அடித்து டோனியை ஓரங்கட்டியுள்ளார்.
மேலும், ஆஸ்திரேலியா சென்றுள்ள தற்போதைய இந்திய அணியில் கோஹ்லி தான் அதிக சதம் அடித்தவராக இருக்கிறார். இவருக்கு அடுத்த இடத்தில் புஜாரா (6 சதம்) இருக்கிறார். (த)



## கவாஸ்கரின் சாதனையை முறியடித்தார் கோஹ்லி

டோனி காயம் காரணமாக விளையாடாததால், முதல் முறையாக டெஸ்ட் போட்டியில் அணித் தலைவர் பொறுப்பேற்ற கோஹ்லி தனது முதல் இன்னிங்ஸிலேயே சதம் அடித்துள்ளார்.
முதல் தலைமை இன்னிங்ஸில் சதமடித்ததன் மூலம் விஜய் ஹசாரே, சுனில்–கவாஸ்கருக்குப் பிறகு முதல் இன்னிங்ஸிலேயே சதம் அடித்த இந்திய அணித் தலைவர் என்ற பெருமையை கோஹ்லி பெற்றுள்ளார். இதற்கு முன், விஜய் ஹசாரே, கவாஸ்கர் ஆகியோர் அணித் தலைவராக முதல் இன்னிங்ஸிலும், திலீப் வெங்சர்கார் அணித் தலைவர் முதல் டெஸ்டின் 2ஆவது இன்னிஸிலும் சதம் அடித்துள்ளனர்.
அடிலெய்ட் டெஸ்ட் சதத்தின் மூலம் தற்போதைய அணியில் இடம் பெற்றுள்ள இந்திய வீரர்களில் அதிக சதம் அடித்த வீரர் என்ற பெருமையையும் கோஹ்லி பெற்றுள்ளார்.
30 டெஸ்டில் இவர் 7 சதம் அடித்துள்ளார். டோனி, புஜாரா தலா 6 சதத்துடன் 2ஆவது இடத்தில் உள்ளனர். (த–ரி)



# சமநிலையை நோக்கி போட்டி



ஜாம்பவான்களின் தொடர் என்று வர்ணிக்கப்படும் இந்தியா மற்றும் ஆஸ்திரேலியா அணி களுக்கிடையிலான நான்கு ஆட்டங்களைக்கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவது இன் னிங்ஸ் ஆட்டம் தற்போது அடி லெய்ட்டில் நடைபெற்று வரு கின்றது.
நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஆஸ்திரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர் மானித்தது. இதன்படி ஆஸ்தி ரேலியாவின் நம்பிக்கை நட்சத் திரங்களான சிமித் (162), வோர் ணர் (145), கிளாக் (128) என சதமடித்து அசத்த ஆஸ்திரே லியா அணி தனது முதல் இன் னிங்ஸில் 7 இலக்குகள் இழப் புக்கு 517 ஓட்டங்களைப் பெற்றி ருந்த பொழுது ஆட்டத்தை இடை நிறுத்தியது.
பந்து வீச்சில் இந்திய அணி சார்பாக சமி, ஆரோன் மற்றும் கரன் சர்மா ஆகியோர் தலா 2 இலக்குகளையும் இசாந் சர்மா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.
பதிலுக்கு தமது முதல் இன் னிங்ஸை ஆரம்பித்த இந்திய அணியில் தவானைத் தவிர மற்றைய அனைவரும் சிறப் பாகச் செயற்பட்டு குறைந்த பட்சம் அரைச் சதத்தை பதிவு செய்ய நேற்றுமுன்தினம் மூன் றாம் நாள் ஆட்டநேர நிறைவில் இந்திய அணி 5 இலக்குகள் இழப்புக்கு 369 ஓட்டங்களைப் பெற்றது. நேற்றைய நான்காம் நாள் ஆட்டத்தில் சாகா 25 ஓட் டங்களுடனும் கரன் சர்மா 4 ஓட்டங்களுடனும் வெளியேற இசாந் சர்மா 0 என அடுத்தடுத்து வெளியேற இந்திய அணி தனது முதல் இன்னிங்ஸில் சகல இலக் குகளையும் இழந்து 444 ஓட் டங்களைப் பெற்றது. அதிகபட் சமாக கோஹ்லி 115 ஓட்டங்க ளைப் பெற்றார்.
பந்து வீச்சில் ஆஸ்திரேலியா சார்பாக மற்றும் லியோன் 5 இலக்குகளையும் ஜோன்சன் மற்றம் சிடில் ஆகியோர் தலா 2 இலக்குகளையும் ஹரீஸ் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.
73 ஓட்டங்கள் முன்னிலையு டன் பதிலுக்கு தமது இரண்டா வது இன்னிங்ஸை ஆரம்பித்த ஆஸ்திரேலிய அணிக்கு இதன் தொடக்க வீரரான றொயேர்ஸ் 21 ஓட்டங்களுடன் வெளியேறி ஏமாற்றம் கொடுத்தாலும் அடுத்து வந்த வட்சன் வோர்ண ருடன் இணைந்து சிறப்பான இணைப்பாட்டம் வழங்க அணி வலுவான நிலைக்குச் சென்றது. அணியின் ஓட்டம் 140 ஆக இருந்த வேளையில் வோர்ணர் 33 ஓட்டங்களுடன் வெளியே றினார். தொடர்ந்து வந்த கிளாக் 7 ஓட்டங்களுடன் வந்த வேகத் தில் வெளியேறினாலும் தொடர்ந்து வந்த சிமித் வோர் ணருடன் இணைந்து போராட அணியின் ஓட்டங்கள் கிடுகிடு வென அதிகரிக்கத் தொடங்கின. அணியின் ஓட்டம் 213 ஆக இருந்த போது (102) ஓட்டங் களுடன் வோர்ணர் வெளியே றினார். தொடர்ந்து வந்த வீரர் களும் சற்று பிரகாசிக்க நேற் றைய ஆட்ட நேர நிறைவில் ஆஸ் திரேலியா அணி 5 இலக்கு களை இழந்து 219 ஓட்டங்க ளைப் பெற்றுள்ளது.
பந்து வீச்சில் இந்தியா சார்பாக கரண் சர்மா 2 இலக்குகளையும் றொகிட், ஆரோன், சமி ஆகி யோர் தலா ஓர் இலக்கினையும் கைப்பற்றினர்.
ஆட்டத்தின் ஐந்தாம் நாள் இன்றாகும் ஆட்டம் இலங்கை நேரப்படி அதிகாலை 5 மணிக்கு ஆரம்பமாகும். (த–ரி)

## ஆனந்த் சமநிலை

லண்டன் செஸ் கிளாசிக் போட்டியில் ஆனந்த் மற்றும் கிராம்னிக் ஆகியோருக் கிடையே நடந்த முதல் சுற்று சமநிலையில் முடிவடைந்தது.
ஆனந்த், பேபியானோ, கருணா, நாகமுரா, கிராம்னிக், அடம்ஸ், அனிஷ் கிரி ஆகியோர் பங்குபெறும் லண்டன் செஸ் கிளாசிக் போட்டி லண்டனில் தற்போது நடைபெற்று வருகின்றது. இதில் நடைபெற்ற பிற ஆட்டங்களில், இங்கிலாந்தைச் சேர்ந்த ஆடம்ஸ் கருணாவைத் தோற்கடித்தார். நாகமுரா மற்றும் கிரி ஆகியோருக்கிடையிலான ஆட்டம் சமநிலை ஆனது. முதல் சுற்றின் முடிவில், அடம்ஸ் முன்னணியில் உள்ளார். (த–ரி)





# நாங்கள் வெல்வோம்

அடிலெய்ட் டெஸ்ட்டின் 5ஆம் நாளான நாளை ஆட்டத்தில் அனைத்து இந்திய விக்கெட்டுக்களையும் வீழ்த்த முயற்சி செய்வோம் என்று சத நாயகன் டேவிட் வோர்ணர் நம்பிக்கை தெரிவித்தார்.

நேற்றைய தினம் 102 ஓட்டங்களை எடுத்த டேவிட் வோர்ணர், டெஸ்ட் கிரிக்கெட்டில் இருமுறை ஒரே டெஸ்டில்இரண்டுசதங்களைஅடித்தபெருமையைப் பெற்றார். இதற்கு முன்னால் கிரேக் சப்பல் இருமுறை ஒரே டெஸ்ட் போட்டியில் 2 இன்னிங்ஸ்களிலும் சதம் கண்டது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் ஆட்டத்தின் வெற்றி குறித்து வோர்ணர் கூறும்போது நாளை (இன்று) புதிய பந்தில் இலக்குகளை விரைவாக வீழ்த்திப் பந்து பழசானவுடன் ரிவர்ஸ் ஸ்விங் மற்றும் நேதன் லயன் ஆகியோரை வைத்து 10 இலக்குகளையும் கைப்பற்றி வெற்றிபெற முயற்சி செய்வோம். கடந்த 2 ஆண்டுகளாக நேதன் லயன் ஒரு சிறந்த பந்து வீச்சாளராக மாறி வருகிறார். இப்போது அடிலெய்டில் முதல் இன்னிங்ஸிலேயே 5 விக்கெட்டுக்களை அவரால் கைப்பற்ற முடிகிறது. ஆகவே, நாளை (இன்று) வந்து அவர் ஏன் 10 விக்கெட்டுக்களைக் கைப்பற்ற உதவ முடியாது? ஆடுகளமும் பந்து வீச்சாளர்களுக்குச் சார்பாக மாறிவிட்டது எனவே நாளைய போட்டி எங்களுக்கு சார்பாக அமையலாம்– என்றார்.

வருண் ஆரோன் முறையற்ற பந்தில் ஆட்டமிழந்தது அதன் பிறகு எழுந்த சர்ச்சைகள் பற்றி அவர் கூறும்போது, மைதானத்தில் வெய்யில் 40 பாகை செல்சியஸ் அடித்துக் கொண்டிருந்தது. முடிவுகள் நாம் எதிர்பார்க்காத வகையில் செல்லும்போது கிரிக்கெட்டில் இப்படி நிகழ்வது சகஜம். வருண் ஆரோன் இன்று நன்றாக பந்து வீசினார். ஓட்டங்களைக் கட்டுப்படுத்தினார். நான் ஆட்டமிழப்பதை விரும்பாதவன். இந்த நிலையில் ஆட்டமிழந்ததும் அவர் எனக்கு சிலவற்றைச் சொன்னார். அது முறையற்ற பந்து என்றவுடன் நானும் சிலவற்றைச் சொன்னேன். நான் அப்படிச் செய்திருக்கக் கூடாது. நான் நாக்கைக் கட்டுப்படுத்தியிருக்க வேண்டும். இனி அவ்வாறு நடக்காமல் கட்டுப்படுத்த முடியுமா? என்பதை முயற்சி செய்யப் போகிறேன். வருண் ஆரோனுக்கு இலக்குகள் விழவேண்டும். இன்று அவர் வீசியதற்கு இலக்குகள் விழுவது அவசியம். ஆனால் திடீரென முறையற்ற பந்து என அறிவிப்பது துரதிஷ்டம்தான் என்றார் வோர்ணர். (த–ரி)

## இந்தியா-ஆஸ்திரேலியா ஆட்டத்தில் வாக்குவாதம்

அடிலெய்ட் டெஸ்ட் போட்டியின் நான்காம் நாள் ஆட்டம் சண்டைகள், வாக்குவாதங்களுடன் ஒரு வழியாக நிறைவுக்கு வந்தது. இரு அணி வீரர்களுக்கு இடையேயும் இருமுறை மைதானத்தில் கடும் வாக்குவாதங்கள் நடைபெற்றன. தேநீர் இடைவேளைக்குசற்றுமுன்னர் ஆட்டத்தின் 34ஆவது ஓவரை வீச வருண் ஆரோன் அழைக்கப்பட்டார். அப்போது டேவிட் வோர்ணர் அந்த ஓவரின் மூன்றாவது பந்தை அடிக்க முயன்று தோல்வி கண்டதால் பந்து நேரடியாக விக்கெட்டில் பட்டது. வருண் ஆரோன் ஆக்ரோசமாக அதனைக்கொண்டாடினார். வோர்ணரும்பவிலியன்நோக்கிநடையைக்கட்டினார். ஆனால் நடுவர் முறையற்ற பந்து என்ற சந்தேகத்தில் வோர்ணரை நிற்கச் சொன்னார். அது முறையற்ற பந்து என்று மீள் பரிசீலனை முறையில் தெரிந்தது. ஆடுகளத்துக்கு திரும்பிய வோர்ணர் 'கமோன் கமோன்' என்று வருண் ஆரோனை நோக்கி மீண்டும் மீண்டும் கத்திய படியே வந்தார். இந்தச் சம்பவத்துக்கு பின்னர் ஒரு பந்தை எதிர்கொண்ட பிறகும் 'கமோன் கமோன்' என்று மீண்டும் அரோனை வெறுப்பேற்றவே இது தவானுக்கு பிடிக்காமல் போக அவருக்கும் வோர்ணருக்கும் இடையே வாக்குவாதம் நடந்தது. வருண் ஆரோனும் இதில் இணைந்தார். மேலும் சில வீரர்களும் இணைய தலைவர் விராட் கோஹ்லி அனைவரையும் சமாதானம் செய்தார். அதன் பிறகு ரோஹித் சர்மா நாயகன் ஆனார். ரோஹித் சர்மா வீசிய ஒரு பந்தை சிமித் முன்னோக்கி வந்து அடிக்க முயன்றார். ஆனால் ரோஹித் பந்தை அவருக்குச் சிக்காமல் வீசினார். பந்து அவரைக் கடந்து சென்று விடும் என்ற அச்சத்தில் இயல்பாகக் காலை நீட்டி அந்தப் பந்தைத் துடுப்பால் தடுத்தார் சிமித். ஆனால் ரோஹித் அதை தேவை இல்லாமல் நடுவரிடம் முறையீடு செய்தார். பொறுமையைக் கடைபிடிக்க வேண்டிய ஸ்மித் ரோஹித் சர்மாவை நோக்கி ஏதோ கூற, ரோஹித் சர்மாவும் பதிலுக்கு ஏதோ இருமுறை கோபமாகப் பேச மீண்டும் கோஹ்லி, நடுவர்கள், ரோஹித் சர்மா, புஜாரா, வோர்ணர் ஆகியோரிடையே சில வார்த்தைகள் பறிமாறிக்கொள்ளப்பட்டன.

(த–ரி)

காணி விற்பனைக்கு

மருதனார்மடம் அம்பலவாணர் வீதியில் K.K.S வீதிக்கு சமீபமாக காணி விற்பனைக்குண்டு நிலப்பரப்பு 2.குழி 16 T.p : 077 671 4556

# மரண அறிவித்தல்



அன்னை மடியில்
24.12.1932

ஸ்ரீ வாராஹி அம்பாள் திருவடியில்
11.12.2014

'சின்ன மாம்பழம்'

**சுப்பையா நல்லையா**

(கொக்குவில் மேற்கு, ஸ்ரீ வாராஹி அம்பாள் ஆலய நிர்வாகஸ்தர், கொழும்பு, முன்னாள் வனபரிபாலன இலாகா லிகிதர், நுவரெலியா, சிலோன் புரூவரி லிமிடெட் மாவட்ட பிரதிநிதி)

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், 'வெண்மதி' ஆனைக்கோட்டையை வதிவிடமாகவும், கனடாவில் வாழ்ந்துவந்தவருமாகிய 'சின்ன மாம்பழம்' என அழைக்கப்படும் சுப்பையா நல்லையா 11.12.2014 வியாழக்கிழமை ஸ்ரீ வாராஹி அம்பாள் திருவடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா-நாகரட்ணம் தம்பதியரின் அன்புப் புதல்வரும், காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு-செல்லமணி தம்பதியரின் அன்பு மருமகனும், இந்திராணியின் அன்புக் கணவரும், டில்க்குஷா, இந்துஷா, ஸ்ரீஉஷா ஆகியோரின் பாசமிகு தந்தையும், விக்னேஸ்வரராஜா, அசோக்குமார், குருபரன் ஆகியோரின் அன்பு மாமனும், மாறன், மாசிலன், துவாரகி, வராகன், அபிராம், அஸ்வின் ஆகியோரின் பேரனும், காலஞ்சென்றவர்களான குமாரவேலு, இரட்ணசிங்கம் மற்றும் இராசமலர், இன்பமலர் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான சிவபாக்கியம், கிருஷ்ணபிள்ளை மற்றும் சுசான் (குஞ்சு), இராசரட்ணம், காலஞ்சென்ற பரமேஸ்வரன் மற்றும் வசந்தகுமாரி, தேவிகாராணி, கலாராணி ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற தவராசா மற்றும் பற்குணம் ஆகியோரின் அன்புச் சகலனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் Chapel Ridge Funeral Home, 8911 Woodbine Ave, Markham, Canada வில் இன்று (13.12.2014) சனிக்கிழமை மாலை 5.00 மணிமுதல் 9.00 மணிவரை பார்வைக்கு வைக்கப்பட்டு, நாளை (14.12.2014) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 முதல் 3.30 மணிவரை கிரியைகள் நடைபெற்று, பிற்பகல் 4.00 மணிக்கு Elgin Mills Cemetery, 1591 Elgin Mills Rd E, Richmond Hill, ON., Canada வில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(C/18256) (10.6)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 13.12.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.